98/2000

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

**மார்ச் 28, 2000, தொகுதி 91**

**எண் 1.**

Ⓒ

V2,11,31 P00
P0.41.1
2g../4

வெளியீடு 5-11-2000 Issued 5-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 28, 2000 – தொகுதி 91– எண் 1

**Tuesday the 28th March, 2000 – Volume 91 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

*விலை ரூ. 3.00*] **[Price Rs. 3.00**

**28-3-2000**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* இரங்கற் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 1 |
| *2.* *வினாக்கள்-விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-38 |
| *3.* தகவல் கோரல்— | |
| (அ) கடலூர் இரயில் பாதை குண்டுவெடிப்பு பற்றி | 39-40 |
| (ஆ) சென்னை மாநகராட்சி மன்றத்தில் வைப்பதற்கு முன் நிதிநிலை அறிக்கை நகல் காண்பித்ததாகக் கூறப்படுதல் | 40-41 |
| (இ) பேரவையில் உரையாற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கூடுதல் வாய்ப்பு | 42-49 |

பக்கங்கள்

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 50

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2000 — 55-56

5. அறிவிப்புகள்—

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள் 2000-2001, மொழிதல் (ஆ.செ.) — 50-51

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ.) — 55

6. முன்பண மானியக் கோரிக்கைகள், 2000-2001, வாக்கெடுப்பு— — 51-55

7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி

திரு. கே.ஆர். இராமசாமி — 56-67

*திரு. அ.லெ. சுப்பிரமணியன் — 67-73

*திரு. கே. தங்கமணி — 73-78

டாக்டர் ஆ. ஞானசேகரன் — 78-81

*திரு. சொ. கருப்பசாமி — 81-86

திரு. இரா. ஆவுடையப்பன் — 86-90

திரு. சி. வேலாயுதன் — 91-96,121

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் — 97-104


822774




பக்கங்கள்

7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி

*திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு — 104-107

திரு. ஏ. ராசேந்திரன் — 108-112

திரு. ப. மோகன் கந்தசாமி — 112-121

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— — 122-124

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | **முதலமைச்சர்** | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, வணிக வரிகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| 2. | **கல்வி அமைச்சர்** | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. | **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. | **வருவாய்த் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. | **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடை பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports, Commercial Taxes and Environmental Pollution Control.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transpsort, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Developement, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Sports and Youth Service Corps.** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Sports and Youth Service Corps.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. செளரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. சு. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல்., | .. துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்.சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கன்கவல்லி, டி.சி.பி., | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன் பி.எஸ்.சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ. பி.ஜி.எல்., | .. தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்., | .. தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன் திரு. சி. | .. அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சி.வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி இ. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

71. சண்முகம், திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்

72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆவா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

79 சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80 சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்

89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு .பி.என். .. ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி



130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை. திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு



176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178 மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180 மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி
202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திக்குளம்
203. ராசேந்திரன், திரு. ஏ. .. பேரூர்
204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
211. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
213. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
214. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
215. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
226. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
227. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
228. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
229. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
230. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
232. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
233. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
235. ஆன்டிமான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 15, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மார்ச் 28, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்*
*வகையறியார் வல்லதூஉம் இல்"*

அவையின் தன்மை அறியாமல் சொற்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அந்தச் சொற்களின் வகையும் தெரியாது; பேசும் திறமையும் கிடையாது.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ்.ஆர். ஆறுமுகம் அவர்கள் 21-3-2000 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.ஆர். ஆறுமுகம் அவர்கள் திருப்பூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள். இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 101, திரு. ஏ.வி.ஏ. நாசர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**101—**

### வணிகர் நல வாரியம்

***21234—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினராகத் தேவையான தகுதிகள் யாவை?

(ஆ) இதுவரை எத்தனை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைப் படிக்கின்றேன்.

(அ) தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு பின்வரும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன:

(1) தமிழ்நாடு வணிகவரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற அனைத்து வணிகர்களும் உறுப்பினராகலாம்.

(2) ஒரு நிறுவனம், அதன் பெயரிலேயே உறுப்பினராக இயலாது. ஆனால், அதன் உரிமையாளரோ அல்லது பங்குதாரர்களோ தங்கள் பெயரில் உறுப்பினராக முடியும்.

(3) பங்குதாரர்கள் ஒவ்வொருவரும் தனித் தனியாக ரூ. 150 செலுத்தி உறுப்பினராகலாம்.

(4) ஒரு நிறுவனத்தின் பங்குதாரர் மற்றொரு நிறுவனத்திலும், பங்குதாரராக இருந்தால், ஏதாவது ஒரு நிறுவனத்திலே ரூ. 150 செலுத்தினால் போதுமானது.

(5) வியாபாரத்தை இடையில் கைவிட்டவர்கள் வாரியத்தினால் வழங்கப்படும் சலுகைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.





(6) பஞ்சாயத்து, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகிய சட்டங்களின் கீழ் பதிவு பெற்று தொழில் வரி செலுத்தும் வணிகர்கள், தொழில் வரி செலுத்திய ஓராண்டிற்குப் பிறகு வாரியத்தில் உறுப்பினராகலாம்.

(7) உறுப்பினர்கள் கட்டணமாக ரூ. 150-க்கான கேட்புக் காசோலையினை சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலர்கள் மூலமாக வாரியத்திற்குச் செலுத்தி உறுப்பினராகலாம்.

(ஆ) வணிகர் நல வாரியத்தில் 29-2-2000 வரை 29,712 வணிகர்கள் ஆயுள் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர்கள் மீதும், நாட்டு மக்களின் மீதும், அக்கறை கொண்டுள்ள நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை நல்ல மனதுடைய அனைத்து மக்களும் பாராட்டுகின்ற இந்த நல்லவேளையிலே வணிகர் நல வாரியத்தால் எந்தவிதமான நலப் பணிகள் செய்யப்படுகின்றன? அந்தப் பணிகள் தொய்வில்லாமல் நடைபெறுகின்றனவா என்பது ஆய்வு செய்யப்படுகிறதா? தமிழகத்திலே பல இலட்சக்கணக்கான வணிகர்கள் இருக்கும்போது மிகக் குறைவான அளவிலே மட்டும் அந்த உறுப்பினர்கள் இருக்கிறார்களே, அதை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அண்மையில் கூட்டப்பட்ட வர்த்தகர்களுடைய பிரதிநிதிகளுடைய கூட்டத்தில் இந்தக் கருத்து எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மேலும், அதிக வணிகர்கள் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர வேண்டும். அதற்கான முயற்சிகளை வணிகப் பெருமக்கள், அதற்காக அமைக்கப்பட்டுள்ள சங்கங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. வணிகர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும், மேம்படுத்துவதற்கும் இந்த வாரியம் எல்லா வகையிலும் இப்போது உற்ற வழியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர் நல வாரியத்தினுடைய நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை? எந்த வகையிலே முன்னைக்காட்டிலும் இப்போது அந்த நன்மைகள் மக்களுக்குப் பயனுள்ள வகையிலே அமைந்துள்ளன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 28

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மக்கள் பயனடையக் கூடிய நன்மைகளுக்காக இந்த வாரியம் இல்லை. வணிகர்களுக்குப் பயன் தரக்கூடிய வகையிலே இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு விவரமாகப் பதில் சொல்ல வேண்டுமேயானால், இந்த வாரியத்திலே உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள வணிகர்களுக்குப் பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன:

இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை ஆகியவற்றுக்கு மருத்துவச் சான்றின்பேரில் வழங்கப்படும் நிதியுதவி ரூ. 25,000/-. மருத்துவமனையிலே சேரும்போது சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கே நேரடியாக வழங்கப்படுகிறது இந்த ரூ. 25,000.

வாரியத்தின் உறுப்பினர்களாக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப நல நிதியுதவி ரூ. 50,000/-. இத்தொகையிலிருந்து ரூ. 5,000/-, இறந்தவுடன் தகவல் தெரிவிக்கப்படுமேயானால் உடனடியாக வழங்கப்படும். மீதித் தொகை பிறகு வழங்கப்படும்.

நலிவுற்ற உறுப்பினர்களின் பெண் குழந்தைக்குத் திருமண உதவித் தொகையாக ரூ. 5,000/- வழங்கப்படுகிறது.

நலிவுற்ற உறுப்பினர்களுடைய குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க உதவி செய்யப்படுகின்றது. பாலிடெக்னிக், கலைக் கல்லூரி, அதற்குச் சமமான கல்விக்கு படிப்பு முடியும் வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000/- வீதம் வழங்கப்படுகிறது.

முதுநிலைப் படிப்பு, தொழிற் கல்வி, அதற்குச் சமமான கல்விக்கு படிப்பு முடியும் வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்க்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படுகிறது.

வியாபாரத்திலே தீ விபத்து மற்றும் கலவரங்கள் போன்றவற்றால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யும்பொருட்டு ரூ. 5,000/- வழங்கப்படுகிறது.

வணிகர்கள் எதிர்பாராத விபத்துகளிலே சிக்கி, ஒரு கை, ஒரு கால் மற்றும் ஒரு கண் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை இழக்க நேரிட்டால் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இரண்டு கைகள், இரண்டு கால்கள் மற்றும் இரு கண்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை இழந்த வணிகர்களுக்கு, செயலற்ற நிலையிலே உள்ளவர்களுக்கு ரூ. 20,000/- வழங்கப்படுகிறது.



2000 மார்ச் 28]

வியாபாரத்திலே நலிவுற்ற, இந்த வாரியத்தினுடைய உறுப்பினர்களுக்கு அவர்களிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து முன்னுரிமை அடிப்படையில் ஆண்டு ஒன்றுக்கு 10 நபர்களுக்கு பெட்டிக் கடை தயார் செய்து வழங்கப்படுகிறது. மதிப்பு ரூ. 10,000/-.

மாணவர்கள்; 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பிலே மாநில அளவிலே முதல் மதிப்பெண் பெறும் வாரிய உறுப்பினர்களுடைய மகன் அல்லது மகளுக்கு ரூ. 5,000/-, ரூ. 3,000/-, ரூ. 2,000/- என்று முறையே மாநிலம், மாவட்டம் என்கின்ற வகைகளிலே வழங்கப்படுகிறது.

விளையாட்டுப் போட்டியிலே கலந்துகொள்ளும் உறுப்பினர்களுடைய மகன் அல்லது மகளுக்குப் பின்வரும் பரிசுகள்: சர்வதேச அளவிலே நடைபெறும் போட்டிகளிலே பங்குபெற்று, அதிலே வெற்றி பெற்றால் ரூ. 25,000/-; அகில இந்திய அளவிலே நடைபெறும் போட்டிகளிலே பங்குபெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு ரூ. 10,000/-; மாநில அளவிலே நடைபெறும் போட்டிகளிலே பங்குபெற்று வெற்றி பெற்றவர்களுக்கு ரூ. 5,000/- மாவட்ட அளவிலே நடைபெறும் போட்டிகளிலே பங்குபெற்று வெற்றி பெற்றவர்களுக்கு ரூ. 3,000/-. இந்த வகையில் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆம்பூரிலே இது போன்ற வணிகர்கள் இரண்டு பேர்—குடும்பத் தலைவர்கள்—இறந்துவிட்ட பின்னால், அதற்குரிய அந்த ஈட்டுத் தொகை ரூ. 50,000/- அந்தக் குடும்பத்திற்கு ஓராண்டு ஆகியும் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா? இறந்துவிட்டால் மூன்று மாத காலத்திற்குள் அந்தப் பணத்தை இந்த வாரியத்தின் மூலமாகப் பட்டுவாடா செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர்கள் வணிக நல வாரியத்திலே உறுப்பினராக இருந்தால் நிச்சயமாக வழங்கப்பட வேண்டும்; வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதைப்பற்றி இந்தக் கேள்வியின் அடிப்படையிலே விசாரிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் வியாபாரம் செய்யக்கூடிய தமிழ்நாட்டு வணிகர்களின் நலன்

காப்பாற்றப்பட வேண்டிய அவசியத்தை வணிகர் நல வாரியம் உணர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாக தமிழ்நாட்டுக் கழிவுப் பஞ்சுகளை வியாபாரம் செய்யக்கூடிய வணிகர்கள், பிற மாநிலங்களில் இருக்கக் கூடிய சலுகைகள் இங்கே தங்களுக்கு வழங்கப்படாததால் பிற மாநிலங்களோடு போட்டியிட முடியாத ஒரு துயரம் ஏற்பட்டிருப்பதாக முறையீடு செய்திருக்கிறார்கள். குறிப்பாக 13 சதம் வரி இங்கே ஒட்டுமொத்தமாக விதிக்கப்படுகிறது. 4 + 8 + 1 என்ற முறையில் 13 சதம் விதிக்கப்பட்டுவிடுகிறது. ஆனால் பிற மாநிலங்களில் அது நான்கு சதவீதமாகத்தான் இருக்கிற காரணத்தால் பிற மாநிலங்களோடு போட்டியிட முடியாத ஒரு நெருக்கடி கழிவுப் பஞ்சை விற்கக்கூடிய வியாபாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதோடு, நியாயமான முறையீடாக இருக்கின்ற காரணத்தால் அந்த வணிகர்களின் நலன்களைக் காப்பாற்றுகின்ற முறையில் 4 சதவீதமாக இருக்கின்ற முறையில் மாற்றியமைக்க மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது, வரிப் பிரச்சினை பற்றிப் பேசும்போது வைக்கப்பட வேண்டிய கேள்வி. இதைப்பற்றி வணிகர் நல வாரியத்திலே விவாதிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வணிகர் நல வாரியத்திலே பெரும்பகுதியாக நகர்ப்புறங்களில் இருக்கின்றவர்கள்தான் உறுப்பினர்களாக ஆக்கப்படுகிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற சிறிய வணிகர்களையும்கூட இந்த வாரியத்தில் சேர்ப்பதற்குண்டான ஏற்பாடுகள் இருக்கின்றனவா? அவர்களுக்கென்று தனியாக ஓர் ஒதுக்கீடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வணிகர்களில் கிராமப்புறத்திலே உள்ளவர்கள், நகர்ப்புறத்திலே உள்ளவர்கள் என்ற பாகுபாடு எதுவும் கிடையாது. பங்குதாரர்கள் ஒவ்வொருவரும் அவர் கிராமத்திலே இருந்தாலும், நகரத்திலே இருந்தாலும் 150 ரூபாய் தனித் தனியாகச் செலுத்தி உறுப்பினராக ஆகலாம். இன்னும் கிராமத்திலே உள்ளவர்களுக்கு இந்தச் செய்தி எட்டி, தாங்களும் சேர வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு உருவாக்கப்படவில்லை என்று கருதுகின்றேன். அந்த ஆர்வத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான்



அண்மையிலே கூட்டப்பட்ட வணிகர்களுடைய கூட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 102, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**102—**

**பாடப் பிரிவுகள் தொடங்குதல்**

***24910—திரு. வை. சிவபுண்ணியம்:***

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசினர் இராஜகோபாலசுவாமி கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புப் பாடப் பிரிவுகள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்லூரி முதல்வரிடமிருந்து சில பாடப் பிரிவுகள் தொடங்க வேண்டும் என்ற வேண்டுகோள் பெறப்பட்டிருக்கிறது. அது கல்லூரிக் கல்வி இயக்குநரால் பரிசீலிக்கப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக, மன்னார்குடி அரசினர் இராஜகோபாலசுவாமி கலைக் கல்லூரியில் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், ஒரத்தநாடு ஆகிய பகுதிகளிலே இருக்கக் கூடிய மாணவ—மாணவிகள் கல்வி பயில்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அதிலும் குறிப்பாகச் சமூகப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பகுதியாக அந்தப் பகுதி இருக்கின்ற காரணத்தினாலேயும், முற்றிலும் கிராமப் பகுதிகளைச் சார்ந்திருக்கின்ற காரணத்தினாலேயும் மேற்கல்வி பயில்வதற்காக வெகு தொலைவிற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதைப் போக்கக் கூடிய வகையிலே மன்னார்குடி கல்லூரியிலே M.C.A., M.A. தமிழ், M.A. வரலாறு ஆகிய பட்ட மேற்படிப்புப் பாடப் பிரிவுகளையும்....

[2000 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி துணைத் தலைவர், பேசும்போது எழுதிப் படிக்கலாமா என்று கேட்டார். நான் அப்பொழுது பதில் சொன்னேன் "துணை வினாகூட எழுதிப் படிக்கிறார்கள்" என்று. ஆகையினால் நீங்கள் அந்தக் குற்றத்திற்கு ஆளாகாதீர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, எழுதிப் படிக்கவில்லை. பாடப் பிரிவை மட்டும்தான் பார்த்துப் படித்தேன். B.Sc. Microbiology பட்டப் பாடப் பிரிவையும் தொடங்க வேண்டும் என்ற கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, இவற்றைப் பரிசீலித்து இந்த ஆண்டுத் திட்டத்திலேயே அனுமதித்துத் தொடங்குவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே புதிய பாடப் பிரிவுகள், பட்ட மேற்படிப்புத் திட்டங்கள் தொடங்குவதற்கு, அந்தக் கல்லூரியிலே உள்ள ஆசிரியர்கள் ஏற்கெனவே எடுக்கிற பாடப் பிரிவுகளோடு இந்தப் பாடப் பிரிவு வகுப்புகளையும் எடுப்பதற்கான வாய்ப்பு இருந்தால்தான், இயலும் என்ற ஒரு கொள்கை அரசால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டுமானால் ஒரு பாடப் பிரிவு தொடங்கி, அரசு அனுமதி பெற்று அதற்கான ஓர் ஆசிரியரை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நியமிக்க ஓராண்டு காலம் ஆகிறது. முதலில் நிதிநிலை இடம் கொடுக்குமானால்கூட செயல்பாடு தடைபடுகிறது. ஆகவே, அந்த அந்தக் கல்லூரியிலே உள்ள வசதிகளை அடிப்படையாக வைத்து எந்தப் பாடப் பிரிவைத் தொடங்கினால் அங்கே உள்ளவர்களால் உடனடியாக மேற்படிப்புப் பாடம் நடத்த முடியுமோ அந்த அடிப்படையிலேதான் பாடங்களுக்கான அனுமதி வழங்குவது என்ற அடிப்படையில் கல்வித் துறை ஆய்வு செய்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**103—**

**பல்தொழில்நுட்பப் பயிலகம்**

***31500—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் ஆண்டிமடத்தில் பல்தொழில் நுட்பப் பயிலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2000 மார்ச் 28]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பெரம்பலூர் மாவட்டத்திலேயே அரசினுடைய தொழில் நுட்பக் கல்லூரிகளோ அல்லது பொறியியல் கல்லூரிகளோ எதுவுமே கிடையாது. அந்தப் பகுதி மிக மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதை அரசு நன்கு அறியும். அதிலும் குறிப்பாக அந்தப் பகுதிகளிலே தனியார்கள் சிமெண்ட் ஆலைகள் பலவற்றை வைத்திருக்கிறார்கள். அங்கே செடி வெட்டுவது, மண் வெட்டுவது போன்ற வேலைகளைத்தான் அந்தப் பகுதிவாழ் மக்களுக்குத் தருகிறார்களே தவிர தொழில் நுட்பம் வாய்ந்த பணிகளைத் தர மறுக்கிறார்கள். காரணம் கேட்டால் "அங்கே தொழில்நுட்பம் படித்தவர்கள் யாரும் உள்ளூர் மனிதர்கள் இல்லை. ஆகவே, பணிகள் தர இயலவில்லை" என்று மறுக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே வெறும் கலையியல் படிப்புகளைப் படித்துவிட்ட பல இளைஞர்கள் தீவிரவாதத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இது இன்னொரு பக்கம். ஆகவே, இந்த அவலங்களையெல்லாம் கருத்திலே கொண்டு அந்தப் பகுதிவாழ் மக்களுடைய மிகமிகப் பிற்படுத்தப்பட்டிருக்கிற நிலைமையையும் கருத்திலே கொண்டு அரசினுடைய தொழில்நுட்பக் கல்லூரியையோ அல்லது பொறியியல் கல்லூரியையோ ஆண்டிமடத்திலேயே தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட சூழ்நிலையிலே உள்ள பகுதி என்று சொன்னாலும்கூட ஒரு பல்தொழில் பயிலகம் தொடங்க வேண்டுமானால் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் முதலீடு தேவை. அதற்குப் பின்னர் ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 60, 70 இலட்சம் ரூபாய் ஊதியத்தைத் தந்தால் தவிர அந்தப் பல்தொழில் பயிலகம் நடைபெற முடியாது. எனவே, அரசினுடைய நிதிநிலை காரணமாக, விரும்புகிற அளவுக்குப் பல்தொழில் பயிலகம் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை. மற்றொன்று, இப்போது இருக்கிற பல்தொழில் பயிலகங்களில் நூற்றுக்கு 55, 60 இடங்களில்தான் மாணவர்கள் சேர்ந்து, நிறைவு பெறுகிறது. ஆகவே, ஏராளமான இடங்கள் படிப்பதற்கு வாய்ப்பிருக்கிறபோது, அரசின் நிதி

நெருக்கடியையும் கருத்திலே கொள்ளவேண்டிய அவசியமும் இருக்கிற காரணத்தால், பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதற்காக அப்படியொரு பயிலகத்தைத் தொடங்க தற்போது வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**104—**

**24 மணி நேர சுகாதார நிலையம்**

***21293—திரு. ஆ. செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி/ஊராட்சி ஒன்றியத் தலைமையிடத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர சுகாதார நிலையமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசாணை (நிலை) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-6-1996-ல் வட்டார அளவிலான முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களை 24 மணி நேரம் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டது. அதன்படி, திருநாவலூர் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இருவேல்பட்டு முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் 1997-98 ஆம் நிதியாண்டில் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு கூடுதல் பணியாளர்கள், கருவிகள் மற்றும் அவசரகால ஊர்தியுடன் செயல்படுகிறது. எனவே, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலேயே கூடுதலாக திருவெண்ணெய்நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர நிலையமாக மாற்றியமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்ினுடைய





மையத்தில் திருநாவலூர் பேரூராட்சி அமைந்துள்ளது. அங்கே, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டு வருகின்றது. அந்தச் சுற்றுவட்டாரத்திலுள்ள கிராம மக்களுக்கெல்லாம் மருத்துவ வசதி தேவைப்படுகிறது. அங்கே பேருந்து வசதிகளெல்லாம் சௌகரியமாக அமைந்திருக்கின்றன. திருவெண்ணெய்நல்லூர் வளர்ந்து வருகின்ற பேரூராட்சிப் பகுதி. அந்த மையப் பகுதியில் அந்த 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து இந்த ஆண்டே தொடங்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம் என்பது தாலுகா மருத்துவமனைக்கு அடுத்தபடியாக நோயாளிகள் அவசரமாகச் சிகிச்சை செய்து கொள்வதற்காகச் செய்யப்பட்டிருக்கின்ற ஓர் ஏற்பாடு. 1414 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்றன. ஒரு ஒன்றியத்திற்கு ஒரு 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம்தான் தொடங்க வேண்டுமென்று அரசு திட்டமிட்டு, அதிலேயே இப்போது 250, இருபத்திநான்கு மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் செயல்பட்டு வருகின்றன. எனவே, ஒரு ஒன்றியத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை இப்போதைக்கும் இல்லை, எப்போதைக்கும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**105—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***1325—திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை மற்றும் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. இத்திட்டங்களை முழுமையான செயல்பாட்டிற்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் அனைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் முழுமையான செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

முற்பகல் 9-50

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் சில காலமாக அவை சரிவர இயங்காமல் உள்ளன. அதிலே – மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதில் ஏறத்தாழ நான்கு திட்டங்கள் இப்போது செயல்படாமல் இருக்கின்றன. அவற்றை விரைவுபடுத்திச் செயல்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 1999 ஆம் வருடம் ஐந்தாவது மாதம் பதிவு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்போது கேட்ட நிலையில் அது இருந்தது உண்மை. அதற்குப் பிறகு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் காரணத்தினால்தான் தற்போது துடுப்பூரில் பயன்பெற வேண்டிய 25 கிராமங்களில் 24 கிராமங்கள்தான் பயன்பெற்று வருகின்றன. அதற்குப் பிறகு அனுமந்தகுடியில் 33 இடங்களில் 24 இடங்களுக்குத்தான் இப்போது தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இவை மறுபடியும் பரிசீலிக்கப்பட்டன. நீராதாரம் வற்றியதுதான் காரணமே தவிர, திட்டத்தின் பயனில் வேறெந்தக் கெடுதலும் இல்லை. நீராதாரத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவை முடிந்தவுடன் நிச்சயமாக இந்த விடுபட்ட கிராமங்களுக்கும் இணைத்துக் கொடுக்கப்படும் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் நீராதாரங்கள் போதிய அளவில் இருக்கின்றன. இப்போது நீராதாரம் இல்லாத காரணத்தால் இந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்று நான் கூறவில்லை. ஆனால், அங்கே இருக்கக்கூடிய மோட்டார்கள், மின்சார இணைப்பு போன்றவை





சரியில்லாத காரணத்தால்தான் அந்த மோட்டார்கள் ஒழுங்காக இயங்காமல் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவ்வாறு இருந்தால் அதைச் சரி செய்து தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையிலே இதை நான் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் வேறு வகையில் தெரிந்திருக்குமானால் முடியுமா என்ற கேள்விக்கே இதில் இடமில்லை. முடியும், செய்துதான் ஆகவேண்டும். ஆகையால் என்னென்ன பழுதுகள் இருக்கின்றன என்று இன்று மாலையே அவர் எழுதிக் கொடுப்பாரேயானால் நாளை காலையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** வினா எண் 106, திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**106—**

**காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***16542**—**திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டணம், சீருப்பள்ளி, புதுச்சத்திரம், சேந்தமங்கலம் ஆகிய கிராமங்களுக்குக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மூலம் சேந்தமங்கலம் தொகுதியில் மொத்தம் எத்தனை குக்கிராமங்கள் பயன்பெறுகின்றன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பட்டணம், சீருப்பள்ளி, புதுச்சத்திரம், சேந்தமங்கலம் காவிரிகூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நீராதாரம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டில் அதாவது 1999-2000-ல் திட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

[2000 மார்ச் 28

(ஆ) சேந்தமங்கலம் தொகுதியில் மொத்தம் 318 குடியிருப்புகள் பயன்பெறுவதற்கேற்ற வகையில் குடிநீர் அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு எழுதிக் கொடுக்கப்பட்ட கேள்வி இது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு திருச்செங்கோட்டில் சமத்துவபுரம் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் பட்டணம், சீருப்பள்ளி, புதுச்சத்திரம், சேந்தமங்கலம் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 61.4 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு அறிவித்து முதற்கட்டமாக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கித் தந்து இத்திட்டம் செயல்பட அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது தொகுதிக்குட்பட்ட புதுச்சத்திரம் ஒன்றியம், சேந்தமங்கலம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் ஆகிய ஒன்றியப் பகுதிகளில் வாழும் மக்கள் இத்திட்டத்தின் மூலமாகப் பயன் பெறுகிறார்கள். புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் வறட்சிக்கு இலக்கான பகுதி. கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவுகிறது. எனவே புதுச்சத்திரம் ஒன்றியத்திற்கு முன்னுரிமை வழங்கி, குடிநீர் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும் புதுச்சத்திரம் ஒன்றியத்தில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதி வைத்துப் படிக்காதீர்கள்.

**திரு. சி. சந்திரசேகரன்:** புதுச்சத்திரம் ஒன்றியத்தில் பெயர் விடுபட்டுள்ள பாப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பெயர் விடுபட்டுள்ள ஆயல்பட்டி ஊராட்சியை இந்தத் திட்டத்தில் சேர்க்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள கம்மாப்பட்டி, சந்திராம்பட்டி, கீரிப்பட்டி, கங்கவள்ளி, தொடலூர், வீராகனூர் ஆகிய 6 ஊரகப் பேரூராட்சிகளில் 296 ஊரகக் குடியிருப்புகளும் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை காளப்பநாய்க்கன்பட்டி ஆகிய 3 ஊரகப் பேரூராட்சிகளும் சேர்ந்து 858 ஊரக குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதிலே 9 ஊரகப் பேரூராட்சிகளை இணைத்து 1154 குடியிருப்புகளுக்குமாக ஏறத்தாழ உள்கட்ட முதல் பணிகளுக்கு 61 கோடியே 41 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டு அரசு உத்தரவு



2000 மார்ச் 28]

13-7-1998-லேயே வழங்கப்பட்டு, நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்தப் பணிகள் தொடங்கி நடைபெறுகின்றன. எவ்வளவு விரைவாக முடிக்கப்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாக அந்த முதற்கட்டப் பணிகளை முடிக்க வேண்டுமென்றும், அவை முடியும் தருவாயில் இரண்டாவது கட்டப் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் அரசு அவர்களுக்கு அறிவித்திருக்கிறது.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**107—**

**பப்பாளி உற்பத்தி**

***30362—திரு. ஜி.கே. மணி:***

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பப்பாளி உற்பத்தியைப் பெருக்கும் வகையில் மானியம் வழங்கி விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வெப்ப, வறண்ட மற்றும் குளிர்ப்பகுதிப் பழங்கள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் பழப் பயிர்கள் சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி இருக்கையில் இல்லை. அடுத்து வினா எண். 108, திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 28

108—

**பொதுப் பணித் துறை ஊழியர்கள்**

***7222*—திரு. ச. புரட்சிமணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறையில் பணியாற்றும் என்.எம்.ஆர். எனப்படும் தற்காலிக ஊழியர்களுக்கு வருகைப் பதிவேடுகள், சம்பளப் பட்டியல்கள் இல்லாததால் தவறுகள் நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொதுப் பணித் துறையில் தினக்கூலிப் பணியாளர்கள் பணிக்கு வருவதற்குச் சான்றாக, தினக்கூலிப் பணியாளர்கள் பட்டியலில் சம்பந்தப்பட்ட இளம் பொறியாளர்கள் அல்லது உதவிப் பொறியாளர்கள் குறிப்பார்கள். அந்தப் பட்டியல், சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர்களால் சோதித்துச் சரிபார்க்கப்பட்டுக் கையொப்பம் இடப்படுகிறது. பின்பற்றப்படும் இந்த நடைமுறையில் தவறுகள் ஏதும் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

அடுத்து, வினா எண் 109, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

109—

**பேருந்தை நிறுத்துதல்**

***6202*—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, திருமங்கலம், குடியிருப்புப் பகுதியில் ஒரு பேருந்து நிறுத்துமிடம் இருந்தும், தாம்பரம்—ஆவடி மற்றும்



2000 மார்ச் 28]

கோயம்பேடு அங்காடியிலிருந்து அவ்வழியாக வரும் எந்தப் பேருந்தையும் அவ்விடத்தில் நிறுத்தாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம் தொகுதி, திருமங்கலத்தில் உள்ள மத்தியப் பொதுப் பணித் துறை குடியிருப்பு வழியாக இயக்கப்படும் பேருந்துகள் 115பி, 170ஏ, பிபி 70, 70 (சொகுசுப் பேருந்து), 114 (சொகுசுப் பேருந்து) ஆகிய வழித்தடப் பேருந்துகளைத் தவிர அதன் வழியே இயக்கப்படும் அனைத்து வழித்தடப் பேருந்துகளும் மத்திய பொதுப் பணித் துறை குடியிருப்பு நிறுத்தத்தில் நின்று செல்கின்றன. மேற்கண்ட வழித்தடங்கள் குறுகிய நேரத்தில் நீண்ட தூரம் இயக்கப்பட்டு வரும் வழித்தடங்களாகும். அப்பேருந்துகளுக்குக் கூடுதல் பேருந்து நிறுத்தம் கொடுக்கப்படுமேயானால் பயண நேரம் அதிகரித்து பயண நடைகள் குறைய வாய்ப்புள்ளதால் அவற்றிற்கு அங்கே பேருந்து நிறுத்தம் கொடுக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் குடியிருப்புப் பகுதியில் 121டி, டி70 போன்ற பஸ்கள்தான் நிற்கின்றன. வெகுதூரம் செல்கின்ற பஸ்கள் நிற்கின்றன. கோயம்பேட்டிலேயிருந்து வருகிற பஸ்கள் நிற்பது கிடையாது. இப்போது பஸ் கட்டணம் அதிகமாக இருக்கிறது. அரசின் சிக்கன நடவடிக்கையின் காரணமாக 25 பர்சன்ட், 30 பர்சன்ட் பஸ்களை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். சென்ற ஆட்சிக் காலத்திலே சென்னையிலே 1,500 பஸ்கள் ஓடின. இப்போது 900 பஸ்கள்தான் ஓடுகின்றன. பஸ்களினுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதினாலேதான் சில இடங்களுக்கு இவர்களால் பஸ் விடமுடியாமல் போய்விடுகிறது. ஆகவே, பஸ்களினுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருமங்கலம் குடியிருப்புப் பகுதியில் அந்த இரண்டு வழித்தடப் பஸ்கள்தான் நிற்கின்றன. அந்தப் பகுதியின் வழியாகப் போகக் கூடிய எல்லா பஸ்களையும் அந்த இடத்தில் பேருந்து நிறுத்துமிடம் என்று போடப்பட்டிருக்கிறது. அங்கே நிறுத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தவறான செய்தியைச்

சொல்லியிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் இப்போது 2,200-க்கு மேற்பட்ட பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகுதான் நெருக்கடி நேரங்களிலேகூடக் கூடுதலாக 100 பேருந்துகள் தனியாக விடப்பட்டிருக்கின்றன. பல்வேறு வழித்தடங்களிலேயும் பல புதிய பேருந்துகள் இயக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த வழித்தடத்தைப் பொறுத்தவரையில் அங்கே 22 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 61E, 62D, 62A, D70, 58, 70, 70B, L70, 71F, 121A, 121B, 170C, 170 போன்ற 22 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பேருந்தும் குறைந்தபட்சம் ஆறிலேயிருந்து ஏழு தனி நடைகள் சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே, நூற்றுக்கும் மேற்பட்ட நடைகள் சென்று கொண்டிருக்கின்ற அந்தப் பேருந்துகள் எல்லாம் அங்கே நின்றுதான் செல்கின்றன. குறிப்பாக P.P. Service பேருந்துகளும், சொகுசுப் பேருந்துகளும் மட்டுமே அங்கே நிற்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு பகுதி மக்கள்தொகை நிறைந்த பகுதியாக இருக்கிறது. அங்கே தினமும் குறைந்தபட்சம் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு வணிகர்கள் வந்து செல்கின்றார்கள். ஓடுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை போதாத காரணத்தினால் அங்கே ஆட்டோக்களின் நெரிசல் அதிகமாகி, போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே, நிறைய பேருந்துகளை விட வேண்டும். புதிய வழித்தடங்களை அங்கேயிருந்து ஆரம்பித்து, சென்ட்ரல் சர்வீஸ் மாதிரி— கோயம்பேடு மார்க்கெட்டிலேயிருந்து ஆரம்பித்து திருமங்கலம் பகுதி வரையிலும், அங்கேயிருந்து முகப்பேர் (கிழக்கு) வரையிலும், — விட்டால், அங்கே போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கலாம். அங்குள்ள பயணிகளும் பலன் பெறுவார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு மார்க்கெட்டைப் பொறுத்தவரையில், அங்கேயிருக்கிற வணிகர்களுக்காக அத்தனை பேருந்துகளும் விடப்பட்டிருக்கின்றன. மேலும், பேருந்துகள் தேவைப்படுமானால் நிச்சயம் இந்த அரசு ஆவன செய்யும். அங்கே புதிய பேருந்து நிலையமும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில் அங்கே அதிகமான பேருந்துகள் வருங்காலத்திலே வருவதற்கு மேலும் வாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, College Day, Sports Day என்றுதான் மாணவர்கள் கொண்டாடுவார்கள். ஆனால், சென்னையில் மட்டும் Bus Day என்று கொண்டாடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதில் கலந்துகொள்கிறார்கள். போக்குவரத்துக்கு மாணவர்களிடம் ஏதாவது வசூல் செய்யப்படுகிறதா? இன்றைக்கு Hindu பத்திரிகையிலே இது எவ்வளவு இடைஞ்சலாக இருக்கிறது தெரியுமா? இன்றைக்கு Hindu பத்திரிகையிலே......

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினா அல்ல. மூல வினா திருமங்கலம் குடியிருப்பில் பேருந்து நிறுத்துவது பற்றியது. இது துணை வினா அல்ல (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது.

வினா எண் 110, திரு. கோ. சண்முகம், (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது. இது துணை வினா அல்ல. (குறுக்கீடு) ஆமாம். ஆமாம். நான்தான் சென்சார் பண்ணுகிறேன். அதற்குத்தான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** விதிமுறைப்படி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இது மூலக் கேள்விக்கான துணை வினா அல்ல. (குறுக்கீடு) நான் விதிமுறைப்படி கொடுக்க முடியாது. முதலில் உங்களை உட்காரச் சொல்கிறேன்.

வினா எண் 110, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**110—**

**பாண்டிச்சேரிக்குப் பேருந்து**

*31457—**திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து பாண்டிச்சேரிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடம் ஓர் அண்டை மாநில வழித்தடமாகும். அண்டை மாநில வழித்தட ஒப்பந்தத்தின்போது பேசி முடிவு செய்யப்பட வேண்டும். எனவே, தற்போது பேருந்து இயக்க இயலாது.

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனைக்கு வியாதியஸ்தர்கள் நேரடியாகச் செல்ல போக்குவரத்து வசதி இல்லை. இரண்டு மூன்று வழித்தடங்கள் மாறித்தான் செல்ல வேண்டும். திருவண்ணாமலை, விழுப்புரம் வழியாகத்தான் பாண்டிச்சேரி செல்ல வேண்டும். எனவே, பாண்டிச்சேரிக்கு நேரடியாகப் பேருந்து விட ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊரிலேயிருந்தும் பாண்டிச்சேரிக்கு இது போன்று புதிய வழித்தடங்கள் விட வேண்டும் என்று சொன்னால், பேருந்தின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலாது. திருப்பத்தூரிலேயிருந்து மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், புதுவைக்குச் செல்வதைவிட பக்கத்திலேயே வேலூர் இருக்கிறது. பாண்டிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் வேலூர் வந்து செல்லலாம். அதேபோல், திருவண்ணாமலைக்கு வந்தால் அங்கேயிருந்து நிறைய பேருந்துகள் புதுவைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நேரடியாக திருப்பத்தூரிலிருந்து பாண்டிக்குப் பேருந்துகள் இயக்குகின்ற சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 111, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**111—**

### பாலம்-சாலை இணைப்பு

***14248—திரு மு. அப்பாவு:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருநெல்வேலி—தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை எண் 7ஏ-ல் 13/8 கிலோ மீட்டரில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படாததால் தேசிய நெடுஞ்சாலை 7-ஏ-யுடன் இணைக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜிதப் பணிகள் முற்றிலும் முடிவடைந்த பிறகு அணுகுசாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். நில ஆர்ஜிதப் பணி விரைவில் முடிவடையும்.

**திரு மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தப் பணி முடிந்துவிடுவதோடு, பாளையத்திலிருந்து திருநெல்வேலி பொறியியல் கல்லூரி வரையில் வருகின்ற புறவழிச் சாலைக்கான நில ஆர்ஜிதமும், அதேபோன்று நாகர்கோவில் கன்னியாகுமரிக்கு இடையே இருக்கின்ற சுசீந்திரம் பாலம் கட்டுவதற்கான நில ஆர்ஜிதமும், நாகர்கோவிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில் இருக்கிற குழித்துறை பாலத்திற்குமான நில ஆர்ஜிதமும் உடனடியாக செய்து முடிக்கப்படும் என்று இங்கே ஓராண்டுக்கு முன்பு சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். அதற்கு ஓராண்டுக்கு முன்னால் நெல்லையில் நடைபெற்ற Review meeting-லும் இதற்கு உறுதி அளித்தார்கள். ஏன் இவ்வளவு காலதாமதம் என்று எனக்குக் கேட்கத் தோன்றுகிறது. கொடுமுடியாறு அணை கட்டுவதற்கான நில ஆர்ஜிதத்திற்கு நீண்டகாலம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஹூண்டாய் கம்பெனியை எடுத்துக் கொண்டால் மூன்று மாத காலத்திற்குள் நில ஆர்ஜிதம் செய்து முடித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த ஹூண்டாய் கம்பெனிக்கு எந்த விதிமுறையில் நில ஆர்ஜிதம் செய்தார்களோ, அதே அடிப்படையில் இந்தப் பாலங்கள் கட்டுவதற்கும், புறவழிச் சாலை அமைப்பதற்கும் விரைவிலேயே நில ஆர்ஜிதம் செய்யும் முறையைப் பயன்படுத்துவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அவருடைய மாவட்டத்திலே

[2000 மார்ச் 28

இருக்கக்கூடிய எல்லாத் திட்டங்களுக்கும் விளக்கம் கேட்டு துணைக் கேள்வி கேட்டிருக்கிறார். இந்த அணுகுசாலையைப் பொறுத்தவரையிலும், இது தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கிற ஒரு பாலமாகும். இது 1983-லே கட்டப்பட்டிருந்தாலும், அதற்குப் பிறகு அதற்கான நில ஆர்ஜிதம் செய்வதற்கான முயற்சிகள் கடந்த கால ஆட்சியிலே செய்யப்படவில்லை. இதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு, நானே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டேன். நான்கு கிராமங்களுடைய நிலங்கள் அதிலே வருகின்றன. இரண்டு கிராமங்களுடைய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அதற்குரிய அவார்டு வெளியிடப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டு கிராமங்களில் உள்ள நிலங்கள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. நிலம் கையகப்படுத்துவதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். இங்கே கேள்வி போடுவதைவிட மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்தப் பகுதியிலே உள்ள மக்களைச் சந்தித்து நிலத்தை விட்டுக் கொடுக்கச் சொல்லலாம். அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே பேசலாம். அதிகாரிகளிடத்திலே உரையாடலாம். அந்த முயற்சியிலேயும் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஈடுபட்டால் நன்றாக இருக்கும். இன்னும் விரைவிலே இந்த நிலம் கையகப்படுத்தும் பணி முடிக்கப்படும்; அணுகுசாலை அமைக்கப்படும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்கிறேன். நெல்லையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்துவிட்டது என்று ஒரு வாரத்திற்கு முன்பேகூடச் சொன்னேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 112, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**112—**

**இருவழிச் சாலை**

***29608*—திரு மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, நத்தக்காடையூர்-உத்தமபாளையம் சாலையை (கி.மீ. 7/8 முதல் 15/8 வரை 9 அடி அகலச் சாலையை) இருவழிச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2000 மார்ச் 28]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், நத்தக்காடையூர்-உத்தமபாளையம் சாலை குறுகிய சாலையாக இருந்து, அதை அகலப்படுத்தவேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயம் இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அது ஒரு வருந்தத்தக்க செய்தியாக அமைந்திருக்கிறது. இது மிக முக்கிய சாலைகளான நாகப்பட்டினம்-கடலூர் தேசிய நெடுஞ்சாலையையும் அதைப்போல காங்கேயம் முதல் கொடுமுடி வரையுள்ள மாவட்ட முக்கியச் சாலையையும் இணைக்கக்கூடிய முக்கியமான சாலையாகும். அப்பகுதி விவசாயம் நிறைந்த பகுதி. அங்கே காய்கறிகளும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களெல்லாம் எழுதிப் படித்தால் என்ன அர்த்தம்? பேப்பரைக் கீழே வைத்துவிட்டு கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அது விவசாயம் நிறைந்த பகுதி ஆகும். அங்கே உற்பத்தியாகக்கூடிய விவசாயப் பொருட்களையும் மற்றும் விசைத்தறித் தொழில் சார்ந்த, அந்தப் பகுதியிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கும், பயன்படுகிற சாலையாக இருக்கிறது. அது மிகக் குறுகிய சாலையாக இருக்கிறது. நான்கு சக்கர வாகனங்கள் வருகின்ற நேரத்தில், எதிர்த் திசையில் இரண்டு சக்கர வாகனங்களில் செல்கின்றவர்கள் அவற்றுக்கு வழிவிட்டு சாலையின் ஓரத்தில் இறங்கினால் அங்கேயுள்ள சரிவுகளில் அந்த வாகனங்கள் விழுந்து விபத்துக்குள்ளாகின்ற சூழ்நிலையெல்லாம் அங்கே ஏற்படுகின்றது. அதனால், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், இதைக் கருணையுடன் பரிசீலித்து அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதிலே உண்மை இருக்கிறது. பொதுவாக, ஈரோடு, கோவை மாவட்டங்களில் உள்ள இதர மாவட்டச் சாலைகள்கூட இருவழிச் சாலைகளாகத்தான் இருக்கின்றன. இந்த ஒரு சாலை மட்டும் இருவழிச் சாலையாகவும் இல்லை,

[2000 மார்ச் 28

இடைநிலைச் சாலையாகவும் இல்லை என்பது உண்மைதான். இதை அகலப்படுத்துவதற்கு உடனடியாகத் தேவைப்படுவது ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய். இதர மாவட்டச் சாலை என்ற பிரிவில் இது வருகின்ற காரணத்தால், இந்தச் சாலையை இப்போது இருக்கின்ற அளவுக்கே உறுதிப்படுத்துகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் நிதி ஆதாரத்திற்கேற்றவாறு அதை இடைநிலைச் சாலையாக மாற்றுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**113—**

### குளத்திற்குச் சுற்றுச் சுவர்

***28001*—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோயிலின் குளத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்கும் பணிக்காக ரூ.3,15,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டு, திருக்குளத்தின் தென்புற மற்றும் கிழக்குப்புறச் சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போது வடக்குப் பக்கச் சுற்றுச் சுவர் கட்டும் பணி உபயத் திருப்பணியாக நடைபெற்று வருகிறது. மேற்குப்புறச் சுற்றுச் சுவர் கட்டும் பணியினை, உபயதாரர் மூலம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் புதிது புதிதாகக் குடியிருப்புகள் தோன்றி இப்போது ஏறத்தாழ 5000 குடியிருப்புகளுக்கு மேல் வந்திருக்கின்றன. இரவு நேரங்களில் அங்கே இருக்கிற சிறுவர்கள் அந்த இடத்தைத் தவறான



2000 மார்ச் 28]

வழிகளில் பயன்படுத்துகிறார்கள். இதுபோன்ற வேலைகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செய்துமுடிக்க வேண்டும். பழைய காலங்களில் ஒரு கோயிலில் குளம் இருக்கிறதென்றால், அந்தக் கோயிலின் குளத்து நீரை குடிநீராக மக்கள் பயன்படுத்தி வந்தனர். ஆனால், இப்போது காலைக்கடன்களைக் கழிப்பதற்குச் சென்று அந்த குளத்து நீரை அசுத்தம் செய்வதாக எனக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. வளசரவாக்கம் பகுதியில் கூட main road-ல் இருக்கிற குளத்தை, அங்கே இருக்கின்ற நகர்மன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கேயுள்ள பொதுமக்களை வைத்துக்கொண்டு சுத்தப்படுத்தி, அந்தத் தண்ணீரைக் குடிதண்ணீராக உள்ளூர் மக்கள் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதுபோன்ற ஒரு நிலைக்கு உதவுகிற வகையில், இதுபோன்ற குளங்களில் எல்லாம் சுற்றுச் சுவர் அமைத்து எந்தவிதமான மாசும் ஏற்படாதவாறும், குளத்தில் முகம் கழுவுதல், குளித்தல் போன்றவற்றைச் செய்து அசுத்தப்படுத்துவதைத் தவிர்க்கவும், அமைச்சர் அவர்களும் அறநிலையத் துறையினரும் முன்வந்து குளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா அவருடைய பகுதியில் இருக்கிற இந்தக் கோவில் சுற்றுச் சுவர் தொடர்பானது. அதனுடைய பணிகள் கிட்டத்தட்ட முடியும் தருவாயில் இருக்கின்றன என்பது விடை. "குளங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும், அதற்கு அரசு ஆவன செய்யுமா" என்று நம்முடைய உறுப்பினர் கேட்கிறார். தமிழ்நாட்டில் இருக்கின்ற குளங்கள் கோவில் ஊருணிகள் என்கின்ற பெயரில் ஊர் உண்பதற்காக அதாவது குடிநீருக்காகத்தான் பயன்படுத்தப்படும் என்பது அந்த சொல்லிலேயே இருக்கிறது. பெரும்பாலனவர்கள் கோவிலின் மீது கொண்ட மதிப்பின் காரணமாக அந்த ஊருணியைத் தூய்மையாகவே பேணி வருகிறார்கள். குறிப்பாக, செட்டிநாட்டுப் பகுதியில் பார்த்தால், அந்த ஊருணிகளுக்கு எந்த அளவிற்குச் சுற்றுச் சுவர்கள், படித்துறைகள் எல்லாம் அமைக்கப்பட்டு கருங்கல்லினாலே நீண்ட காலமாகச் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். எனவே ஊருணி என்கின்ற உணர்வைப் பொதுமக்களும் பெற வேண்டும். அதற்கு அரசும் தக்க பாதுகாப்போடு துணை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 114 திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 28

114—

**நியாயவிலைக் கடை**

***8864—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு நுகர்வோர் இணையம் மூலம் வழங்கப்படும் மண்ணெண்ணெய் மற்றும் சர்க்கரை அளவு குறைவாக வழங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் கூடுதலாக வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னையில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரையும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் மண்ணெண்ணெய் முகவர்களிடமிருந்து மண்ணெண்ணெயும் தேவை அளவின்படி முழுமையாக வழங்கப்படுகிறது.

(ஆ) அந்தந்த நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள அட்டைகளின் எண்ணிக்கைகளுக்குத் தேவைப்படி பொது விநியோகப் பொருட்கள் எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் கிடைக்கும் வகையில் முழுமையான அளவு வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் குறிப்பாக மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் கேட்கின்ற அளவுக்குத் தராமல் அங்கே இருக்கின்றவர்கள், அவர்கள் இஷ்டம் இருக்கிறது; இஷ்டம் இருந்தால் எடுத்துக்கொள்; இல்லையென்றால் போ" என்று சொல்லி விரட்டி அடிக்கிறார்கள். நியாயவிலைக் கடைகளுக்குப் போடுகின்ற சேல்ஸ்மேன்களை சிறு வயதினராகப் போடுவதால் அங்கே செல்லுகின்ற மகளிரை எல்லாம் அங்கே இப்போது இருப்பவர்கள் கிண்டல் செய்கிறார்கள். "ஏம்மா மஞ்சள் இங்கே வா, ஏம்மா பச்சை இங்கே வா" என்று ஜாக்கெட் கலரை வைத்துக்



2000 மார்ச் 28]

கூப்பிடுகிறார்கள். இம்மாதிரி பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, நியாயவிலைக் கடைகளுக்குப் போடுகின்ற பணியாளர்களை ஓரளவு வயதானவராக, 40 வயதிற்கு மேற்பட்டவராகப் போட்டு அங்கே நியாயமான முறையில் நிர்வாகமும் விநியோகமும் சிறந்த முறையில் நடைபெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மொத்தம் 16,24,776. அதிலே அரிசியும் மற்றப் பொருட்களையும் பெறுகின்ற தகுதி படைத்த அட்டைகளின் எண்ணிக்கை 12,66,972. அரிசி தேவையில்லை, சர்க்கரை மட்டுமே தேவை என்ற அட்டைகள் 2,28,970. மண்ணெண்ணெய் மட்டும் வேண்டுமென்று கோரும் அட்டைகள் 1,23,036. இதில் காவலர்கள் மண்ணெண்ணெய் மட்டும் பெறும் அட்டைகள் 5,798. இதுதான் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் குடும்ப அட்டைகளின் விவரங்கள். இதிலே பார்ப்பீர்களேயானால், இங்கே சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் நவம்பர், டிசம்பர், ஜனவரி மற்றும் பிப்ரவரி ஆகிய மாதங்களில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி 24,593 டன்கள். அதாவது 24,593 டன்கள் ஒதுக்கீடு என்பது 1999 ஆம் வருடம் நவம்பர் மாதம். ஆனால் off-take— மக்கள் வாங்கியதன்— அளவு 16,825 டன்கள். சர்க்கரை அந்த 1999 நவம்பர் மாதத்தின் உரிமை 3,684 டன்கள். அவர்களுக்கு ஒதுக்கீடு செய்தது 3,621 டன்கள், ஏற்கனவே இருந்த பழைய இருப்பையும் சேர்த்து மக்கள் வாங்கியது 3,886 டன்கள். மண்ணெண்ணெயை எடுத்துக் கொண்டால் 13,716 கி.லி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வேறு ஏதோ பிரச்சினைக்கு உங்களிடம் வினா கேட்டார்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** சின்ன ஆட்களைப் போடாதீர்கள் பெரிய ஆட்களை நியமனம் செய்யுங்கள் என்றார். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பத்திரிகையில் வர வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். பல இடங்களிலே அரிசி குறைவாகத் தந்திருக்கிறார்கள் என்று புகார்கள் வந்திருக்கின்றன. பல மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பேசியிருக்கிறோம். அங்கே இருக்கின்ற மாவட்ட வழங்கல் அலுவலர்களிடம் பேசி இருக்கிறோம். கடந்த 20 ஆண்டு கால ஆவரேஜ் பிரகாரம், அரிசி மற்றவற்றையெல்லாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆனால் சில இடங்களிலே வேண்டுமென்றே அரசாங்கம் அரிசி தரவில்லை, 18 கிலோதான் தருகிறார்கள், 16 கிலோதான்

தருகிறார்கள் என்று புகார்கள் சொல்கிறார்கள். அதன் அடிப்படையிலே நேற்றுக்கூட ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் பேசியிருக்கிறோம்; கடிதமே எழுதி இருக்கிறோம். மக்களுக்குத் தேவையென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 100 சதவிகிதம் அரிசி வழங்கச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் மாவட்ட ஆட்சித் தலைவரே—தேவை என்கிறபோது— அதை வழங்கலாம் என்று அவர்களுக்குச் சொல்லி இருக்கிறோம். அதேபோல கெரசினைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாதமும் நமக்கு 81,000 கிலோ லிட்டர் மத்திய அரசு வழங்குகிறது. மத்திய அரசு வழங்குகிறபோது நமக்குச் சில விதிமுறைகளோடு வழங்கியிருக்கிறார்கள். இரண்டு சிலிண்டர் இருந்தால் அவர்களுக்குத் தரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு சிலிண்டர் இருந்தால் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் 3 லிட்டர் தரலாம் என்றும் சிலிண்டர் இல்லாத வீடுகளுக்கு 10 லிட்டர் தரலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது சமீபத்திலே இரண்டு மாத காலத்திற்கு முன்பு தரப்பட்ட ஆணை. அதன்படிதான் இப்போது பின்பற்றிக் கொண்டு இருக்கிறோம். இதிலே குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தப் பகுதி என்று சொன்னால் நாங்கள் நேரடியாகச் சென்று, அதைச் சரி செய்வதற்குக்கூடத் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது “பணியாளர்கள் இளைஞர்களாக இல்லாமல் கொஞ்சம் நடுத்தர வயது உடையவர்களாக இருந்தால் நல்லது” என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட இப்போது சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆட்சி வந்த பிறகு ஆயிரம் பேரைப் புதிதாக வேலைக்கு எடுத்திருக்கிறோம், பத்திரிகையிலே அறிவித்து Employment exchange மூலமாக. மீதமிருக்கிற அத்தனை பேருமே கடந்த கால ஆட்சியின்போது இருந்தவர்கள்தான். இருந்தாலும் குறிப்பிட்டு எந்தப் பகுதி என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 115, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**115—**

### நீதிமன்றங்கள்

***29904—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரத்தில் உள்ள தொகுதி மக்கள் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் சம்பந்தமாகச் செல்ல வேண்டுமென்றால் சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திண்டுக்கல் மற்றும் பழனி ஆகிய நகரங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதே அவையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 1997 ஆம் ஆண்டு ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்று கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1999-2000 ஆண்டில் அமைக்கப்படும் என்று கூறினார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டு ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கு உதவுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைப்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்திலிருந்து எந்தப் பரிந்துரைகளும் வரவில்லையென்று எனக்குத் தந்திருக்கிற செயற்குறிப்பில் இருக்கிறது. தற்போது அவர்கள் சிவில் வழக்குகளுக்காக பழனிக்கும், கிரிமினல் வழக்குகளுக்காக திண்டுக்கல்லுக்கும் செல்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், இந்த இரண்டு நகரங்களும் 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள்தான் இருக்கின்றன. என்றாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான ஒரு வட்டத்தின் தலைநகரத்தில் நீதிமன்றம் அமைய வேண்டும் என்பது நியாயமானதுதான். அந்தக் கோரிக்கையை உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை வந்தவுடன் இந்த அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே . . .

[2000 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டன்சத்திரத்தைப்பற்றி நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள்?

வினா எண் 116, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**116—**

**சாயப் பட்டறை**

**27474*—**திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, பட்டுக் கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்காக சாயப் பட்டறை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியில் குடிசைத் தொழில் போன்று, கைத்தறி நெசவாளர்கள் சுமார் 35,000-க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் வீட்டிலேயே சாயம் தோய்ப்பதால் நகராட்சியாலும் மற்றும் மாசுக்கட்டுப்பாடு வாரியத்தாலும் அச்சுறுத்தப்படுகிறார்கள். எனவே, மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்குட்பட்டு ஒரு சாயப் பட்டறையை அமைத்து அந்தப் பகுதி நெசவாளர்களுக்கு வாழ்வளிப்பார்களா என்று அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியில் மொத்தம் செயல்பட்டு வருகின்ற பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறு. அதிலே மூன்று



2000 மார்ச் 28]

சங்கங்களுக்குச் சாயச் சாலைகள் உள்ளன. மற்றவர்கள் வெளி சாயச் சாலைகளிலே அனுமதி பெற்றுத் தங்களுக்குண்டான சாயத்தைத் தோய்த்துக் கொள்கிறார்கள். மேலும் ஆரணியில் திரு.வி.க. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில், கைத்தறி வளர்ச்சி மையம் மற்றும் தரமான சாயச் சாலைகள் அமைத்தல் திட்டத்தின்கீழ் சாயச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதற்குக் கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்படாததால் அது செயல்படாத நிலையிலே உள்ளது. தனியார் பிரச்சினை இருந்தாலும்கூட அவர்கள் தனியாருடைய சாயச் சாலைகளிலேயே சாயங்களைத் தோய்த்துக்கொள்கிறார்கள். எனினும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் கைத்தறி வளர்ச்சி மையம் மற்றும் தரமான சாயச் சாலைகள் அமைத்தல் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டிருக்கின்ற சாயச் சாலைக்கு விரைவிலே கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவி அதை முழுமையாகச் செயல்படுத்தத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் ஆறு இருக்கின்றன. ஆனால் தனியார் நெசவாளர்கள் தங்கள் தொழில்களை வீட்டிலேயே செய்வதால், அவரவர்கள் வீட்டிலேயே சாயம் தோய்க்கின்ற காரணத்தினால் இரசாயனக் கலவை பல சாக்கடைகளிலே வந்து, மாசுக் கேட்டினை ஏற்படுத்துகிறது என்று அந்தத் துறையால் அவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். எனவே தனியார்களும் உபயோகிக்கின்ற வகையிலே ஒரு சாயப்பட்டறையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் அமைக்கப்படுகின்ற சாயப்பட்டறையில் தனியார்களும் சாயம் தோய்த்துக்கொள்ள அனுமதி தரப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும் சாயப்பட்டறையில் தனியாரும் சாயங்களைத் தோய்ப்பதிலே எந்தவிதமான இடைஞ்சலோ, கருத்துவேறுபாடோ இல்லை. ஆனால் குடிசைத் தொழில் என்ற அடிப்படையிலே ஒவ்வொரு இல்லத்திலேயிருந்தும் இந்தக் கழிவுநீர் வெளியேறி கிராமம் முழுவதும், நகரம் முழுவதும் ஒட்டுமொத்தமாகக் குடிநீரைக் கெடுக்கின்ற வகையிலே செல்கின்றபோது மாசுக் கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுத்துத்தான் ஆக வேண்டும். எனவே, தனிப்பட்ட வியாபாரிகள் தங்களுக்குள் Common Effluent Treatment Plant ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு C.E.T.P. என்ற முறையில் அவர்கள்

[2000 மார்ச் 28

அதை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்தால், மத்திய மாநில அரசினுடைய நிதி ஆதார மானியத்தோடு நிறுவிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. தனியார் அந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கு அரசு தக்க ஆலோசனைகளும், ஆதரவும் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 117, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**117—**

**மாணவர் விடுதி**

***23706—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மணலூரில் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் தங்கிப் பயில பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம் மணலூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் கல்வி வசதி பெறுவதில் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய மணலூர் உயர்நிலைப் பள்ளியில் கிராமப்புறங்களிலிருந்து ஏராளமான மாணவர்கள் வந்து கல்வி பயில்கிறார்கள். சென்ற ஆண்டே மானாமதுரையிலே ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்கக் கேட்டிருந்தேன். எனவே பின்தங்கிய பகுதியிலே பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைப்பதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் 34 விடுதிகள்



2000 மார்ச் 28]

இயங்குகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**118—**

**கால்நடை மருத்துவமனை**

***29349—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் மற்றும் தேசூரில் உள்ள கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் மற்றும் தேசூரில் உள்ள கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற பெரணமல்லூர் மற்றும் தேசூர் ஆகிய இரு பேரூராட்சிகளுக்கு அதைச் சுற்றியிருக்கிற கிராமங்களிலிருந்து அதிகமான கால்நடைகள் வருவதால், இதை மீண்டும் மறுபரிசீலனை செய்து மருத்துவமனையாக உயர்த்துவதோடு, பெரணமல்லூர் பேரூராட்சியிலே அமைந்திருக்கிற இந்தக் கால்நடை மருந்தகம் 100 சதவிகிதம் பாழ்பட்டு இயங்க முடியாத சூழ்நிலையில் உள்ளதால், அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 28

முற்பகல் 10-25

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் தெள்ளார் மற்றும் தேசூரில் கால்நடை மருந்தகங்களும், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பெரணமல்லூர் மற்றும் கொழப்பலூரில் கால்நடை மருந்தகங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. பொதுவாக ஒரு கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அக்கால்நடை மருந்தகத்திற்குச் சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் தினசரி சராசரி எண்ணிக்கை 40-க்கு மேல் இருப்பின், அக்கால்நடை மருந்தகங்களை ஒவ்வோர் ஆண்டும் பகுதி-2 திட்டத்தின்கீழ் தகுதி மற்றும் நிதி நிலைமைகளின் அடிப்படையில் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசினால் பரிசீலிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆணை எதுவும் வெளியிடப்படவில்லை. எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைகளுக்கு ஏற்ப பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கட்டடத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாவட்டப் பரவலாக்கத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு உள்ளாட்சித் துறை மூலமாக 400-க்கு மேற்பட்ட கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. அந்தத் தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி கருத்துரு அரசுக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களேயானால் அந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 119, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**119—**

**திருமண உதவித் திட்டம்**

***23485*—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு தொழில் அதிபர்களிடமிருந்து நன்கொடை பெறப்பட்டுள்ளதா?



2000 மார்ச் 28]

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் இதுவரை எவ்வளவு நன்கொடை கிடைத்துள்ளது?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்திற்கு 27-8-1998 முதல் 4-5-1999 வரை ரூ. 4,11,85,011 நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மூலமாக சமுதாய முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துகிறோம். 10-ம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு, 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், மறுமண உதவித் திட்டம், கலப்புமணத் திட்டம் என்று சமுதாயம் முன்னேற ஏற்றத் தாழ்வுகள், சாதிமத பேதங்கள் ஒழிய வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படுத்தக்கூடிய இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் அறிவித்த நிலையில் கல்விக் கூடங்களுக்கு, மருத்துவ நிலையங்களுக்கு நன்கொடை அளிப்பவர்களின் பெயர்களையெல்லாம் சூட்டக்கூடிய அளவில், நினைவூட்டக்கூடிய அளவில், எதிர்காலத்திலே தொண்டு நிறுவனங்களை அதிகமாகப் பயன்படுத்தி எந்த அளவுக்கு அதிகபட்சமாக சமூக நலத் துறையின் மூலமாக சமூக நலத் திட்டங்களை அமல்படுத்த முடியுமோ அதற்கேற்ற வகையில் செயல்படுத்துவதோடு, இந்தத் திட்டங்கள் முழுமையாக ஏழை எளியவர்களுக்கு எளிமையாகச் சேரக்கூடிய அளவில் கீழ்நிலையில் இருக்கக்கூடிய அலுவலர்கள், அதிகாரிகள் முழுமையாக ஒத்துழைக்கக்கூடிய அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் ஆவன செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைப் பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தில் 1996-க்குப் பிறகு 10 ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த பிறகு இதுவரை 2 லட்சத்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள். 200 கோடி ரூபாய்க்கும் அதிகமாக

இத்திட்டத்திலே பயனாளிகள் தொகை பெற்று இருக்கிறார்கள். மேலும் நிலுவையில் இருக்கிற விண்ணப்பங்களுக்கும் இந்த ஆண்டு நிதியுதவி வழங்கப்பட இருக்கிறது. எனவே, இந்தத் திருமண நிதி உதவித் திட்டத்தில் நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமான பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தில் முதலில் 8 ஆம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு எல்லாம் உதவி வழங்குவதாக நம்முடைய அரசு அறிவித்திருந்தது. பிறகு சென்ற ஆண்டு அதற்கு பல சான்றிதழ்கள் பெறுவதில் ஊழல் இருப்பதன் காரணத்தால் 10 ஆம் வகுப்பு என்று மாற்றி இப்பொழுது வழங்கப்படுவதாக அறிகிறேன். அதேநேரத்தில், ஏற்கெனவே 8-வது வகுப்பு வரை படித்த தகுதி உள்ள பெண்கள் ஏராளமாக விண்ணப்பித்திருந்தும் அந்த விண்ணப்பங்களை எல்லாம் நம்முடைய அரசு கவனிக்காமல் கிடப்பில் போட்டுவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா? ஏற்கெனவே உள்ள சட்டப்படி அந்த 8-வது வகுப்பு படித்த ஏழை எளிய பெண்களுக்கு இந்தத் திருமண உதவித் திட்டம் முறையாகக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்திற்காக வந்த விண்ணப்பங்கள் சரியான முறையிலே பரிசீலிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை வைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்குமென்று சொன்னால், அதை அவர்கள் தாராளமாகத் தரலாம். அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அந்தப் பெண்களுக்கு உதவித் தொகை கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். ஆனால், 8 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு இந்த ஆண்டு உதவித் தொகை கிடைக்காது என்று அறிவித்த பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும், பொதுமக்களும், தொண்டு நிறுவனங்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க 31-3-1999 வரை திருமணத்திற்கு விண்ணப்பம் தந்த 8 ஆம் வகுப்பு பயின்று விண்ணப்பித்திருந்த அனைவருக்குமே இந்தத் திட்டத்திலே நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10-வது படித்த பெண்களுக்கும் கிட்டத்தட்ட 70 ஆயிரம் பெண்களுக்கு இந்த ஆண்டு





உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதைப்போல இந்த ஆண்டு மட்டும் 64,359 பெண்களுக்கு இந்த உதவித் தொகை கிடைத்திருக்கிறது. இன்னும் நிலுவையில் இருக்கின்ற விண்ணப்பங்களுக்கும் இந்த ஆண்டு வழங்கப்படும். பட்ஜெட் நிதியுதவி மூலமாகத் தொகை வழங்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 120, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**120—**

### தேனீ வளர்ப்பு

***17061—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனீ வளர்ப்பை ஊக்குவிக்க கடனுதவி தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மலையைச் சார்ந்த பகுதிகளிலே வாழ்கின்ற தேனீ வளர்ப்போரை ஊக்குவிக்க மலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 100 சதவிகித மானியத்தில் தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டு தேனீ வளர்ப்போரை அரசு ஊக்குவித்து வருகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன் மிக மிக மருத்துவ குணம் மிக்க ஓர் அற்புதமான பொருள். அந்தத் தேனை உருவாக்க மலையில் வாழும் மக்களுக்கு உதவுவது போல, நம்முடைய கிராமங்களிலே இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான விவசாயக் கூலிகள் தேனின் பயனை உணர்ந்து தேனீ வளர்க்க அவர்களுக்கும் மானியம் வழங்க அரசு முன்வருமா? அதேபோல, 1999-2000 ஆம் ஆண்டில் எவ்வளவு பேருக்கு இந்த மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது; சேலம் மாவட்டத்திலே எவ்வளவு பேருக்கு மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 28

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனீ வளர்ப்பைப் பொறுத்தவரையில், மலையைச் சார்ந்த பகுதிகளில் தேன் உற்பத்திக்காக அந்தப் பகுதிகளிலே உள்ள சீதோஷ்ண நிலைகளுக்கு ஏற்ப தேனீ வளர்க்கப்படும். அதேபோல, கிராமப் பகுதிகளில் தேனீ வளர்ப்புக்குண்டான சூழ்நிலை இருக்குமாயின், மும்பை கதர் ஆணைக் குழுவின் சார்பாக மானியத்துடன் அந்தத் தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக தேனீ வளர்ப்புக்குண்டான பகுதிகளாக அந்தப் பகுதிகள் அமையும் என்றால், இது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேனீ வளர்ப்புத் திட்டம் என்பது மலைப்பாங்கான பகுதிகளில் ஒரு சீசனில் மட்டும்தான் செயல்படுகிறது. ஆனால் 1998 ஆம் ஆண்டில் முழுமையாக தேனீக்கள் ஒரு வைரஸ் நோயினால் இறந்து போய்விட்டன. அவற்றைத் திரும்ப சரி பண்ணுவதற்கு அல்லது திரும்ப தேனீக்களை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு மத்திய சர்க்கார் மானியமும் கடனுமாக வழங்கினார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தேனீ வளர்த்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு அந்தத் தொகை வழங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு தேனீக்களுக்கு வைரஸ் நோய் ஏற்பட்டு அவை பாதிக்கப்பட்டதன் காரணமாக வட ஆற்காடு மாவட்டம் ஜமுனாமத்தூர் மற்றும் திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி, திண்டுக்கல், கோயம்புத்தூர் போன்ற மலைப் பகுதிகளில் இருக்கின்ற தேனீ வளர்ப்போருக்கு மத்திய அரசு மானியத்துடன் நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2000 மார்ச் 28]

## 3. தகவல் கோரல்

### (அ) கடலூர் இரயில் பாதை குண்டுவெடிப்பு பற்றி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் சேர்ந்து பேசினால் எப்படி? அவரவர் எழுந்து, எல்லோரும் வரிசையாகப் பேசினால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சில தினங்களுக்கு முன்பாகத் தங்களுடைய அறையில் கடலூரில் இரயில்வே டிராக்கில் வெடிகுண்டு வெடிப்பு சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தை அளித்திருந்தேன். அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளித்தால் இன்று அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி மறுக்கப்படுகிறது. (குறுக்கீடு) உங்களிடம் அங்கேயே பேசிவிட்டேன், அனுமதி மறுக்கப்படுகிறது. அடுத்து திரு. கே. சுப்பராயன். (குறுக்கீடு) அனுமதியே உங்களுக்கு மறுத்துவிட்டேன். அப்புறம் எங்கேயிருந்து எடுப்பது? (குறுக்கீடு) அனுமதி மறுத்துவிட்டேன். அதற்கு அப்புறம் நீங்கள் உங்கள் நடவடிக்கையைச் செய்யுங்கள்; எனக்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்துவிட்டேன்; நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்துவிட்டேன், உட்காருங்கள்.

முற்பகல் 10-35

**திரு. சி. ஞானசேகரன்:** என்றைக்கு எடுப்பீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதியே மறுத்துவிட்டேன்; பிறகு என்றைக்கு எடுப்பீர்கள் என்று கேட்டால் என்ன அர்த்தம்?

**திரு. சி. ஞானசேகரன்:** முக்கியமான பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனக்கு முக்கியம் என்று தெரியவில்லை. உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தங்கள் அறையில் இதுபற்றிப் பேசும்போது....(குறுக்கீடு)

[2000 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்து கொண்டு திரு. சி. ஞானசேகரன் பேசினால் வெளியேற்றுவேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தங்கள் அறையில் இந்தப் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் பேசும்போது, நானும் அதைப்பற்றி அவரிடம் 10 நிமிஷம் பேசி இருக்கிறேன். இது தாங்கள் அறிந்ததே. ஆக, அவரிடத்திலே 10 நிமிஷம் பேசிய பிறகு, "இந்த பிரச்சினையை இப்போது எடுப்பது நல்லதல்ல; தேசிய நலனுக்கு நல்லதல்ல" என்று கூறிய பிறகு, "ஆமாம்" என்று ஒத்துக்கொண்டு அவர் வந்துவிட்டார். அங்கே ஒரு வாக்கு; இங்கே ஒரு வாக்கு என்பதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் நான் ஒரு கருத்துச் சொல்கிறேன். நான் அனுமதி மறுத்தேன் என்று சொன்ன பிறகு, முதலமைச்சர் என் அறையில் விளக்கம் கொடுத்ததனாலே வந்த கோளாறு. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** இருக்கிற பிரச்சினையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி மறுத்துவிட்டேன்; உட்காருங்கள். அடுத்து திரு. பி.ஆர். சுந்தரம்.

**(ஆ) சென்னை மாநகராட்சி மன்றத்தில் வைப்பதற்குமுன் நிதிநிலை அறிக்கை நகல் காண்பித்ததாகக் கூறப்படுதல்**

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னை மாநகராட்சியினுடைய பட்ஜெட் கூட்டம் நடந்து இருக்கிறது. அந்த பட்ஜெட் 10 மணிக்கு தாக்கல் செய்ய . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 9-20 மணிக்கு அந்த பட்ஜெட் காப்பியை காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்க்கட்சித் தலைவர் தியாகராஜன் பத்திரிகை நிருபர்களைக் கூட்டி, கொடுத்து இருக்கின்றார்கள். அதனால், பட்ஜெட் இரகசியத்தைக் காப்பாற்ற முடியாத மாநகராட்சியைக் கலைக்க வேண்டும்; அதனுடைய மேயர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இராஜினாமா செய்ய வேண்டும். (கூச்சல்) அதற்கு பொறுப்பேற்று முதல்வர் அவர்கள் இராஜினாமா செய்ய வேண்டுமென்று (கூச்சல்) நான் கேட்டுக் கொள்கிறேன்.



2000 மார்ச் 28]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எங்கேயோ கிடந்த ஒரு துண்டுத் தாளை எடுத்துக்கொண்டு வந்து, யாரோ கோமாளித்தனமாக இதுதான் பட்ஜெட் காப்பி (மேஜையைத் தட்டும் ஒலி) என்று வேண்டுமென்றே சொன்னதற்காக 'இராஜினாமா செய்ய வேண்டும்; மாநகராட்சி மன்றத்தைக் கலைக்க வேண்டும்' என்று சொல்கிறார்கள். "மாநகராட்சி மன்றத்திலே தொடர்ந்து இப்படி அமளி நடந்து கொண்டிருந்தால் அதைக் கலைக்க நேரிடும்" என்று நான் ஒரு முறை சொன்னபோது, திண்டிவனம் இராமமூர்த்தி என்ற காங்கிரஸ் கட்சியினுடைய தமிழகத்தின் தலைவர் அவர்களும், ஜெயலலிதா அம்மையாரும் மற்றும் அ.தி.மு.க-வைச் சேர்ந்தவர்களும் "இப்படி கருணாநிதி சொன்னது, 'மாநகராட்சியைக் கலைப்பேன்' என்று சொன்னது சர்வாதிகாரம்" என்று சொன்னார்கள். இரண்டு மாதத்திற்கு முன்பு சர்வாதிகாரமாகத் தெரிந்தது, எப்பொழுது அது ஜனநாயகமாக மாறியது என்பது எனக்குத் தெரியவில்லை. பட்ஜெட் இரகசியம் அங்கே வெளியாகவில்லை; நிச்சயமாக வெளியாகவில்லை. அதை மேயர் அங்கே மறுத்து எடுத்துக் காட்டியிருக்கின்றார். வெளியானது பட்ஜெட் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரத்திற்கு ஒன்று சொல்கிறேன். என்னிடம் வந்து கேட்டீர்கள். உங்களுக்கு அனுமதி மறுத்துவிட்டேன். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்துவிட்டேன். (குறுக்கீடு) நான் ஒன்று சொல்கிறேன். தயவுசெய்து கேளுங்கள். (குறுக்கீடு) நான் ஒன்று சொல்கிறேன் தயவுசெய்து கேளுங்கள் (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்துவிட்டேன். வரிசையாக பட்ஜெட் நாளிலிருந்து தினமும் இந்த மாதிரி இடையூறு பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். நான் ஜனநாயக முறைப்படியே இந்த அவையை நடத்த வேண்டுமென்று நினைக்கிறேன். தொடர்ந்து இப்படி நடந்துகொண்டீர்கள் என்றால், நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன்; வெளியேற்றுவேன். முதல்தடவை ஒரு நாள் வெளியேற்றுவேன். இரண்டாவது தடவை என்றால், கூட்டத் தொடர் முழுவதற்கும் வெளியேற்றுவேன். பகிரங்கமாகச் சொல்லவேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்படுகிறது. அதற்குமேல் உங்கள் இஷ்டம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு முக்கியமான பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதியே கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும்.

## (இ) பேரவையில் உரையாற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கூடுதல் வாய்ப்பு

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய பேரவைத் தலைவர் இங்கே வரவில்லை; வேறு நிகழ்ச்சிக்காகப் போய் இருந்தீர்கள். நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் அவையை நடத்தினார்கள். நேற்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்து 3 பேர் பேசி இருக்கிறார்கள். ஆளும் கட்சியிலிருந்து 4 சட்டமன்ற உறுப்பினர்கள்; அவர்களுடைய தோழமைக் கட்சி உறுப்பினர் ஒருவர்; ஆக 5 பேர் பேசி இருக்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை. இல்லை. நீங்கள் இதில் தோழமைக் கட்சி என்ற அந்த வார்த்தையைப் பயன்படுத்துவது (குறுக்கீடு) நீங்களே தோழமைக் கட்சி என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகையினால், நீங்கள் வந்து இது தோழமைக் கட்சி, அது எதிர்க்கட்சி என்று பேசக்கூடாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அதாவது நீங்களும் ஆளும் கட்சிக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கொடுங்கள்; நாங்கள் ஒன்றும் ஆட்சேபணை செய்யவில்லை. அதேநேரத்தில் எதிர்க்கட்சிக்கு உரிய முறையில் பேசுவதற்கு நீங்கள் அனுமதி கொடுப்பதாக இருந்தால், நாங்கள் தொடர்ந்து இந்த அவையில் பேசுகிறோம். இல்லை, வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்கள் என்றால், வெளியே போய்விடுகிறோம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்; நான் விளக்கம் சொல்கிறேன். நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் 32 நிமிடங்கள் பேசி இருக்கிறார். (குறுக்கீடு) நான் இன்றைக்கு ரிக்கார்டைப் பார்த்துவிட்டேன். கொஞ்சம் இருங்கள்; நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ரிக்கார்டைக் காண்பிக்கச் சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும், உங்களுக்கு அரசியலில் எந்தமாதிரி இருந்தாலும், எனக்கு அதுபற்றிக் கவலை கிடையாது. நான் வலியுறுத்திச் சொல்கிறேன். மரபுகளைக் காப்பாற்றினால் உங்களுக்கு எல்லா அனுமதியையும் கொடுப்பேன். நான் என் அறையில் வருத்தத்தோடு சொன்னேன். பத்திரிகையிலே படித்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், த.மா.கா. நிருவாகி ஒருவரும் பத்திரிகையில் நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். அதில், 'நாங்கள் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் சரியான பதிலைச் சொல்லவில்லையென்றால், அவையை நடத்த விடமாட்டோம்' என்று முடித்திருக்கிறார்கள். அவையை நடத்துவது முதலமைச்சர் பொறுப்பல்ல, என் பொறுப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைச் சவாலாக ஏற்றுக்கொள்கிறேன்.



*முற்பகல் 10-40*

நான் முறையாக அவையை நடத்த வேண்டுமென்று விரும்புகிறேன். நான் நடத்துவது முறையாக இல்லையென்று நீங்கள் கருதினால், உங்களுக்குப் பல முறைகள் இருக்கின்றன. என் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரலாம். அரசு மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரலாம்; நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். நீங்கள் அந்த முறையைக் கையாண்டு, எதை வேண்டுமானாலும் பேசுங்கள். அதைக் கையாளாமல், நீங்கள் நினைத்த நேரத்திலே பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. இந்தத் தடவை நான் சொல்லிவிட்டேன். கடந்த 4 வருடங்களாக நான் சொல்லிச்சொல்லிப் பார்க்கிறேன், நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் மரபுகளைக் கடைப்பிடித்தால்தான் என்னால் அவையை நடத்த முடியும். நீங்கள் மரபுகளைக் கடைப்பிடிக்காமல், நினைத்த நேரங்களில் எல்லாம் எழுந்து பேசினீர்கள் என்றால் நாடாளுமன்றத்தில் என்ன நடைமுறையைக் கடைப்பிடிக்கிறார்களோ அதைப்போன்று எண்ணிக்கை அடிப்படையில்தான், நான் பேசுவதற்கு வாய்ப்பு கொடுப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் நான் தெளிவாகச் சொல்கிறேன். எனக்கு ஒன்றும் வருத்தம் கிடையாது. நீங்கள் பேரவைத் தலைவர் மீதோ, அரசு மீதோ முறையான தீர்மானம் கொண்டு வந்து எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணையே இல்லை. அதைக் கொண்டு வராமல்—நான் உங்களைப் பெரிதும் மதிக்கின்றேன்—என்னுடைய கணக்கின்படி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட அன்றைக்கு நீங்கள் எழுந்து பேசியது மரபல்ல. நீங்கள் பேசியதும் ஒன்றுதான், பட்ஜெட் பேப்பரை இழுத்துப் பிடுங்குவதும் ஒன்றுதான். ஆகவே, உங்கள் தரத்திற்கு நான் இதை எதிர்பார்க்கவில்லை. நான் என்ன நினைக்கிறேன் என்றால் மரபோடு நடந்தால் நானும் மரபோடு நடத்துகிறேன். இல்லாவிட்டால் கண்டிப்பாக அவையை, விதிப்படிதான் நடத்துவேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்கிற கருத்தில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஆளுகிற கட்சியோ, எதிர்க்கட்சியோ தங்களுடைய கருத்துகளை ஜனநாயகபூர்வமாக வெளியிட்டு, ஜனநாயக ரீதியாகப் போராட வேண்டுமென்பதில் நாங்கள் 100 சதவீதம் உடன்பட்டுத்தான் தாங்கள் சொல்கிற கருத்தை ஏற்றுச் செயல்படுத்தி வருகிறோம். எனவே, விதிமுறைகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டமன்றம் இயங்குவதில் முழுமையாக நாங்கள் ஒத்துழைப்போம் என்பதில் எள்ளளவும், எள் முனை அளவும் வேறுபாடு இல்லை. ஆனால்

நான் தங்களிடம் விண்ணப்பித்துக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், "ஜனநாயகம் என்பது வெறும் தலைகளை மட்டும் எண்ணித் தீர்ப்பளிப்பதல்ல" என்று நான் சொல்லவில்லை, (குறுக்கீடுகள்) நான் சொல்லவில்லை, (கூச்சல்-குழப்பம்) நீங்கள் நேசிக்கிற அண்ணா சொல்லியிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதில் (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் சொல்வதில் ... (குறுக்கீடு) நீங்கள் சொல்லலாம். ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே பேசினர்.)

உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு இப்படிப் பேசக் கூடாது. யாராக இருந்தாலும் நான் நடவடிக்கை எடுப்பேன். ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி. நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். எண்ணிக்கை கணக்கு அல்ல. 4 வருடங்களாக எண்ணிக்கையைப் பார்க்காமல்தான் நடத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒன்றை நீங்கள் மனசாட்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். 165 உறுப்பினர்கள் இருக்கிற ஆளுங்கட்சியினர் முதலமைச்சரோ, நானோ, "அமைதியாக இருங்கள்" என்றால் அமைதியாக உட்காருகிறார்கள். யாரும் எந்தத் தகராறும் செய்வதில்லை. அதை ஏற்றுக்கொண்டு உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நடவடிக்கைகளில் இதுவரையில் வழங்கப்பட்டு வருகிற சலுகைகள் அல்லது வேறுவகைப்பட்ட நெறிமுறைகள் மீறப்பட்டு, நீங்கள் நடத்தினீர்கள் என்று ஒருபோதும் நாங்கள் எண்ணவில்லை, குற்றஞ் சாட்டவில்லை. நான் திரும்பவும் குறிப்பிட விரும்புகிறேன். தலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் நேரத்தைத் தீர்மானிப்பது என்பது ஜனநாயகத்தைச் சிரச்சேதம் செய்வதாகும். (கூச்சல்-குழப்பம்) எனவே ஜனநாயகத்தை சிரச்சேதம் செய்ய (கூச்சல்-குழப்பம்) இப்படியெல்லாம் கூக்குரல் இடக்கூடாது. நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால் ஜனநாயகத்தை ஜனநாயக ரீதியாக, கருத்தைக் கருத்தால் முறியடிக்க வேண்டுமே தவிர முனகுவதாலோ, கூக்குரல் இடுவதாலோ, எதிர்க்குரல் இடுவதாலோ ஒரு கருத்தை முறியடிக்க விரும்புவது நாகரிக அரசியல் அல்ல என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.





ஜனநாயகத்தை இயக்குவதில் ஆளுகிற கட்சியின் காதுகள் திறந்திருக்க வேண்டும்; எதிர்க்கட்சிகளின் நாக்கிற்குப் பேச வாய்ப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் ஜனநாயகச் சக்கரம் முறைப்படி இயங்கும், முறைப்படி இயக்க வேண்டுமென்று உங்களைத் தவிர வேறு யாரிடம் நாங்கள் முறையிட முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய அருமையான கருத்திற்கு என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் பேரவைத் தலைவராக இருந்தாலும் எனக்கென்று சில கருத்துகள் இருக்கின்றன, அதை நான் சொல்லத்தான் வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றுவது, போற்றுவது என்பதில் தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் கலைஞரைத் தவிர (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்தத் தலைவரையும் நான் பார்த்ததில்லை. நான் பேரவைத் தலைவராகவே இதைச் சொல்கிறேன். நீங்கள் மற்றக் குற்றச்சாட்டுகள் எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். அரசு மீது குற்றச்சாட்டுச் சொல்லுங்கள். லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை ஆதாரத்தோடு சொல்லுங்கள். ஜனநாயக மரபுப்படி சட்டமன்றத்திலேயே இருந்து, முடிந்த வரைக்கும் எல்லா உறுப்பினர்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்கும் பதில் சொல்கிற ஒரு முதலமைச்சர் இந்த முதலமைச்சரைக் காட்டிலும் வேறு எந்த முதலமைச்சரையும் நான் பார்த்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால்தான் அவையை நடத்துவதற்கு எனக்கு ரொம்ப வசதியாக இருக்கிறது. அந்த அடிப்படையில் நான் இப்போது உங்களுக்குச் சொல்கிறேன். நான் இதுவரைக்கும் எண்ணிக்கைக் கணக்கில் வாய்ப்புக் கொடுத்தது கிடையாது. இதை ஒரு வாரத்திற்குப் பரீட்சார்த்தமாக நான் பார்க்கப் போகிறேன். முறையாக நடக்காவிட்டால் நான் மாற்றிக்கொள்வேன். திரு. கே. சுப்பராயன்.

*முற்பகல் 10-45*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதிலே ஒரு திருத்தத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக விரோதமாக நடந்துகொண்டார் என்று எந்த இடத்திலும் நான் குறிப்பிடவில்லை. குறிப்பிட விரும்பவும் இல்லை. அப்படி அவர் நடந்ததாகக் குற்றம் சாட்டவும் இல்லை. எனவே அப்படி ஒரு கருத்தை, தாங்கள் சொன்னதன்மூலம் நான் அப்படி ஒரு கருத்தை முன்வைத்ததாக அர்த்தப்படுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையோடு நான் திருத்தத்தை முன்வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதை நூற்றுக்கு நூறு நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் ஒன்று சொல்கிறேன். பலமுறை நான் "எண்ணிக்கையைப் பொறுத்துப் பேச விடுவேன்" என்று சொன்னபோது, முதல்வரே, "வேண்டாம், நீங்கள் அவர்களை அதிகம் பேசவிடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்; அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே வித்தியாசப்படவில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்றைக்காவது பேரவைத் தலைவர் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமல்லவா? இல்லையென்றால், முதலமைச்சர் சொல்லும் இடத்தில் இந்தப் பேரவைத் தலைவர் கையெழுத்துப் போடுகிறார் என்று குற்றச்சாட்டு சொல்வார்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய நடைமுறைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையோ, பேரவைத் தலைவர் அவர்களையோ எதிர்க்கட்சி என்ற முறையிலே நாங்கள் குற்றஞ்சாட்டியதே கிடையாது. இன்னும் சொல்லப்போனால் உங்களைப் போன்ற சிறந்த பண்பாளர் பேரவைத் தலைவராக இருப்பதையே நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் குற்றச்சாட்டும் நாங்கள் சொல்லாதபோது நாங்கள் குற்றச்சாட்டுச் சொன்னதாக ஒரு மாயையை தாங்கள் ஏற்படுத்துவதுதான் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. எங்களுடைய கோரிக்கை மிகவும் தெளிவானது. எதிர்க்கட்சியினர் கேள்வி கேட்பதற்காக இருக்கிறார்கள். ஆளுங்கட்சியினர் பதில் சொல்வதற்காக இருக்கிறார்கள். எனவே, கேள்வி கேட்பதற்கான எங்களுடைய உரிமையினுடைய நேரத்தை நீங்கள் குறைக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வாதம். 1991 ஆம் ஆண்டிலிருந்து எங்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப எதிர்க்கட்சிகளுக்கு 4 உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் நீங்கள் இந்த 4 ஆண்டுகாலமாக ஒவ்வொரு துறையிலும் 3 உறுப்பினர்களைப் பேசுவதற்கு அனுமதியளித்தீர்கள். ஆனால், அந்த மூன்று என்பது இப்போது இரண்டாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே, உங்களுடைய மேலான பார்வைக்கு, 3 பேர் பேசுவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்கிற அன்பான வேண்டுகோளைத்தான் நாங்கள் வைக்கிறோமேயொழிய, உங்கள் மீதோ, முதலமைச்சர் அவர்கள் மீதோ எந்தவிதமான குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. ஆளுங்கட்சியைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சியினுடைய கேள்விகளுக்குப் பதில்



சொன்னால் போதும். அவர்கள் இங்கே பிரச்சாரம் செய்ய வேண்டியதில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களும் ஜனநாயகத்தைப் போற்றுவதில், பேணிக்காப்பதில் நான் எந்த இடத்திலும் தொய்வு அடையவில்லை என்பதை எடுத்துக் கூறியதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். தொடர்ந்து அந்தப் பண்பைக் காப்பாற்றுவேன் என்கிற உறுதியை இந்த அவைக்கும், அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இங்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய விவாதத்தின் காரணமாக ஒரு தவறான செய்தி பத்திரிகைகளிலோ அல்லது மக்களுக்கோ பரப்பப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஒரு தெளிவான உண்மையைப் புள்ளிவிவரத்தோடு சொல்ல விரும்புகிறேன். 167-க்கும் மேற்பட்டவர்கள் ஆளுங்கட்சி வரிசையிலே இருக்கிறார்கள். எதிர்க்கட்சி வரிசையில் அவர்களுடைய தோழமைக் கட்சியைச் சேர்த்து 46 பேர்; நேற்றைய தினம் பேசிய —T.M.C. மற்றும் C.P.I. ஆகிய கட்சியினர் 46 பேர்—நேற்று பேசியவர்களில் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில தேசிய லீக் ஆகிய இரண்டு கட்சியினரும் சேர்ந்து மொத்தம் 84 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். தமிழ் மாநில காங்கிரசும், C.P.I. கட்சியும் சேர்ந்து 68 நிமிடம் பேசி இருக்கிறது. இந்த விவரத்தை எண்ணிப் பார்த்தால் ஜனநாயக ரீதியிலே இந்த மன்றத்திலே நாம் செயல்படுகிறோமா, இல்லையா என்பது நன்றாகத் தெரியும். ஆளுங்கட்சியும், ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருக்கிற கட்சிகளும் சேர்ந்து மொத்தமே 84 நிமிடங்கள் தான்; ஆனால் எதிர்க்கட்சியும், சி.பி.ஐ.யும் சேர்ந்து நேற்று 68 நிமிடம் பேசியிருக்கிறார்கள் என்ற அந்த விவரத்தை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. பி. ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அழகிரி, உங்களுக்கும் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

[பேரவைத் தலைவர்] [2000 மார்ச் 28

முற்பகல் 10-50

ஆளுநர் உரையில் யார், யார் எந்தக் கட்சியினர் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறார்கள் என்கின்ற புள்ளிவிவரத்தை நான் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு மணி நேரம் 4 நிமிடங்கள்; தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மூன்று மணி நேரம் 14 நிமிடங்கள்; இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு மணி நேரம் 26 நிமிடங்கள்; அ.இ.அ.தி.மு.க. 28 நிமிடங்கள்; பாட்டாளி மக்கள் கட்சி 41 நிமிடங்கள்; இந்திய தேசிய லீக் 31 நிமிடங்கள்; அகில இந்திய பார்வர்ட் பிளாக் 15 நிமிடங்கள். இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) 16 நிமிடங்கள்; தமிழ் மாநில தேசிய லீக் 25 நிமிடங்கள்; பாரதிய ஜனதா கட்சி 6 நிமிடங்கள்; எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 11 நிமிடங்கள்; புதிய தமிழகம் 10 நிமிடங்கள்; எக்கட்சியையும் சாராதவர் 18 நிமிடங்கள். நான் ஆரம்பத்தில் சொன்னதை திரு. அழகிரி கவனிக்கவில்லை. 'குற்றச்சாட்டையே நாங்கள் சொல்லவில்லை' என்று சொன்னீர்கள். நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு வருத்தத்தோடு சொன்னேன்; ஒரு பேட்டியை நான் படித்துப் பார்த்தேன். "நாங்கள் கேட்கிற கேள்விக்கு பதில் முறையாக வரவில்லையென்றால் சபையை நடத்தவிடமாட்டோம்" என்று எதிர்க்கட்சித் தலைவரும், அவர் தலைவர் என்று குறிப்பிடுகின்றவரும். அவர் எனக்கு எந்தப் பொருட்டும் கிடையாது. அவர் இந்த அவையிலே உறுப்பினர் கிடையாது. இவர்கள் இரண்டுபேரும் சேர்ந்து கொடுத்த பேட்டி, இப்படி அந்த வாசகத்தோடு முடிகிறது. நான் அதற்காகத்தான் சொன்னேன். "அவையை நடத்துவது முதலமைச்சர் அல்ல, நான்" என்று. அதனால் "அவையை நடத்த விடமாட்டோம் என்று சொன்ன, அந்தச் சவாலை நான் ஏற்றுக் கொள்ளத் தயார்" என்று சொன்னேன். இந்த அடிப்படையில்தான் அந்தக் குற்றச்சாட்டை நான் சொன்னேன். இப்போது யார் பேசவேண்டுமோ பேசுங்கள்.

*(உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ச. அழகிரி ஆகியோர் எழுந்து நின்றனர்)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில்தான் விவாதிக்கலாமே தவிர, சட்டமன்ற நேரத்தை இந்தப் பிரச்சினைக்காக, விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர்களும் தலைவர் மூலமாக அலுவல் ஆய்வுக் குழுவில், எவ்வளவு நேரம் வேண்டும் என்று பங்கிடுவதைப் பற்றிப் பேசிக்கொள்ளலாமே தவிர—மரபைக் காப்பாற்ற வேண்டுமென்று அங்கே சொல்லலாம்—இங்கே விவாதிக்க வேண்டிய நேரத்தில்; வரவு-செலவுத் திட்டத்தின்மீது



2000 மார்ச் 28] [பேராசிரியர் க. அன்பழகன்]

பேசவேண்டிய நேரத்தில் இந்த விவாதத்தைச் செலுத்த வேண்டாமென்று தங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** 3 பேர்களையாவது பேசவிடுவதுதான் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்படியெல்லாம் எழுந்து பேசுவது முறையல்ல. நீங்கள் இப்படியெல்லாம் மிரட்டாதீர்கள். அந்த வேலையை எல்லாம் என்னிடத்தில் வைத்துக்கொள்ளாதீர்கள். ஒழுங்காக இருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய பேராசிரியர் அவர்கள் சொன்னதுபோல, இன்று அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி எங்களுக்கு இந்த வாய்ப்பை அளிக்குமாறு உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவரும் இந்தப் பேரவைத் தலைவரை மிரட்டிக் காரியம் சாதிக்க முடியாது. ஞானசேகரனுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். "எழுந்து நின்று சத்தமாகப் பேசினால், என்ன," என்று நினைக்கிறீர்கள். திரு. பி.ஆர். சுந்தரம், உங்களுக்கென்ன?

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நேரத்தைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். நாங்கள் பேசியது 28 நிமிடங்கள், 18 நிமிடங்கள் என்று கூறுகிறீர்கள். நான் பேசும்போது வேண்டுமென்றே ஆளும் கட்சி அமைச்சர்கள் குறுக்கிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நேரத்தைக் குறிப்பிடுவது பற்றி நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். பிறகு நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் சொல்கிற கருத்து எனக்குப் புரிகிறது. நான் சொல்வதை என்ன என்று கேளுங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், எந்தக் கட்சி உறுப்பினர்கள், எந்த அமைச்சர்கள் பேசினாலும் நீங்கள் குறுக்கிடுகிறீர்கள். அந்த நேரத்தை உங்களுக்கு ஒதுக்குவதில்லை. அவர்கள் நேரத்தில்தான் ஒதுக்குகிறேன். உட்காருங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** என்னுடைய நேரத்தில் குறுக்கீடுகளையும் சேர்த்துவிடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மற்றவர்களின் நேரத்தில் இதுமாதிரி குறுக்கிடுகிறீர்கள். நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் வரவு-செலவுத் திட்டத்தைப் படிக்கும்போதே 10 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அதை எந்தக் கணக்கில் சேர்ப்பது? உட்காருங்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) முன்பண மானியக் கோரிக்கைகள் 2000-2001 மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2000-2001*-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:



"In pursuance of Clause 2 of Art. 206 read with Clause 3 of Art. 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants in advance during the financial year 2000-2001."

*முற்பகல் 10-55*

## 6. முன்பண மானியக் கோரிக்கைகள், 2000-2001, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001* ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2000-2001* ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய *27-3-2000* ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை *2000-2001* ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## நிறைவேற்றப்பெற்ற 2000-2001 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 1. நில வருவாய்த் துறை | 3,56,78 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 6,01,64 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 8,17,11 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 31,18,55 |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 3,17,69 |
| 6. ஆவணப் பதிவு | 13,14,25 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 2,81,63 |
| 8. தேர்தல்கள் | 7,92,75 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 44,69,68 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 3,30,11 |
| 11. மாவட்ட நிருவாகம் | 1,44,38,97 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 6,23,60 |
| 13. நீதி நிருவாகம் | 35,38,84 |
| 14. சிறைச்சாலைகள் | 13,96,93 |
| 15. காவல் துறை | 2,63,42,24 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 17,94,94 |
| 17. கல்வி | 11,62,23,79 |
| 18. மருத்துவம் | 1,89,57,87 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 1,26,10,09 |



| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| 20. வேளாண்மை | 2,19,31,63 |
| 21. மீனளம் | 12,45,73 |
| 22. கால்நடை வளர்ப்பு | 43,96,84 |
| 23. கூட்டுறவு | 16,62,21 |
| 24. தொழில்கள் | 4,05,68 |
| 25. கைத்தறியும், துணித் தொழிலும் | 46,68,98 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 8,02,14 |
| 27. ஊரக வளர்ச்சி | 3,29,88,51 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 33,11,64 |
| 29. சமூக நலன் | 1,55,87,87 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 86,56,46 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 39,08,25 |
| 32. வீட்டு வசதி | 16,86,85 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 9,62,81 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 4,67,03,16 |
| 35. பாசனம் | 88,45,47 |
| 36. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 34,96,72 |
| 37. சுற்றுச் சூழல் | 2,21,53 |
| 38. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 1,34,54,71 |

| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகள் | 5,47,92 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 17,93,34 |
| 41. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 6,48,24,25 |
| 42. பல்வகை | 98,60,27 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 15,63,11 |
| 44. காட்டுவளத் துறை | 41,21,88 |
| 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 19,69,59 |
| 46. செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 4,59,01 |
| 47. ஊரகத் தொழில்கள் | 20,15,35 |
| 48. குடிநீர் வழங்கல் | 31,69,86 |
| 49. நகராட்சி நிருவாகம் | 1,38,61,92 |
| 50. சுற்றுலா | 94,95 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 8,45,43 |
| மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு | **48,83,91,53** |
| **(ஆ) வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—** | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 2,68,55 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 1,86,48,47 |
| 55. பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 51,72,78 |
| 56. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1,86,59,74 |



| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 12,33 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 43,38,05 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 5 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 2,07,93,67 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **6,78,93,68** |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்— | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் | 98,32,79 |
| பெருமொத்தம் | **56,61,18,00** |

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. கே.ஆர். இராமசாமி. நீங்கள் இன்றைக்கு ஆரம்பிப்பதனால் உங்களுக்கு 15 நிமிடங்கள் கொடுக்கிறேன். மற்ற எல்லா உறுப்பினர்களுக்கும் 10 நிமிடங்கள் கொடுக்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்களுக்குப் பிறகு, அங்கே நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு, தென் மாவட்டங்களிலே முழுமையாகச் சுற்றுப்பயணம் செய்து, அந்தப் பகுதிகளுக்கு என்னென்ன தேவை என்பதைத் தெளிவாக நமது அரசுக்கு, தனது அறிக்கையின் ஒரு பகுதியில் வழங்கியிருக்கும் என்று நான் நம்புகிறேன். தென்மாவட்டங்களிலே ஏற்பட்ட சாதிக் கலவரங்களை வரும் காலங்களிலே தடுப்பதற்கான நல்ல முயற்சி இது. ஆனால், அந்தக் குழு பரிந்துரை செய்தவற்றை நமது அரசு செயல்படுத்த வேண்டும். இப்போது நமது அரசு அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்று, நாங்குனேரியிலே Hitech தொழில் பூங்கா ஒன்றை ஏற்படுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள்; அது வரவேற்கத்தக்கது. ஆனால், இதற்குப் போதிய நிதி வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. சென்ற ஆண்டிலேயே இது அறிவிக்கப்பட்டது; இந்த ஆண்டிலும் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான நிதியாதாரங்கள் ஒதுக்கப்படவில்லை, அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.



இதேபோன்று, எங்கள் மாவட்டத்திலே அந்தக் குழு பரிந்துரை செய்ததிலே, சிவகங்கையிலே கிராஃபைட் தொழிற்சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகளாக கிராஃபைட் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிவருகிறார்கள். ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அதற்கான அறிவிப்பு இல்லை; நிதியும் ஒதுக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்பது எனக்குப் புரியவில்லை. எங்களது மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்த கிராஃபைட் தொழிற்சாலையை விரிவுபடுத்துவது ஒன்றுதான் அங்கே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கிறது. அதையும் அவர்கள் இழந்தால், அந்தப் பகுதியிலே எந்தத் தொழிலும் முன்னேறுவதற்கான அறிகுறிகளே இல்லை. தென் மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் எந்தத் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த அரசு முன்வரவில்லை. இந்த நிலையில், அங்கே கிடைக்கக்கூடிய அந்த கிராஃபைட்டை வைத்து, தொழிற்சாலை தொடங்கவில்லையென்றால், அந்தப் பகுதி மக்களால் தொழில் வளத்தைப் பெருக்க முடியாது. இந்த நிலையைப் புரிந்து, நமது அரசு அந்தத் தொழிற்சாலையை உடனடியாக விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எந்தச் சலுகையும் அறிவிக்கவில்லை. இப்போது திரைப்படத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு, அவர்கள் கேட்ட சலுகைகளையெல்லாம்

வழங்கியிருக்கிறீர்கள். ஆனால், விவசாயத்தை நம்பி 80 சதவிகித மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் எந்தச் சலுகையையுமே அறிவிக்கவில்லை. விவசாயிகள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று நாம் கூறுகிறோம். ஆனால், விவசாயிகளினுடைய நிலை, மிக மிக மோசமாக இருக்கிறது. யூரியா உரத்தினுடைய விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. கரும்புக்கு அதிகமான விலை வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். அரசாங்கம் ஏறத்தாழ ஒரு டன்னுக்கு ரூ. 742 நிர்ணயித்திருக்கிறது என்று எண்ணுகிறேன். ஆனால், தனியார் சர்க்கரை ஆலைகள் அதைக் கொடுப்பதற்குக்கூட மறுக்கிறார்கள். 600 அல்லது 660 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. இந்த நிலையெல்லாம் அரசுக்குத் தெரியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. அரசாங்கம் கரும்பினுடைய விலையை...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையிலே இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார்கள். 8.5 சதவீத கட்டுமானத்திற்கு 740 ரூபாய் வீதம் கணக்கிட்டு அதிகபட்சமாக அவர்கள் கேட்கிறபோது, அதிகபட்சமாக ரூ. 922.80 காசு அளவுக்குக்கூட கரும்புக்குச் சில ஆலைகளில் விவசாயிகளுக்குத் தரப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால், மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரையோடு மாநில அரசாங்கம் பரிந்துரை செய்யக்கூடிய விலையைத் தனியார் ஆலைகள் கொடுக்காமல் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கியிருக்கிறார்கள். இருந்தாலும், "அவர்களை அழைத்து நாங்கள் பேசுவோம்" என்றுதான் நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறாரே தவிர, ஒன்றுமே சொல்லவில்லை என்று சொல்லக்கூடாது. (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் ஆலைகள் நீதிமன்றத்திலே சென்று தடையாணை வாங்கியிருக்கிறார்கள் என்று சென்ற கூட்டத் தொடரிலேயிருந்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதே பதிலையே சொல்லி வருகிறார்கள். அந்தத் தடையாணையைத் தகர்ப்பதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? அரசாங்கத்தை மீறி தடையாணை பெற்ற அவர்களை, நீங்கள் அழைத்து கடுமையாக ஏன் பேசவில்லை? அல்லது, வேறுவிதமான நெருக்கடிகளைக் கொடுத்து, அவர்களை ஏன் நீங்கள் உங்களுடைய வழிக்குக் கொண்டுவரவில்லை? தனியார் ஆலைகளுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படுவதற்கான காரணம் என்ன? ஓராண்டிற்கு மேலாக, இதே பதிலையே சொல்லி வந்தால், கரும்பு உற்பத்தி



செய்கின்ற விவசாயிகளினுடைய வாழ்க்கை நிலை எவ்வளவு பாதிக்கப்படும் என்பதையெல்லாம் அரசாங்கம் ஆராய்ந்து பார்த்ததா? இதற்கெல்லாம் அரசாங்கத்தினுடைய பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் ஆலைகள், சட்ட ரீதியாக நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். மாநில அரசாங்கம் பரிந்துரைகளைச் செய்வதற்குச் சட்டத்திலே இடமில்லை என்றும், மத்திய அரசாங்கம்தான் பரிந்துரைகளைச் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, மாநில அரசாங்கம் பரிந்துரைகளைச் செய்யக்கூடாது என்று தடையுத்தரவை வாங்கினார்கள். பிறகு, அந்தத் தடையுத்தரவை நீக்க வேண்டுமென்று அவசர பெட்டிஷன் போட்டு, அந்தத் தடையுத்தரவை, Single Bench Court-லே நீக்கினோம். நீக்கிவிட்டு, அவர்களைக் கூப்பிடலாம் என்று நாங்கள் முடிவு செய்யும்போது, அவர்கள் Full Bench-லே appeal செய்தார்கள். Full Bench-லே மீண்டும் appeal செய்து, "தனியார் ஆலைகளைக் கட்டாயப்படுத்தி, அவற்றின் உரிமையாளர்களைக் கூப்பிட முடியாது; அவர்கள் முத்தரப்பு மாநாட்டிற்கு வந்து கலந்துகொண்டால், அவர்கள் ஒப்புக்கொண்டால், மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரைகளைக் கொடுக்க முன்வரலாம்; அவர்கள், ஒப்புக்கொள்ளாவிட்டால் அல்லது முத்தரப்புக் கூட்டத்திற்கு வராவிட்டால், நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது" என்று மீண்டும் தடை விதித்தார்கள். அந்தத் தடையையும் நீக்க வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பிலே, Advocate-General இடம் சொல்லி, petition போட்டிருக்கிறோம். நாம் ஒன்றும் சும்மா இருக்கவில்லை. ஆகவே, தொடர்ந்து நாங்கள் அந்த முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமசாமி பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு Clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமசாமி அவர்கள் பேசட்டும். திரு. இராமசாமி, (குறுக்கீடு) இது முறையல்ல, ஏற்கெனவே பேரவைத் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார்கள். திரு. இராமசாமி பேசியதில், அமைச்சர் ஒரு பதில் சொன்னார். அதிலே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை திரு. அழகிரி எழுப்பினார். அதற்கான பதிலை அமைச்சர் தந்து விட்டார். எனவே, திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். திரு. இராமசாமி, தொடர்ந்து பேசுங்கள்.

*முற்பகல் 11-05*

**திரு. கே.ஆர். இராமசாமி:** அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடிய விலையை தனியார் சர்க்கரை ஆலைகளிலும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்பது நமது தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுடைய எண்ணம். இதை, வாங்கிக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டில், நமது அமைச்சர் அவர்கள், துடிப்பாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு சட்டமன்ற உறுப்பினர் சிபாரிசு செய்தால், ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு, கண்மாய்களைத் தூர் வாரிக் கொடுப்பதாகக் கூறினார்கள். முதற்கட்டமாக, ஓராண்டு அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து தந்தார்கள். பல தடவைகளிலே, பல முறை கடிதங்கள் எழுதி, நினைவூட்டினார்கள். ஆனால், இப்போது அந்த நிலை என்னானது என்பது எனக்குப் புரியவில்லை. டெண்டர்கள்கூட கோரப்பட்டு, இப்பொழுது, அந்த வேலைகள் எல்லாம் செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. உயர் அதிகாரிகளை அணுகிக் கேட்டபோது, இன்னும் நிதித் துறையிலிருந்து நிதி போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். நமது தமிழக அரசைப் பொறுத்தமட்டில், தமிழக அரசிலே போதிய நிதி இருக்கிறதா, இல்லையா என்றே சந்தேகப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. "சட்டியிலே இருந்தால்தான், அகப்பையிலே வரும்" என்பது ஒரு பழமொழி. இதுபோன்ற நல்ல காரியங்களுக்கு, செய்யக்கூடிய நல்ல திட்டங்களுக்கு, நீங்கள் அதிகமாக நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டுகூட, நீங்கள் தூர்வாரும் பணிக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக நான் எண்ணுகிறேன். தூர்வாரும் பணிக்கு, 50 கோடி



ரூபாய் என்பது, நிச்சயமாக மிகமிகக் குறைவு. இதை நீங்கள் அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிநீர்ப் பிரச்சினை. குடிநீர்ப் பிரச்சினை என்பது எங்கள் பகுதியிலே தொடர்ந்து இருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் முழுமையாக அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றித் தெரிந்தவர்கள். எங்கள் பகுதிக்கு வருகை தந்து எல்லாத் திட்டங்களுக்கும் அனுமதியும் வழங்கி இருக்கிறார்கள். அதற்காக, அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, உத்தரவிடப்பட்ட பல குடிநீர்த் திட்டங்கள், நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய தொண்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுமார் மூன்று கோடி ரூபாய் அளவிற்கு அனுமதித்து, இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னமும் அந்தப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதுதான் புரியாததாக இருக்கிறது.

சென்ற 1996-97 ஆம் ஆண்டிலே, குழுமை வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தில் ஏறத்தாழ, தமிழகத்திலே 65000 வீடுகள் என நிர்ணயிக்கப்பட்டன. இந்த ஆண்டிலே, அது 31000 வீடுகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம், ஏன் குறைத்தீர்கள் என்பதையும் நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டுமுறை இந்த அவையில் அதைப்பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் சென்ற ஆண்டிற்கு முதல் ஆண்டு அனுமதித்து வழங்கிய தொகையின் அடிப்படையில், நாம் வீடுகள் கட்டுவதற்குக் காலதாமதமாகும் என்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் முதலிலேயே, நாம் எல்லாவற்றையும் ஆரம்பிக்கும்படி சொல்லிவிட்டோம். அதன் அடிப்படையில் ஒதுக்கீடு செய்து, கட்ட ஆரம்பித்து விட்டார்கள். அதற்குப் பிறகு அந்த நேரத்தில் 40 ஆயிரம் வீடுகள் கட்டக்கூடிய அளவிற்கு அவர்கள் பணம் தருகிறோம் என்று வாக்குறுதி தந்தார்கள். அதற்குப்பிறகு, பணம் கொடுக்கும்போது 30 ஆயிரம் வீடுகளுக்குமேல் கட்ட முடியாத அளவிற்குத்தான் தந்தார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் சென்று, "இப்படி அனுமதி கொடுத்துவிட்டோம், கட்டி முடித்துத்தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது, ஆகையினாலே, நீங்கள் அதற்குரிய தொகையைத் தரவேண்டும்" என்று அவர்களிடத்திலே வேண்டினேன். 47 கோடி வரை தனியாக அளித்தார்கள்.

அதற்கு முன்னாலேயே 80:20 ஆக இந்தத் திட்டம் இருந்தது. மத்திய சர்க்கார் 80 சதவீதம், மாநில சர்க்கார் 20 சதவீதம் என இருந்தது. இதைத் தாண்டி 7,000 ரூபாய், வீட்டிற்கு நாம் கூரை வேய்வதற்கு, கான்கிரீட்டுக்குத் தனியாகக் கொடுத்து வந்தோம். இப்பொழுது கணக்கெடுத்துப் பார்த்தால், சென்ற ஆண்டு நாம் 60 சதவீதம், அவர்கள் 40 சதவீதம் என்று வந்திருக்கிறது. அவ்வளவு நிதி நெருக்கடியிலேயும் அதைச் செய்திருக்கிறோம். இருந்தாலும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற அளவிற்கு அந்த ஆண்டு முடிந்து விட்டது. இந்த ஆண்டு 31,000 வீடுகளுக்குத்தான் அனுமதியே வழங்கியிருக்கிறார்கள். அதைத்தான் செய்ய இயலும்.

முற்பகல் 11-10

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், 1996-97 ஆம் நிதி ஆண்டில் 65,000 தொகுப்பு வீடுகள் நீங்கள் கட்டினீர்கள். ஆனால், 2000-2001-ல் 31,000 தொகுப்பு வீடுகளாக அது குறைந்திருக்கிறது. ஆக, அது சரிபாதியாகி, 50 சதவிகிதம் வளர்ச்சிப் பணிகள் கிராமப்புறங்களிலே குறைந்திருக்கின்றன. இதற்குக் காரணம் மத்திய அரசாங்கத்திடமிருந்து உங்களால் . . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அதிலே ஒரு திருத்தம். இவற்றைப் பற்றி மானியக் கோரிக்கையிலே விவாதிப்பது நல்லது. வளர்ச்சிப் பணிகள் குறைந்திருக்கின்றன என்று ஒட்டுமொத்தமாகச் சொல்வது தவறு. இப்பொழுது, நாம் பேசிக் கொண்டிருப்பது, விவாதித்துக் கொண்டிருப்பது, தொகுப்பு வீடுகளைப் பற்றிய விவரங்கள். தொகுப்பு வீடுகள் குறைந்திருப்பதற்கான காரணம், மத்திய அரசாங்கம் நிதியைப் பாதிக்கு மேல் குறைத்துவிட்டது. இன்னும், சுருக்கமாகச் சொல்லப் போனால், எந்த மாநிலத்திலேயும் இந்த அளவிற்கு கான்கிரீட் வீடுகள் கட்டப்படவில்லை. அவர்களுக்கு அந்தத் தகவல் போய்ச் சேரவில்லை. அவர்களுக்குக் கொடுக்கிற பணத்தை அப்படியே மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். ஆகையினாலே, அதைப்பற்றி அவர்கள் கவலைப்படாமல் இருக்கிறார்கள். நாம் பொறுப்பேற்று அதைச் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, இந்த நேரத்தில் வளர்ச்சிப் பணிகள் பாதியாகக் குறைந்து விட்டன என்று சொன்னால், நான் வரிசையாகப் படிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும். மானியக் கோரிக்கை வருகிறது. அந்த மானியக் கோரிக்கையிலே இதைப்பற்றி நிறைய விவாதிக்கலாம்.



**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. உங்கள் உறுப்பினரின் நேரத்தை நீங்களே அதிகமாக எடுத்துக்கொள்கிறீர்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரை, வளர்ச்சிப் பணிகள் பாதியாகக் குறைந்து விட்டன என்று நான் சொல்கிறேன். அதாவது 65,000 வீடுகள் என்பது 31,000 வீடுகளாகக் குறைந்தால், சரி பாதியாகக் குறைந்திருக்கிறது என்றுதான் பொருள். மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த அரசினால் இதற்கான நிதியைப் பெற முடியவில்லை. "உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம்" என்று சொன்ன தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே அங்கம் வகிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், 1996-97-லே ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலே பெற்ற தொகையை தேசிய ஜனநாயக முன்னணியிலே பெற முடியாமல் போனதற்குக் காரணம் என்ன? எந்தக் காரணத்தைக் கொண்டு 50 சதவிகித அளவிற்கு தொகுப்பு வீடுகளுடைய வளர்ச்சிப் பணிகள் குறைந்திருக்கின்றன? இது கிராமப்புற வளர்ச்சியைப் பாதிக்காதா? அரசு இதில் அக்கறை காட்டவில்லையா? அக்கறை காட்டாததற்கானக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே அவர்கள் குறைத்திருந்தாலும், தலைப்புகள், பெயர்கள், இவை மாற்றப்பட்டு, இணைக்கப்பட்டு, திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர மற்ற வகைகளில் அவர்கள் கூடுதலாகத் தான் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் தெரிந்து கொண்டிருக்கிற ஓர் உண்மை, மற்ற மாநிலத்தவர்கள் யாரும் இந்த இலவச வீடு கட்டுகிற திட்டத்தை ஏற்றுக் கொண்டு, நம்மைப்போல் நிறைவேற்றாமல் இருக்கிற காரணத்தால், அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்துக் குறைத்ததால், நாமும் அதில் அடிபட்டு விட்டோம். இவ்வளவுதான்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி, பேசி முடிக்கட்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வீடில்லாத ஏழைகள் அதுவும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள் மிக, மிக அதிகம். மேலும், தொகுப்பு வீடுகள் கட்டுகின்ற பணி இங்கு தமிழ்நாட்டில் துரிதமாக நடைபெறுகிறது. சிறப்பாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழ்நாட்டிற்கு என்று அதிகமாகக் கேட்பதற்கு, தமிழ்நாடு அரசு முயற்சி செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால், மற்ற மாநிலங்கள் நிறைவேற்றாத அந்தத் திட்டங்களைக்கூடக் கேட்டு அதிகம் பெறுவதற்கு முயற்சி செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. ஏன் என்றால், எந்த கிராமத்திற்குச் சென்றாலும், தொகுப்பு வீடுகள்தான் மிக முக்கியமான கோரிக்கையாக இருக்கக்கூடிய பட்சத்தில், கடந்த . . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாகவும், இன்னும் சில நிதி குறைக்கப்பட்டதன் அடிப்படையிலேயும், இரண்டு முறை பிரதமருக்கும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எங்கள் துறையின் மூலம் நானும் அதைத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு கிருஷ்ணசாமி அவர்கள் சொல்வதைப்போல் அதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுப்போம்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது. இப்பொழுது, பாதி அளவிற்கு இந்தக் குழும வீடுகளுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. நான் உங்களை வேண்டிக்கொள்வதெல்லாம், மத்திய அரசாங்கத்திடமிருந்து நீங்கள் அதை அதிகமாகப் பெற வேண்டும் என்பதுதானே ஒழிய வேறல்ல.

*முற்பகல் 11-15*

மற்றொன்று. இப்போது உள்ளாட்சித் துறைக்குப் பல வழிகளிலே வந்துகொண்டிருந்த நிதியாதாரங்கள் குறைந்திருக்கின்றன. நீங்கள் புதிய புதிய திட்டங்களின் பெயர்களைச் சொல்லிக்கொண்டே போகிறீர்களே தவிர நிதியாதாரங்களை அதற்காக ஒதுக்காமல் ஒரு திட்டத்திலிருந்து இன்னொரு திட்டத்திற்கு அந்த நிதியாதாரங்களை மாற்றுகிறீர்கள். நீங்கள் புதிய திட்டத்தை அறிவிப்பதிலே மகிழ்ச்சிதான். ஆனால் அதற்குத் தனியாக நிதி ஒதுக்கவேண்டுமேயொழிய, ஒவ்வொரு பழைய திட்டத்திலே இருக்கக்கூடிய நிதியை திசைதிருப்பக் கூடாது; புதிய புதிய திட்டங்களுக்காகப் பழைய திட்டங்களினுடைய அளவைக் குறைக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இன்னொன்று, எங்களது இராமநாதபுரம் மாவட்டத்தில் காட்டாவளாகம் என்ற ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. தேர்தல் முடிந்ததிலிருந்து இதுவரையிலும் அந்தப் பஞ்சாயத்து செயல்படாத நிலையில் இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்தினுடைய தலைவர் ரூ. 4½ இலட்சம் அளவிற்குக் குழும வீடுகள் கட்டுவதிலே தவறு செய்திருக்கிறார் என்று அந்த மாவட்டத்தினுடைய திட்ட அலுவலர் பத்திரிகையிலே செய்தி சொல்லியிருக்கிறார். அந்தப் பஞ்சாயத்தைப் பொறுத்தமட்டில் இதுவரையிலும் எந்த வேலைகளும் அங்கே நடக்கவில்லை. அங்கே ஒரு தெரு விளக்குக்கூட மாற்றப்படாத நிலை இருக்கிறது. என்ன காரணத்தினால் அந்தப் பஞ்சாயத்தில் வேலைகள் செய்யப்படாமல் இருக்கின்றன? தவறு செய்தவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. உயர்மட்ட அதிகாரிகள் வரை, மாவட்ட ஆட்சித் தலைவர் வரை இந்தத் தகவல் கூறப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகள் வரை காத்திருந்து, சட்டமன்றத்தில் பேசுகிறபோதுதான் இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை. எப்போது வேண்டுமானாலும் என்னிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கலாம். இப்போதும் பேச்சு முடிந்த பிறகு அவர் எழுதித் தருவாரேயானால், உரிய நடவடிக்கை நாளையிலிருந்து எடுக்கப்படும்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** பல வழிகளிலே இதை உங்களது கவனத்திற்கும் நான் கொண்டு வந்திருக்கிறேன். நான் முழு விவரத்துடன் அதை எழுதித் தருகிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியிலே சாலை வசதி மிக மிக மோசமான நிலையிலே இருக்கிறது. எங்களது பகுதியிலே இருக்கக்கூடிய கடற்கரைச் சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கின்றன. புதிய திட்டத்திலே சாலைகள் அமைப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் இன்னும் அந்தப் புதிய திட்டம் - கிழக்குக் கடற்கரைச் சாலையினுடைய திட்டம்- நிறைவேற்றப்படவில்லை. எங்கள் பகுதியிலே இப்போது இருக்கக்கூடிய சாலைகளிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள்கூட நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதை நீங்கள் உடனடியாக கவனித்து அந்தப் பகுதியிலே . . .

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதைப் போல கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் உலக

வங்கி நிதியாதாரத்துடன் செயல்பட இருக்கிறது. அதற்கான எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. சுற்றுப்புறச் சூழல் அமைச்சகத்திலேயிருந்து அதற்குரிய ஒப்புதல் பெறப்பட வேண்டும். அதற்கு ஓர் ஒப்புதல் வந்திருக்கிறது. வருகிற 31 ஆம் தேதி மறுபடியும் ஒரு கூட்டம் நடக்கிறது. அந்தக் கூட்டத்திற்குப் பிறகு அந்த ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். சுற்றுப்புறச் சூழல் ஒப்புதல் கிடைத்த பிறகு, உலக வங்கியினுடைய நிதியாதாரம் கிடைக்கும். அதற்குப் பிறகுதான் அதைச் செயல்படுத்த முடியும்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** அந்த வேலைகளை விரைவுபடுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி கிராமங்கள் நிறைந்த தொகுதி. கிராமப்புறச் சாலைகள் அதிகமாக அமைத்துத் தரவேண்டிய நிலையிலே இருக்கிறது. சென்றுகொண்டிருந்த பேருந்துகள்கூட பல இடங்களிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. கிராமப்புறச் சாலைகள் திட்டத்தில் எங்கள் பகுதி முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகிறது. அந்தப் பகுதியிலே இன்னும் நீங்கள் அதிகமான சாலைகளை ஏற்படுத்தித் தர வேண்டும். பல தினங்களில் கூறியும்—(மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.—இன்னும் எங்களுக்கு சாலைகளை ஏற்படுத்தித் தரவில்லை. நீங்கள் உடனடியாக எங்களுக்கு அவசியமாக, அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு, சாலைகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதிக்கு வருகை தந்திருந்த நமது மரியாதைக்குரிய உறுப்பினர், அண்ணன் சு.ப. தங்கவேலன் அவர்கள்கூட அந்தப் பகுதிக்கு வந்திருக்கிறார்கள். அங்கேகூட ஒரு பொதுக் கூட்டத்திலே பேசும்போது "இந்தப் பகுதி அநாதையாக இருக்கிறது; இந்தப் பகுதியிலே சாலைகள் எல்லாம் மிக மிக மோசமாக இருக்கின்றன" என்று கூடப் பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலை எங்கள் பகுதியிலே இருக்கிறது. அதை நீங்கள் சரிசெய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

தேவகோட்டை நகரிலே சில பிரச்சினைகள் சம்பந்தமாக முதலமைச்சரைச் சந்தித்து நானும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சில விவரங்களைக் கூறினோம். நவம்பர் மாதம் 18 ஆம் தேதி பட்டு குருக்கள் என்பவர் கொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாகவும் அங்கே இருக்கக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் சம்பந்தமாகவும் முதல்வரிடம் விவரமாக எடுத்துக் கூறினோம். முதல்வர் அவர்கள் அங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சினைக்காக நல்ல நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த பட்டுகுருக்கள் அவர்கள் இறந்து



ஏறத்தாழ 130 நாட்கள் ஆகின்றன. அவரைக் கொன்ற கொலையாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த வழக்குகூட . . . முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

*** திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒருசில கருத்துகளை இங்கே கூற விரும்புகிறேன். பொதுவாக, விவசாயிகளாக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் இத்தகைய எல்லாத் தரப்பு மக்களுக்கும் பலன் தருகின்ற பட்ஜெட் இது என்பதை நான் முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

மறைந்துவிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விவசாயி என்ற சினிமாவில் ஒரு பாட்டுப் பாடுவார். 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்' என்று அதிலே அழகான வரி வரும். அதைப்போலச் சொல்ல வேண்டுமானால் நம்முடைய தலைவருடைய பட்ஜெட்டை பொறுத்தவரையில் "எந்தத் தரப்பிற்குத்தான் நன்மை இல்லை இந்த பட்ஜெட்டில்" என்று சொல்லத்தக்க அளவிற்கு இது, எல்லாத் தரப்பு மக்களுக்கும் இன்றைக்கு பலன் தருகின்ற பட்ஜெட்டாக இருக்கிறது.

இங்கே பத்திரிகைகளை எடுத்துக்கொண்டால் 'தினமணி' அதற்காக ஒரு தலையங்கமே எழுதியிருக்கிறது. ஆக "பல துறைகளையும், சமுதாயத்தின் பல முகப்புகளையும் தழுவிய இந்த வரவு-செலவுத் திட்டம் பொலிவு மிக்கது" என்று 'தினமணி' பத்திரிகை தலையங்கம் எழுதி இருக்கிறது. 'இந்து' பத்திரிகை பாராட்டி தலையங்கம் எழுதி இருக்கிறது. வியாபாரிகள் பாராட்டுகிறார்கள். எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆனால் பாராட்ட மனம் இல்லாதவர்கள் இப்போது அவர்களுடைய பழிச் சொல்லைச் சொல்லி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரைத்த மாவையே அரைக்கிறார்கள் என்று ஒரு கருத்தை அவர்கள் பத்திரிகைக்கு இந்த பட்ஜெட்டைப் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது; அவர்கள் புதிதாகத் தேர்தல் உறவு வைத்துக்கொண்டிருக்கின்ற அந்தத் தோழி அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அரைத்த மாவைக்கூட அல்ல, வெறும் ஆட்டுக் கல்லையே ஆட்டி மக்களை

ஏமாற்றிக்கொண்டிருந்தவர் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று, பட்ஜெட் போடுகின்றபோது 5 ஆண்டு பட்ஜெட் போடுகிறார்கள் என்றால் 4 ஆண்டுகள் புதிய திட்டங்களை அவர்கள் அறிவிப்பார்கள். புதிய திட்டங்களை அறிவித்துவிட்டு ஐந்தாவது ஆண்டு, இது ஒரு stock taking என்று சொல்லத்தக்க அளவில் 4 ஆண்டுகளில் போடப்பட்ட திட்டங்கள் நல்ல பலனைக் கண்டிருக்கின்றனவா மக்களைச் சென்றடைந்திருக்கின்றனவா, அதற்கு இன்னும் அதிக நிதி ஒதுக்க வேண்டுமா என்று ஆராய்ந்து பார்த்து அந்த 4 ஆண்டுகளில் போடப்பட்ட புதிய திட்டங்களை நிலைநிறுத்த அல்லது இன்னும் அதைச் செம்மைப்படுத்த ஐந்தாவது ஆண்டில் திட்டம் தீட்டுவதுதான் பொருளாதார தத்துவத்தின் முக்கியமான குறிக்கோள். அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது ஆண்டான இந்த ஆண்டில் மிக அருமையாகச் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சிலர் ஒரு புதுமையான கருத்தைச் சொல்கிறார்கள். யாரை எடுத்தாலும், எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள், இந்த பட்ஜெட்டிலே புதுமை ஒன்றும் இல்லை, புதுமை ஒன்றும் இல்லை என்கிறார்கள். எனக்குப் புரியவில்லை. நானும் பார்த்தேன். பட்ஜெட்டை திரும்பத் திரும்பப் பார்க்கின்றபோது 21-வது பக்கத்திலிருந்து 24-வது பக்கம் வரை அதிலே பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். நாங்குனேரியில் Hitech Industrial Park, கடலூரில் Industrial Park, சென்னையில் Garment Park, ஓசூரில் Floriculture Park, சென்னையில் டிட்கோவுடன் சேர்ந்து Petro Chemical Plant ரூ.6,000 கோடி; கேளம்பாக்கத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக Bio-Technology Park; அதைப்போல, Information Technology என்பதில் முதலிடம்; டிட்கோ மற்றும் எல்காட்டுடன் சேர்ந்து Software Park; Tamil Key-board ஏற்படுத்தி Tamil Net, 99; ஆக பல புதிய திட்டங்களைத் தந்திருக்கின்றார்கள். நானும் ஒரு Science மாணவன்தான். இந்தத் திட்டங்களைப்பற்றி எனக்கு அதிகமாகப் புரியவில்லை. ஏனென்றால் நான் படிக்கின்றபோது இவையெல்லாம் கிடையாது. ஆகவே, எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் இதை வேண்டுமானால் புரியவில்லை என்று சொல்லலாமே தவிர இதிலே புதுமை இல்லை என்று சொல்லாதீர்கள் என்றுதான் நான் உங்களைப் பணிவாக (மேசையைத் தட்டும் ஒலி) கேட்க இந்த நேரத்தில் விரும்புகின்றேன்.



முற்பகல் 11-25

அதைப்போல, இன்னும் சொல்கிறார்கள். திரும்பத் திரும்ப பட்ஜெட்டிலே புதுமை இல்லை, புதுமை இல்லை என்று நம்முடைய பழைய நண்பர்கள் இதே பல்லவியைப் பாடுகிறார்கள். அவர்களுக்கு ஓர் ஆறுதலான செய்தி. நிச்சயமாக நல்ல பட்ஜெட்டைத் தலைவர் அவர்கள் தந்திருக்கின்றார்கள். 2001 ஆம் ஆண்டிலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் நிச்சயமாக வரும். (மேசையைத் தட்டும் ஒலி). தலைவர்தான், கலைஞர்தான் முதலமைச்சராக வருவார். அப்போது முதல் 4 ஆண்டுகளில் இதைவிடப் புதுமையான திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள் என்ற செய்தியை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல பட்ஜெட்டாக, இந்தியாவிலேயே முதல் தரமான பட்ஜெட்டாக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் ஒரு திராவிட முன்னெற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அல்ல: 5 நோக்கங்களின் அடிப்படையில் இந்த பட்ஜெட்டை நான் அலசிப் பார்க்க விரும்புகிறேன். முதலாவதாக நான் ஒரு வழக்கறிஞர். இரண்டாவதாக ஒரு பெரும் விவசாயி, மூன்றாவதாக ஒரு வணிகரின் மகன். நான்காவதாக ஒரு கல்வியாளர். ஐந்தாவதாக நெல்லை மாவட்டத்துக்காரன். ஆகவே, இந்த ஐந்து நோக்கில் இந்த பட்ஜெட்டை நான் சற்று அலசி ஆராய விரும்புகிறேன். வழக்கறிஞர் என்ற முறையில் நான் பார்க்கிறேன். மதுரையிலே உயர்நீதிமன்றத்தினுடைய கிளை வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை இருந்து வருகிறது. 1982, 1983, 1989 ஆகிய ஆண்டுகளில் அதற்காக வந்திருந்த நீதிபதி ஜஸ்வந் குழுவிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வழக்கறிஞர் என்ற முறையில் நான் வாக்குமூலம் தந்திருக்கிறேன். 1989-ல் சட்டமன்றத்தில் நான் இடம்பெற்ற நேரத்தில் இதற்காகக் குரல் எழுப்பினேன். பிறகு நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே தெரிவித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மதுரை சட்டமன்ற உறுப்பினர் இங்கே குரல் கொடுத்தார். நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் இதற்காகப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். வருகிற புத்தாண்டு தினத்தில் முதலமைச்சர் அவர்கள் மதுரையில் அதற்காக அடிக்கல்லை நாட்டுகிறார்கள் என்ற செய்தியைத் (மேசையைத் தட்டும் ஒலி) தந்திருக்கிறார்கள். அதிலேகூட எவ்வளவு ஒரு கலை நயத்தோடு நம்முடைய முதல்வர் அவர்கள் செய்கிறார்கள் என்பதை நான் வியந்து பார்க்கிறேன். புத்தாயிரத்தாண்டு

முதல் நாள். ஜனவரி ஒன்றாம் தேதி, தென் மாவட்டங்களில் தென்கோடியான கன்னியாகுமரியில் அய்யன் வள்ளுவருக்கு 133 அடி சிலை அமைத்தார்கள். தமிழ்ப் புத்தாண்டு தினத்தில், கண்ணகி நீதியை நிலைநிறுத்திய மதுரையில் உயர்நீதி மன்றத்திற்குக் கிளை அமைக்கிறார்கள் என்றால் இதைவிட கலை நயத்தோடு செய்யக்கூடிய முதலமைச்சர் யார் இருக்கிறார்கள் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்று, வழக்கறிஞர்களாகிய நாங்களெல்லாம் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் ஒரு திருத்தம் வந்த நேரத்தில் Civil Procedure Code Amendment Act-லே சில அம்சங்கள் பாராட்டத் தக்கவை என்றாலும் பல அம்சங்கள் பாதிப்பானவை; வழக்கறிஞர்களுக்கு மட்டுமல்ல; வழக்கு நடத்துபவர்களுக்குத்தான் பாதிப்பைத் தரக்கூடியவை. நாங்களெல்லாம் எதிர்த்துக் குரல் கொடுத்தோம். மற்ற மாநில முதலமைச்சர்கள் யாரும் ஆதரவு குரல் கொடுக்கவில்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டத் துறை அமைச்சரை அழைத்து, வழக்கறிஞர்களை அழைத்துப் பேசச் செய்து, அவர்களிடத்திலேயிருந்து கோரிக்கையைப் பெற்றுத்தந்து சட்டத் துறை அமைச்சரைத் தன்னுடைய தூதுவராக டில்லிக்கு அனுப்பி, அதோடு மட்டுமல்ல ஒரு கடிதத்தையும் அங்கே இருக்கின்ற பிரதம அமைச்சர் அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். 26-2-2000 அந்தத் தேதியில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது

"One of the prime demands of the various Lawyers' Associations throughout the Country is to defer the notification, till the Government of India finds a solution to the best satisfaction of both the lawyers and litigants." என்று அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கடிதமும் தந்து நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் அனுப்பி இன்றைக்கு அதை நிறுத்தி வைக்கச் செய்த பெருமை இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சருக்கு உண்டு என்றால் அது நம்முடைய முதலமைச்சர்தான் என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நான் வழக்கறிஞர்கள் சார்பாகப் பாராட்டுத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்றைச் சொல்வதற்காக நம்முடைய மார்க்சிஸ்ட் தோழர்கள் வருத்தப்படக் கூடாது. மேற்கு வங்கத்திலே முதலமைச்சராக இருக்கின்ற தோழர் ஜோதிபாசு ஒரு பாரிஸ்டர் முதலமைச்சர். அவர்கூடக் குரல் கொடுக்கவில்லை. டெல்லியிலே இருக்கிற முதலமைச்சர் தடியடி நடத்தியிருக்கிறார் வழக்கறிஞர்கள் மீது. ஆனால் வழக்கறிஞர்களுக்காக வழக்கு எடுத்து வாதாடி வெற்றி பெற்ற ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்றால் அது நம்முடைய முதலமைச்சர்தான் என்பதை நான்



வழக்கறிஞர்கள் சார்பாகப் பாராட்ட விரும்புகிறேன். அதேநேரத்தில் All India Bar Council (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். 5 நிமிடங்கள் கொடுங்கள், All India Bar Council மூலமாக தலைவர் கார்வேந்தன் அவர்கள் பாராட்டித் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் வழக்கறிஞர் என்ற முறையில் இதையாவது பாராட்டுவார்கள் என நான் நினைத்தேன். ஆனால் பாராட்டாமல் விட்டுவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

மேலும் உயர்நீதிமன்றத்தில் சேம்பர் வாடகை 100 ரூபாயாக இருந்ததை திடீரென்று 1300 ரூபாயாக மாற்றினார்கள். அது குறித்து தலைவரிடத்தில் வழக்கறிஞர் ஜின்னா மற்றும் வழக்கறிஞர்கள் கோரிக்கை தந்தபோது அதை 400 ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். ஆகையால் வழக்கறிஞர் என்ற முறையில் நான் அவருக்கு வழக்கறிஞர்கள் சமூகத்தின் சார்பாகப் பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், முந்திரிப் பயிரிடுகின்ற திட்டம், புதிய வேளாண்மைக் கொள்கைக்கு முதலமைச்சர் தலைமையில் குழு, விவசாயப் பொருட்களை சேமிக்க குளிர்ப்பதன அறைகள், கிராமங்களில் நமக்கு நாமே திட்டத்தோடு களம் அமைப்பதற்காக 30 கோடி ரூபாய், பாசனத்தை ஒழுங்குபடுத்த சட்டம் நபார்டு வங்கி கடனின் அபராத வட்டி தள்ளுபடி போன்ற நலத் திட்டங்களைத் தந்ததோடு பட்டா புத்தகம் தருவதற்காக எல்லா மாவட்டத்திலும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

அதோடு மட்டுமல்லாமல் உழவர் சந்தையைப் பற்றி ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். நானும் ஒரு விவசாயி. காய்கறிகளை எடுத்துக்கொண்டு அங்கே சந்தைக்குப் போவேன். நம்மிடத்திலே கிலோ 3 ரூபாய் என்றால் வியாபாரிகள் வாங்குவார்கள். நம் கண் முன்னாலேயே 1/2 மணி நேரத்தில் அதை 6 ரூபாய்க்கு விற்பார்கள் இப்போது அதை மாற்றி விவசாயியே காய்கறிகளை கொண்டு வந்து விற்கக்கூடிய நிலைமையை உருவாக்கியது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல வணிகர்களைப் பொறுத்தவரையில், அவர்களே பாராட்டி இருக்கிறார்கள். பட்ஜெட் வருகிறது என்றாலே "ஐயோ வரி என்று பயந்து அலறியடித்து ஓடிய காலம்போய் இன்று பட்ஜெட்

என்றாலே ஆகா வரிச் சலுகை என்று சந்தோஷ மழையில் ஆனந்தக் கூத்தாடும் மகிழ்ச்சியை மக்களுக்குக் கொடுத்தவர் கலைஞர்" என்று தமிழ்நாடு வியாபாரிகள் சங்கம் பாராட்டைத் தெரிவித்திருக்கிறது.

அதைப்போல கல்வியாளர் என்ற முறையில் சொல்கிறேன். இப்போது கல்விக்காக 4949 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். 6000 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நியமனம்; 666 பள்ளிகளில் ப்ளஸ் 2 வகுப்பில் அரசு பள்ளிகளில் இப்போது கம்ப்யூட்டர் சொல்லிக் கொடுப்பதற்காக அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 212 புதிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பித்து இப்போது அதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள் அப்போது நம்முடைய முன்னோர்கள் எல்லாம் "கோவில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்றார்கள். இப்போது நம்முடைய கலைஞருடைய ஆட்சியில் கலைக்கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஒரு கொள்கையை உருவாக்கி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

நெல்லையைப் பொறுத்தவரையில் அது 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடிய பாரதியார் பிறந்த மாவட்டம். அந்த மாவட்டத்தில் சாதியினாலே பூசல்கள், சாதிச் சண்டைகள், சமயச் சண்டைகள் உண்டாயின. நாங்கள் எல்லாம் அதை எப்படிப் போக்குவது என்று தேம்பியிருந்த நேரத்திலே இன்னொரு பெரியார் பிறக்க வேண்டுமா? அல்லது ஒரு அண்ணா அவதரிக்க வேண்டுமா? அல்லது பெருந்தலைவர் காமராஜர் வரவேண்டுமா? என்று கருதிய நேரத்தில் 3 தலைவர்களின் மொத்த உருவமாக எங்களுடைய கண்களுக்குத் தெரிந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். இப்போது அவர்கள் ஜஸ்டிஸ் இரத்தினவேல்பாண்டியன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்கள். அதிலே கூட எத்தனை நேர்த்தி என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இரத்தினவேல்பாண்டியன் அவர்கள்தான் தலைவர், நெல்லையைச் சேர்ந்த அவர் முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்தவர். அதிலே உறுப்பினர் சீதாராமதாஸ், அவர் I.A.S. அதிகாரி. குமரி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர், தாழ்த்தப்பட்டவர். வெங்கட்ராமன், பாளையைச் சேர்ந்தவர் விவசாயத் துறை நிபுணர். யாதவர். அதையெல்லாம் இணைக்கின்ற Member Secretary முக்கூடலைச் சேர்ந்தவர், I.A.S. அதிகாரி , முருகன்; அவர் நாடார். ஆகவே இந்தக் குழுவை அமைப்பதிலேகூட ஒரு நல்ல நோக்கத்தோடு எல்லா தர இன மக்களுக்கும் இடம் தந்து அமைத்து இன்று அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையைச் செய்து பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். நாங்குனேரியில் High-tech



Industrial Park; கன்னியாகுமரியில் 14 கோடியில் ரப்பர் உற்பத்தி; இப்படி எத்தனையோ திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறார்கள்.

நெல்லை அபிஷேகப்பட்டியில் கேட்பாரற்று 1000 ஏக்கர் நிலம் கால்நடைப் பண்ணையாக இருந்தது. அதிலே மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு 500 ஏக்கர் நிலத்தை கலைஞர் அவர்கள் தந்தார்கள். இப்போது அதை நல்ல முறையில் முன்னேற்றி, "அதிலே ஆடு வளர்க்கவும் மற்றும் பல திட்டங்களை உருவாக்கவும் இருக்கிறோம்" என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒரே ஒரு வேண்டுகோள். அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையை நீங்கள் மேம்படுத்துவதோடு சென்னையிலுள்ள Tamil Nadu Veterinary and Animal Sciences University-யின் கிளை ஒன்றை அதாவது sub-centre ஒன்றை அதே இடத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல கோரிக்கையை இந்த நேரத்திலே வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

***திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியின் அடித்தளத்திலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு தீர்வு காண வேண்டும் என்று அந்தக் கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்காக நல வாரியம் அமைத்து இருப்பதை முதலிலே நான் வரவேற்கிறேன். அந்த நல வாரியத்தினுடைய பணிகள், வேகமாகச் செயல்படுவதற்கும், விவசாயத் தொழிலாளர்களுடைய நலனிலே மிகுந்த அக்கறையைக் காட்டுவதற்குமான ஒரு நல்ல நிர்வாக அமைப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரு. கோலப்பன், I.A.S., அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தமிழ்நாடு முழுவதும் சென்று விவசாயத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்தது. பல்வேறு குழுக்களினுடைய அறிக்கைகள் எல்லாம் இந்த மாமன்றத்திலே

வைக்கப்படுகின்றன. எனவே, திரு. கோலப்பன் அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டுள்ள அந்தக் குழுவினுடைய முழு அறிக்கையையும் இந்த மாமன்றத்திலே முழுமையாக வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் கடன் தள்ளுபடி சம்பந்தமாக நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நபார்டு வங்கி ஒத்துக்கொள்ளவில்லை, அதனால் கடன் தள்ளுபடி சம்பந்தமாக எந்த முடிவையும் எடுக்க முடியாது என்று தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு 94 இலட்சம் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி இந்த ஆண்டு 103 இலட்சம் டன்னுக்கு உயர்ந்திருக்கிறது. எனவே, இந்த அளவு உயர்வுக்கு விவசாயிகள் எந்த அளவுக்குச் சேற்றிலே வேலை செய்திருப்பார்கள் என்பது நாம் அறியாதது அல்ல. ஆனால், நாம் நபார்டு வங்கியைக் காரணம் காட்டுகிறோம். நம்முடைய நிதிநிலை அறிக்கையில் மொத்த செலவு என்பது 21,564.87 கோடி ரூபாயாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயிகளுடைய கடன் அளவு என்பது ரூபாய் 300 கோடியிலிருந்து ரூபாய் 500 கோடி ரூபாயாக இருக்கும். இந்த 300 கோடி ரூபாய்க்கு மட்டும் நபார்டு வங்கியைக் காரணம் காட்டுகிறோம். நபார்டு வங்கி தமிழக விவசாயிகளை ஆட்சி செய்கிறதா, அல்லது தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய ஒரு ஆட்சியை நடத்துகிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே, நபார்டு வங்கி என்பது விவசாயிகளை நிர்பந்திக்கக்கூடிய ஒரு வங்கியாக இருந்தால், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பாண்டிச்சேரியில் நபார்டு வங்கி கடன் தரவில்லை என்று சொன்னார்களே, அதேபோல் தமிழகத்திலே கூட விவசாய உற்பத்திக்கான கடனை நபார்டு வங்கியிடமிருந்து வாங்காமல் நம்முடைய வளர்ச்சி நிதியிலிருந்தோ அல்லது வேறு நிதிநிலையிலேயிருந்தோ ஒதுக்கிக் கொடுக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வோர் ஆண்டும் வறட்சி ஏற்படுகிறது. மூன்று ஆண்டு காலம் தஞ்சை, திருவாரூர் போன்ற பகுதிகளிலே வெள்ளம் வந்தது. ஆனால் இந்த ஆண்டு சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் போன்ற தென் மாவட்டங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டது. எனவே வெள்ளம், வறட்சி என்பது விவசாயிகளுக்கு மிகப் பெரிய அளவிலே பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ளதால் விவசாய அழிவுக்காக ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலை அறிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, அதிலிருந்து நிவாரணம் வழங்க மாநில அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, கரும்பைப் பற்றிச் சொன்னார்கள். கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க முடியாவிட்டாலும்கூட, அரசு அறிவித்த தொகையையாவது வழங்க வேண்டும். ஏனென்றால் மாநில அரசு டன் ஒன்றுக்கு 8.5 சதவீத சர்க்கரை சத்து உள்ள கரும்புக்கு 740 ரூபாய் என்று அறிவித்திருக்கிறது. தனியார்கள் அதைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். தனியார் ஆலைகளுக்கும் கூட்டுறவு ஆலைகளுக்கும் அரசு ஆலைகளுக்கும் கரும்பு உற்பத்தி செய்து அனுப்பும் விவசாயிகள் பக்கம் பக்கமாகத் தான் இருக்கிறார்கள். அரசு ஆலையிலே 740 ரூபாய் வழங்கும்போது, தனியார் ஆலையிலேயிருந்து 700 ரூபாய், 714 ரூபாய் தவணையில் வாங்குவது என்பது, அந்தப் பகுதியில் கரும்பு உற்பத்தி செய்து தனியார் ஆலைகளுக்கு வழங்கக்கூடிய விவசாயிகளுக்கு ஒரு மிகப் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது. எனவே இதற்கான ஒரு நல்ல முடிவை அரசு எடுக்கவேண்டும். நாம்தான், மாநில அரசுதான், Licence கொடுக்கிறோம். நாம்தான் கட்டடம் கட்ட அனுமதி கொடுக்கிறோம். தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான எல்லா வசதிகளையும் நாம்தான் ஏற்படுத்திக் கொடுக்கிறோம். ஆனால் மாநில அரசு சொல்வதை ஏற்கமுடியாது, கோர்ட்டுக்குப் போவோம் என்று சொன்னால், இப்பேர்ப்பட்ட தனியார்த் தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுப்பது சம்பந்தமாகவும் நமது மாநில அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, கட்டாயமாக அரசு அறிவித்த தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, கரும்புக்கு டன்னுக்கு 1000 ரூபாயையும் வழங்குவதற்கு வேகமாக மாநில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

தொழிலைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது தமிழகம் என்று முதல்வர் தெரிவிக்கிறார். ஆனால் இப்போது பழமையான தொழிலாக இருக்கக்கூடிய பஞ்சாலைத் தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடப்பட்டு வருகின்றன. மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கையே இல்லை. குறிப்பாக, தனியார் பஞ்சாலைகள் மட்டுமல்ல, சிப்காட் (SIPCOT) போன்ற தொழில் வளாகங்களில் இருக்கக்கூடிய தனியார் ஆலைகளைக்கூட இப்போது மூடிவிட்டுச் செல்லக் கூடிய நிலை இருக்கிறது. என்னுடைய மானாமதுரை தொகுதியில் இருக்கிற சிப்காட் (SIPCOT) தொழில் வளாகத்தில் இருக்கின்ற தனியார் தொழிற்சாலைகளை முழுமையாக மூடிவிட்டுப் போயிருக்கிறார்கள். எனவே, மூடிய ஆலைகளை மற்றும் தொழிற்சாலைகளைத் தொடங்குகின்றபோது நம்முடைய அரசு அனுமதி பெற்று உருவாக்குகிறார்கள். அதே ஆலைகளை, தொழிற்சாலைகளை

மூடுகின்றபோது மாநில அரசு அதற்கும் அனுமதி கொடுக்கிறதா? நினைத்தால் தொழில் தொடங்குவதும் நினைத்தால் யாரையும் கேட்காமல் மூடிவிட்டுப்போவேன் என்ற நிலையும் இருக்குமானால், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி—மற்ற பெரிய தொழில்கள் வளர்ச்சி பெற்றாலும்கூட— சிறிய தொழில்களில் மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். அதன் மூலமாக, தமிழகத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகக்கூடிய ஒரு வாய்ப்புத்தான் ஏற்படுகிறது. தனியார் ஆலைகள் மூடப்படுவதற்கு அரசு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

அடுத்தபடியாக தென் மாவட்டங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மரியாதைக்குரிய தமிழகத்தின் முதல்வர் அவர்கள் சிவகங்கை வந்தபோது, "சிவகங்கை மாவட்டத்தில் கடுமையான வறட்சியாக இருக்கிறது, இதை வறட்சிப் பகுதியாக அறிவிக்கவேண்டும்" என்று நான் ஒரு கோரிக்கையை அவர்களிடம் வைத்திருந்தேன். எனவே இந்த மாவட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவித்து, வறட்சி நிவாரண நடவடிக்கைகளை அங்கே மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே சொன்னதுபோல, உணவு, அதைப்போல குடிநீர்ப் பிரச்சினையிலும் அங்கே இப்போதே மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்த நெருக்கடியிலிருந்து அந்த மாவட்டங்களின் மக்களை மட்டுமல்லாமல், அனைத்து மாவட்ட மக்களையும் பாதுகாக்க வேண்டியது மாநில அரசினுடைய பொறுப்பாகும். எனவே, நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அப்படி நிவாரண நடவடிக்கைகளை எடுக்கும்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு அமைத்து அதன்மூலமாகப் பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மரியாதைக்குரிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் சொன்னதைப்போல, சென்ற சில ஆண்டுகளிலே, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிக்கு ஓர் ஏரி பராமரிப்புக்குப் பரிந்துரை செய்து, அதன் மூலமாக மராமத்துச் செய்யப்பட்டது. ஆனால் போன ஆண்டு அதேமாதிரி நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்த ஏரிகளையெல்லாம் தூர் வாருவது சம்பந்தமாகப் பெயர்களைக் கேட்டிருந்தார்கள். நான்கூடக் கொடுத்திருந்தேன். ஆனால் டெண்டர் விடப்பட்ட நிலையிலேயே அந்த ஏரிப் பணிகள் அப்படியே



நின்றுவிட்டன. இப்போதுகூட இந்த நிதிநிலை அறிக்கையிலே 44 பாசன ஏரிகளைச் செப்பனிடுவதற்காக 19 கோடி ரூபாய், 23 மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறது. 44 பாசன ஏரிகள் என்றால், ஒரு மாவட்டத்திற்கு ஒரு ஏரிதான் வரும். ஏற்கெனவே ஒரு தொகுதிக்கு ஒரு ஏரி என்று இருந்தது. இப்போது மாவட்டத்திற்கு ஒரு ஏரி, என்றால் அநேகமாக எல்லாத் தொகுதிகளுக்கும் கிடைக்காது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது, மாநில நிதியிலிருந்து, தொகுதிக்கு ஒரு ஏரி என்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்தது. இது 'நபார்டு வங்கி'யின் (NABARD BANK) மூலமாக வாங்கிச் செய்கிற வேலை. ஆகையினால் இதற்குத் தொகையும் அதிகமாக இருக்கும். இந்த வேலையானது, வரத்துக் கால்வாய், பாசனக் கால்வாய் ஆகியவற்றின் கரைகளைச் சீரமைத்தல், கரைகளை உயர்த்துதல், மதகுகள் கட்டுதல், ஆங்காங்கு தூர் வாருதல் ஆகியவற்றைக் கொண்டது. ஆகையினால் முதற்கட்டமாக நமக்கு வழங்கியிருக்கிற அந்த 44 ஏரிகளைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. தங்கமணி :** எனவே, சென்ற ஆண்டு நிறுத்தப்பட்டிருக்கிற அந்த ஏரிப் பணிகளையும், மராமத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, வைகையில் கடந்த 3, 4 ஆண்டுகளாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் மாநில அரசும் பழைய ஆயக்கட்டுப் பாசன விவசாயிகளுக்கு நிறைய தண்ணீரெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஒரு போக சாகுபடிக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் மாநில அரசு மேலும் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் வைகை பாசன நீரில் வைக்கக்கூடிய கணக்குகள் மாறுபட்ட கணக்குகளாக இருக்கின்றன. வரக்கூடிய தண்ணீர் முழுவதையும் பெரியாறு கணக்கில் வைக்கின்றார்கள். வைகை கணக்கில் வைக்க மாட்டேன் என்கின்றார்கள். அதேபோல வைகையிலே இருக்கக்கூடிய பேரணை மதகுகள் எப்போதுமே திறந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மதகுகளை அடைத்து அங்கு இருக்கக்கூடிய சில அதிகாரிகள் அதை வேறு வகையில் வியாபாரம் செய்யக் கூடிய ஒரு நிலைகூட இருப்பதுபோல நான் உணர்கிறேன். எனவே அதிலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவதோடு பெரியாறு அணையின் தண்ணீர் அளவை 152 அடியாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று

மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தொகுதி சம்பந்தமாக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்.

(முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் இனத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்குபவர், இந்திய திருநாட்டின் ஈடு இணையற்ற வழி காட்டியாக விளங்கி வருபவர்; கண்களை இமை காப்பதுபோல தமிழ்நாட்டை, தமிழ் மக்களைக் காத்துவரும் அற்புதத் தலைவர்; அன்புத் தலைவர்; புத்தாயிரம் ஆண்டின் புனிதத் தலைவர்; எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர்; ஐந்தமிழ் அறிஞர், 2000-2001 ஆண்டின் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, அதன் அடிப்படையில் பொது விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பை நான் என்னுடைய வாழ்வில் பெற்ற பெரும் பேறாகக் கருதி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

*"செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே."*

என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் பாடியிருந்தார்கள். ஆனால் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இன்று உயிரோடு இருந்திருந்தால் அப்படிப் பாடியிருக்க மாட்டார். பின்னர் எப்படிப் பாடியிருப்பார் என்றால்

*"செந்தமிழ் நாடெனும் போதினிலே-அனைத்து*
*இனிப்புகளும்வந்து பாயுது என்காதினிலே"*

என்று பாடியிருப்பார். ஏனென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இன்று இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையை உற்று நோக்குவோமேயானால் எந்த அளவிற்குச் சீரிய சிந்தனை செய்து இந்த நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்காக, இந்த நாடு வளம் பெற வேண்டும் என்பதற்காக, தமிழ் இனம் ஏற்றம் பெற வேண்டும் என்பதற்காக அருமையான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிதிநிலை அறிக்கையை நமக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பது புரியும். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கை மீது விவாதம் செய்வதற்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 29 ஆண்டுகளுக்கு முன்பு,



25-3-1971 ஆம் ஆண்டு, தமிழக முதல்வராக இருந்தபோது, முதல் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்தபோது இந்த மாமன்றத்தில் கூறிய பொன்னான வரிகளை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். "சட்டமன்றத்தின் அகத்தும் புறத்தும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த நல்ல கருத்துகளையும், அறத்தை அணிசெய்யும் ஆலோசனைகளையும் இவ்வரசு வரவேற்று, அவற்றைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும் என்றும் உறுதி கூறுகிறேன்" என்று அருமையான கருத்தை இந்த மாமன்றத்தில் கூறியிருந்தார்கள். அப்படியே இப்போதும், சிறிதளவும் பிறழாமல், குன்றாமல், குறையாமல், அருமையான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையைத் தமிழக மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கு முன்பாக, தமிழகத்தில் இதுவரையில் எந்தவொரு முதலமைச்சரும் செய்திடாத அணுகுமுறையை, அருமையான அணுகுமுறையை, சிறப்பான அணுகுமுறையை வரவேற்கக் கூடிய அணுகுமுறையைப் பின்பற்றி, அதாவது மக்களையும் மதித்து, விவசாயப் பெருமக்களை அழைத்து, வணிகப் பெருமக்களை அதாவது, வணிகர் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடைய அரிய ஆலோசனைகளை எல்லாம் அறிந்து, அதன்பின்னரே இந்த நிதிநிலை அறிக்கையை நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

இந்த நிதிநிலை அறிக்கையை நாம் உற்றுநோக்கும்போது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 18,406.17 கோடி என்றும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 21,564.87 கோடி என்றும், அனைத்துக் கணக்குகளிலும் நிகரப் பற்றாக்குறை ரூ. 667.96 கோடி என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி எதிர் வரிசையில் அமர்ந்திருக்கின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றுகின்றபோது, இந்த நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை அதிகமாக உள்ளது, இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்படவில்லை என்கின்ற கூற்றை அறிவிக்கின்றார்கள். நான் அவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், கடந்த நிதியாண்டில் ஏற்பட்ட பற்றாக்குறை ரூ. 791 கோடி. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் திருத்திய மதிப்பீட்டில் வெறும் 151.99 கோடியாக அது குறைக்கப்பட்டதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில்கூட இந்தப் பற்றாக்குறை உறுதியாக, திண்ணமாக நிவர்த்தி செய்யப்படும் என்றும் அரசினுடைய சிக்கன நடவடிக்கையால் இவை நிவர்த்தி செய்யப்படும் என்றும் உறுதியளித்திருக்கிறார்கள் என்பதை

நான் எதிர் வரிசையில் அமர்ந்திருக்கின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது எனக்கு முன்பு உரையாற்றிய மரியாதைக்குரிய தமிழ் மாநில காங்கிரஸ் அணியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் வேளாண்மைக்கு எந்தவிதமான பலனும், எந்தவிதமான அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்ற ஒரு தவறான கூற்றை இந்த மாமன்றத்தில் பதியச் செய்திருக்கிறார்கள். நான் அதற்காக வருத்தப்படுகிறேன். வேளாண்மை சமுதாயத்திற்கு நாளும் உழைத்து வருபவர்தான் நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள். இலவச மின்சாரம் வழங்கியவர்தான் நமது அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியத் திருநாட்டில் எந்தவொரு முதலமைச்சரும் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கிடாத அற்புதமான ஒரு மாபெரும் வரப்பிரசாதமான அருமையான இலவச மின்சாரத் திட்டம் வழங்கியவர் நமது முதல்வர் அவர்கள். மாபெரும் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த விவசாயிகளுடைய நலனைக் கருதி ஓர் உயர்நிலைக் குழுவை, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலேயே அமைத்திருக்கிறார்கள்.

காய்கறிகள், பழங்கள் வீணாகாமல் பாதுகாக்கப்படுவதற்கு குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் கிராமப்புறங்களில் விவசாயப் பெருமக்கள் விவசாயப் பொருட்களை உலர்த்துவதற்கு ஏராளமான உலர் களங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள் இந்த நிதிநிலை அறிக்கையில். விவசாயிகளுக்குப் பாதுகாப்பு மற்றும் சேமிப்புத் திட்டம் அறிவித்திருக்கிறார்கள். அனைத்து விவசாயிகளுக்கும் வரும் நிதியாண்டில் நில உரிமைப் பதிவேடுகள் வழங்குகின்ற அருமையான அற்புதமான ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். பல ஆண்டு காலமாக கிடப்பில் போடப்பட்டிருந்த ஒரு திட்டம் இப்பொழுது இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் செயலாளர்கள் பல ஆண்டுகளாக ஒரே வங்கியில் பணிபுரியும் கொடுமையை அகற்றுகின்ற வகையில் அவர்கள் சுயாட்சி நடத்துகின்ற நிலைமையை அகற்றுகின்ற வகையில் எதிர்காலத்தில் அவர்கள் பணிமாற்றம் செய்யப்படுவார்கள் என்கின்ற ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அனைத்து விவசாயிகளின் கூட்டுறவுக் கடனுக்கான அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்கின்ற இன்னொரு அருமையான் அறிவிப்பும் இருக்கிறது. இத்தனை அறிவிப்புகள் செய்திருந்தும், இத்தனை நல்ல திட்டவட்டமான அறிவிப்புகள் அறிவித்திருந்தும் எதிர் வரிசையில் எனக்கு முன் உரையாற்றியிருக்கிற மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் இதில் எதுவும் இல்லையென்று உரையாற்றியது எனக்கு வருத்தமாக இருக்கிறது.



இதற்கும் மேலாக வணிகப் பெருமக்களுக்கு புதிய வரிகள் இல்லை. தாராளமான சலுகைகளை அதாவது ரூபாய் 75 கோடி அளவுக்கு வரி குறைப்பை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் வணிகப் பெருமக்களுக்காக அறிவித்திருக்கிறார்கள். நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். வணிகப் பெருமக்கள் இன்று பாராட்டுகின்றார்கள், மகிழ்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) இந்த அளவுக்கு வணிகப் பெருமக்களுக்கு இது அருமையான ஒரு வரிக்குறைப்பு.

உள்ளாட்சி மன்றங்களுக்கு ரூ. 2400 கோடி ஒதுக்கீடு; உழவர் சந்தை வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிராமப்புறங்களில் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு மாவட்டந்தோறும் 'பூமாலை' வணிகச் சின்னம் என்கின்ற அருமையான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். வரும் நிதியாண்டில் 210 ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 75 கோடி ரூபாய் அளவில் செயல்படுத்தப்படும் என்கின்ற ஓர் அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அருமையான திட்டம். இந்தியத் திருநாட்டில் எந்தவொரு மாநிலத்திலும் அளிக்கப்படாத திட்டம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக கிராமப் புறங்களிலுள்ள ஊராட்சிகள் எல்லாம் புதுப் பொலிவு பெற்ற நகரங்களாக ஜொலிக்கின்றன.

நமக்கு நாமே திட்டம்; மேலும் தொகுப்பு வீடுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது) இந்த நல்லாட்சியில் அருமையாக வடிவமைக்கப்பட்டு நவீன வசதிகளைக் கொண்ட வீடுகளாக இன்று கட்டப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில் மட்டும் 31 ஆயிரம் தொகுப்பு வீடுகள் ரூ. 99 கோடி அளவில் கட்டப்படும் என்கின்ற அறிவிப்பு வந்திருக்கிறது. மாநிலம் முழுவதும் வட்டாட்சியர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த நல்லாட்சியில் கடந்த 4 ஆண்டுகளில் ஆசிரியர்கள் நியமனம் செய்திருப்பது சரித்திர சாதனையாகும்.

எந்தவிதமான முறைகேடும் இன்றி மூப்பு அடிப்படையில் ஏறத்தாழ 62 ஆயிரம் ஆசிரியப் பெருமக்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். வரும் நிதியாண்டில் 6 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்று ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ பட்ஜெட், பட்ஜெட் என்று பெரிதாக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சூழ்நிலையில், மக்கள் எதிர்பார்த்த அளவுக்குப் புதிய திட்டங்களோ, புதிய சலுகைகளோ அல்லது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்போ தரக்கூடிய அளவில் இந்த பட்ஜெட் அமையவில்லை. கார் காலத்தில் மின்னல் வெட்டும், இடி இடிக்கும், மேகங்கள் இருட்டு மேகங்களாகச் சூழ்ந்துகொண்டு மழை வந்து, குளம் பெருகிவிடும் என்று மக்கள் உற்சாகத்தில் இருக்கும்போது, மழை பெய்யாமல் வெறும் பேய்க் காற்றாக மாறிவிட்டால் எந்த நிலைமையில் மக்கள் நினைத்துக்கொண்டிருப்பார்களோ அதைப்போல இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. இருந்தாலும், என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியின் ஒரு சில நிகழ்வுகளைத் தங்களுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதி மூன்று ஒன்றியங்கள் அடங்கிய பகுதி. என்னுடைய தொகுதி வானம் பார்த்த பூமியாக இருந்துகொண்டு வருகிறது. ஒரு கூட்டுறவு நூற்பாலையை அமைக்க வேண்டுமென்று, நான் பலமுறை பேசியிருக்கிறேன். இருந்தாலும், சங்கரன்கோவில் T.N.S.P.L. 144 விசைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க விசைத்தறி ஆலையை ஒரு வருடகாலமாக மூடிவிட்டார்கள். அதை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று நான் பலமுறை மனுக்கள் கொடுத்தும் இந்த அரசு செவிசாய்க்காமல் இருப்பதால் அதில் பணி செய்த 300 பணியாளர்களின் குடும்பங்களுடைய நிலை கவலைக்கிடமாக இருந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய சங்கரன்கோவில் தொகுதி நெல்லை மாவட்டத்திலேயே விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. குறிப்பாக, விவசாயப் பெருங்குடி மக்கள் பூ உற்பத்தியைச் சிறப்பான முறையில் செய்து வருகிறார்கள். பூ உற்பத்தி செய்கின்ற அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களுக்காக ஒரு சென்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்களுடைய சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் திருவள்ளுவர் நகர் என்ற பகுதியில் கிட்டத்தட்ட 500 வீடுகள் கட்டி 30 வருடகாலமாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று இதே அவையில் பலமுறை சொல்லியிருக்கிறேன். இப்போது பட்ஜெட்டில், 10 ஆண்டுகள் குடியிருந்தாலும் வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் வழங்கலாம் என்றும் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும், எல்லா இடங்களிலும் குடியிருந்து வருகின்ற அந்த குடிசைவாழ் பகுதி மக்களுக்குக் குறிப்பாக திருவள்ளுவர்



நகர்ப் பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இது சம்பந்தமாக வட்டாட்சியர் அவர்களிடமும், கோட்டாட்சித் தலைவர் அவர்களிடமும் பேசியிருக்கிறேன். உடனடியாகப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களுடைய பகுதி விசைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதியாக இருந்து வருகிறது. கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக விசைத்தறித் தொழிலாளர்கள் சுமார் 10 ஆயிரம் பேர் விசைத்தறியைத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூலி உயர்வுப் பிரச்சினையை முன்வைத்து சர்வ கட்சித் தொழிற்சங்கங்களும் ஒன்றுகூடி, உரிமையாளர்களைச் சந்தித்துப் பேசியபோதும் அது தீர்க்கப்படவில்லை. அவர்கள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியபோதிலும், அதைக் கண்டுகொள்ளவில்லை. அதில் நானும் பங்குகொண்டு தொழிலாளர் நல உதவி ஆணையாளர் அவர்களையும், கோட்டாட்சித் தலைவர் அவர்களையும் அழைத்து உடனடியாகப் பேசினோம். அவர்கள் வந்து பேசியும் முடிக்கப்படவில்லை. காரணம் தொழிலாளர்கள் நல உதவி ஆணையாளர் அவர்கள் கிட்டத்தட்ட 500-லிருந்து 600 நபர்கள் தொழில் செய்து வருகிற அந்தத் தொழிற்சாலையை சுயதொழிலாக மாற்றிட அந்த உரிமையாளரிடம் இலஞ்சம் பெற்று அதைச் சுயதொழிலாக மாற்றிவிட்டதன் காரணமாக அந்தக் கூலிப் பிரச்சினை இன்னும் முடிந்தபாடில்லை.

பிரச்சினை இன்றுவரையிலும் நீடித்துக்கொண்டிருக்கிறது. உடனடியாக உதவி தொழிலாளர் நல ஆணையர் அவர்கள் மூலமாக Factory Act பிரகாரம் நடவடிக்கை எடுத்து, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியில் மேலநீலிதநல்லூர் ஒன்றிய பகுதியை டார்க் பகுதி என்று அறிவித்து, விவசாயத்திற்குக் கிணறு தோண்டுவதற்கும், விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. காரணம், என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியிலுள்ள மேலநீலிதநல்லூர் ஒன்றியப் பகுதியினுடைய மக்கள் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலும், வருகின்ற எந்தத் தேர்தலிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தருகின்ற மக்கள் என்பதால் இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி விவசாய மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மாவட்ட

ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுத்தும், இதுவரையில் எந்தப் பலனும் இல்லை. உடனடியாக அந்தத் தடையை நீக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் குறித்து கருமைப் பகுதி என்றும் சாம்பல் நிறப் பகுதி என்றும் சில இடங்களைப் பிரித்திருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி வந்துவிடும். அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்கு ஓட்டுப் போட்டார்கள் என்பதற்காக அல்ல. தி.மு.க.வுக்கு ஓட்டுப் போட்ட என் தொகுதிகூட கருமைப் பகுதியிலேதான் வந்திருக்கிறது. ஆகையினால் நிலத்தடி நீரில் 85 பர்சென்டுக்கு மேலே எந்த இடத்திலே Utilise பண்ணிவிட்டார்களோ அதையெல்லாம் கருமைப் பகுதி என்று அதற்குச் சில நடைமுறைகளை வைத்திருக்கிறார்கள். ஏதோ உங்களுக்கென்று திட்டமிட்டுச் செய்ததாகச் சொல்வது தவறு என்பதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அவர் டைம். (குறுக்கீடு)

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) என்னுடைய மேலநீலிதநல்லூர் ஒன்றியப் பகுதி டார்க் பகுதி என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இதுவரையில் 400 கிணறுகள் அங்கு நிலத்தடி நீரோடு பம்ப் செட்டுகள் முறையாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படி ஓடிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் ஏதோ ஓரிரு இடங்களில் மட்டும் அந்த நிலத்தடி நீரைப் புவியியல் ஆய்வாளர் அவர்கள் பரிசோதித்து வேண்டுமென்றே அந்தப் பகுதியில் தடைபோட்டப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** வேண்டாம். வேண்டாம். உங்களோடு நான் வாதிட விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்று சொல்லி விடுகிறேன். — ப்ளீஸ்— 1992-லே உங்கள் சர்க்கார், உங்கள் அம்மா போட்ட திட்டம்தான் இது. நான் வேண்டுமென்றால் விவாதத்திற்கு வைக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மேலும், என்னுடைய தொகுதியில் வாரத்தில் செவ்வாய்க்கிழமை முழுவதும் மின்சாரத் தடை ஏற்படுகிறது. நாங்கள் கோட்டப் பொறியாளர் அவர்களிடத்தில் கேட்கும்போது, "அது மின்சாரக் கோளாறு; பழுது நீக்கம் செய்வதற்காக நிறுத்துகிறோம்" என்கிறார்கள். ஒவ்வொரு வாரமும் இதே நிலைதான் நீடித்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, சங்கரன்கோவிலிலேயிருந்து வன்னிக்கோனேந்தல்வரை



இடையே இருக்கின்ற கிராமப் பகுதிகளில் உப மின்நிலையம் இல்லாத காரணத்தால் தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலையிலிருந்து மின்சாரம் வருவதன் காரணத்தால் மின்சாரம் சீராகக் கிடைக்கவில்லை. தெருவிளக்குகள் சரியான முறையில் எரியவில்லை. ஆகவே, மேலநீலிதநல்லூர் ஒன்றியப் பகுதியில், மேலநீலிதநல்லூர் கிராமத்தில் ஓர் உப மின்நிலையம் அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் ஒரே சீராகக் கிடைப்பதற்கு அது வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியில் கிட்டத்தட்ட 1¼ இலட்சம் இலவச வேட்டி சேலைகள் கொடுப்பதாக இருந்தது. கொடுக்கப்பட இருந்த அந்த வேட்டி சேலைகளை ஆந்திரா, நாகர்கோவில் பக்கம் உள்ள வடசேரி பகுதியில் 90 பண்டில்களை விற்றுவிட்டனர். காவல் துறையின் மூலமாக கோட்டாட்சித் தலைவர் அவர்களுக்குப் புகார் கொடுத்ததன் காரணமாக அது கண்டுபிடிக்கப்பட்டு, காவல் நிலையத்தில் ஒரு அறையிலும், தாசில்தார் அறையிலும் அந்த 90 பண்டல்களைப் பூட்டி வைத்திருக்கிறார்கள். தற்சமயம் அந்த வேட்டி சேலைகளை என்ன செய்யப்போகிறார்கள்? வழங்கப்படாமல் இருக்கும் ஏழை எளிய குடும்பங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறது இந்த அரசு? இந்த அளவு ஊழல் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல், ஏதோ ஒரு கிராம நிர்வாக அதிகாரியையும் ஒரு தலையாரியையும் மட்டும் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்திருப்பது என்ன நியாயம்? இதில் யார் யாருக்குப் பங்கு உண்டு, பங்கு சென்றிருக்கிறது? முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் அதை முறையாகக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லையென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்து, அமைச்சரை ராஜினாமா செய்யச் சொல்லவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இலவச வேட்டி சேலைகள் சரியாக விநியோகம் ஆகாவிட்டால், அங்கே தவறு செய்தவர்கள் யார், ஊழல் புரிந்தவர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு பத்திரிகைகளில் செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. இங்கே யாரும், நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு, ஆள்வது அம்மையார் ஜெயலலிதாவும் அல்ல, குற்றம் புரிந்தவர்கள் இந்திரகுமாரியும் அல்ல; இது ஜெயலலிதா, இந்திரகுமாரி காலமும் அல்ல.

பிற்பகல் 12-05

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறையாக நடவடிக்கை எடுக்க நீங்கள் ஆவன செய்யவில்லை. காரணம், ஒரு கிராம நிர்வாக அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டது 25 பண்டல்கள்: ஆனால், களவாடி திருட்டுத்தனமாக விற்கப்பட்டது 90 பண்டல்கள். ஆக, ஒரு கிராம நிர்வாக அதிகாரியால் அதை எப்படிச் செய்யமுடியும்? இதில் யார் தவறு செய்து இருக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறீர்கள்? எந்த கோர்ட்டில் வழக்குத் தொடுக்கப் போகிறீர்கள் என்பதை நாங்கள் கேட்கத் தயாராக இருக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது) காரணம் அந்த அளவுக்கு ஊழல் அதிகமாக நடந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. சொ. கருப்பசாமி:** ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட நேரம்தான் உங்களுக்கும் கொடுக்கப்பட்டது. அவ்வளவுதான், உட்காருங்கள். திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. சொ. கருப்பசாமி:** ஒரு நிமிடம் கொடுங்கள்; இன்னும் நேரம் ஆகவில்லை.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டிலே மக்களுடைய பேராதரவோடு உருவாகும் என்றால் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்துவோம்; கூட்டுறவுத் தேர்தலை நடத்துவோம் என்ற வாக்குறுதியைத் தந்து, அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்தி... (குறுக்கீடுகள்)

**திரு. சொ. கருப்பசாமி:** துணைத் தலைவர் அவர்களே, . . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. சொ. கருப்பசாமிக்கு 11-55-க்கு நேரம் கொடுத்தீர்கள். இன்னும் 10 நிமிடம் ஆகவில்லை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். இப்படி அடிக்கடி எழுந்து, மற்றவர்களின் நேரத்தை வீணாக்காதீர்கள். (குறுக்கீடுகள்) சரியாக எல்லோருக்கும் 10 நிமிடம்தான். இதிலே யாருக்கும் பாகுபாடு கிடையாது.



திரு. சொ. கருப்பசாமி 11-55க்கு பேச ஆரம்பித்தார்; 12-05க்கு முடித்திருக்கிறார்; உட்காருங்கள். திரு. ஆவுடையப்பன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சுந்தரம், நேரத்தை வீணாக்காதீர்கள்; உட்காருங்கள். இன்னும் நிறையப்பேர் பேச வேண்டும். திரு. ஆவுடையப்பன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) எழுதிக் கொடுங்கள்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட நமது தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தி, உள்ளாட்சி அமைப்புகளில் மக்களின் பிரிதிநிதிகளைக்கொண்டு வந்து, மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற ஓர் அரசை, நல்ல அரசை, நல்ல ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில், 13-வது நிதிநிலை அறிக்கையை நமது முதல்வர் அவர்கள் இங்கே தாக்கல் செய்து இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பின்னால், பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டில் அறிமுகம் செய்து ஏறத்தாழ 634 கிராமங்களுக்கு 518 கோடி ரூபாய் செலவு செய்து, மாதிரி கிராமங்களாக மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இந்த மாநிலத்தைக் காட்டி இருக்கிறார் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று இந்த பட்ஜெட் மூலம், வருகின்ற நிதியாண்டில் 210 கிராமங்களில் 75 கோடி ரூபாய் செலவில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இப்போது நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிற தமிழக முதல்வர் அவர்களுக்கு மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலே நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்கள் இப்போது நிறைவேற்றப்படுகின்றன. இப்போது தூர் வாருகின்ற பணி, சமுதாய நலக் கூடங்கள் கட்டுதல், இன்னும் மக்களுக்குத் தேவையான பல பணிகளை நமக்கு நாமே திட்டத்தின்கீழ் 30 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றுகின்ற அளவில் தமிழக முதல்வர் எங்களுடைய தலைவர் நிதி ஒதுக்கித் தந்திருப்பதற்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று சமத்துவபுரம். பல்வேறு சமுதாயத்தினர் ஒன்றுசேர்ந்து வாழ்வதற்காக, இந்த நாட்டில் சமுதாயத்தின் அடிப்படையில் மோதிக்கொள்வதைத் தவிர்ப்பதற்காக சமத்துவபுரம் அமைக்க ஏற்பாடு செய்து 64 சமத்துவபுரங்கள் ஏற்கெனவே கட்டி

முடிக்கப்பட்டு, வருகின்ற நிதி ஆண்டில் 86 சமத்துவபுரங்களைக் கட்டி முடிக்க நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று விவசாயிகளின் வாழ்வில் ஒளி மலரச் செய்ய நகர சபைகள் இருக்கின்ற பகுதிகளில் எல்லாம் உழவர் சந்தைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நான் இந்நேரத்தில் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் பேரூராட்சிகள் இருக்கின்ற பகுதிகளிலும் உழவர் சந்தைகள் வருவதற்கு ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்பதுதான். அதேபோன்று வருமுன் காப்போம் திட்டத்தை இப்போது தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

'வருமுன் காப்போம்' திட்டத்திற்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள், கிராமத்தில் வாழ்கிற மக்கள் நகர்ப்புறங்களுக்கு வந்து தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற வியாதிகளுக்கு சிகிச்சை பெற முடியாத நிலை இருப்பதை உணர்ந்த காரணத்தால், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற வகையில் கிராமங்களுக்கே மருத்துவர்கள் சென்று அவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற திட்டத்தினை உருவாக்கி, கிராம மக்கள் மத்தியிலே ஒரு பேராதரவையும், பெரும் வரவேற்பையும் பெற்றிருக்கிற ஒரு திட்டத்தினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 1,634 முகாம்கள் நடத்தி 17 இலட்சத்து 4 ஆயிரம் பேர் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றிருப்பதை நினைக்கும்போது, ஏழையெளிய மக்களுடைய பாதுகாவலனாக இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒன்றே உதாரணமாகும்.

*பிற்பகல் 12-10*

அதேபோன்று கால்நடை பாதுகாப்பு முகாம்கள் இதுவரையில் ஏறத்தாழ 600 வரையில் நடத்தி முடித்து ஏறத்தாழ 20 இலட்சத்து 88 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு மட்டும் பாதுகாவலனாக இல்லாமல் கால்நடைகளுக்கும் இந்த அரசு பாதுகாவலனாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் இந்த முகாம்களை நடத்தி, ஏழையெளிய மக்களுக்கு அரணாக பாதுகாவலனாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழையெளிய மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டுமென்ற உணர்வோடு சென்ற ஆண்டு 450 கோடி ரூபாயை ஒதுக்கி இருந்தபோதிலும், இந்த முறை 500 கோடி ரூபாய் குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கிக் கொடுத்து 76 நகரங்கள் இப்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர்



பெறுவதற்காக நடவடிக்கை எடுத்திருப்பதற்காக இந்த அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராதாபுரம், தென்காசி, சங்கரன்கோவில் போன்ற தொகுதிகளில் வாழும் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இராதாபுரத்திலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் இருந்தபோதிலும், அதேபோன்று தென்காசி தொகுதியிலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் இருந்தபோதிலும், சங்கரன்கோவில் தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் இருந்தபோதிலும் அந்தப் பகுதி மக்களின் நிலையைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதி மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க, தாமிரபரணி நதியிலிருந்து பல நூறு கோடி ரூபாய் செலவில் நீர் எடுத்துக்கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருப்பதற்காக நெல்லை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளினுடைய பாதுகாவலனாக, விவசாயிகளினுடைய ஏந்தலாக இருக்கக்கூடிய அரசு, கழக அரசு, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அரசு, நம்பியாறு திட்டம், அடவிநயினார் திட்டம், பச்சையாறு திட்டம், கொடுமுடியாறு திட்டம், உள்ளாறு திட்டம், கடனாறு விரிவாக்கத் திட்டம் போன்ற அனைத்துத் திட்டங்களையும் நெல்லை மாவட்டத்திலே உருவாக்கி, அந்த விவசாய மக்களுடைய பேராதரவினையும் பெற்று, அவர்களுடைய வாழ்விலே ஒளியை ஏற்றியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூர் வாருகின்ற பணி. 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அணைகள், குளங்கள், கால்வாய்கள் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்ற நிலையைக் கருத்தில்கொண்டு, உணர்ந்து, இங்கே இருக்கக்கூடிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதிகளையெல்லாம் வந்து நேரில் பார்த்துவிட்டு, கழக அரசு வந்ததற்குப் பின்னர், இப்போது (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பணிகளை, அதில் ஏற்பட்டிருக்கிற குறைகளை நீக்கித் தருகின்ற வகையில் நிதியொதுக்கீடு செய்து அந்தப் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே தூர் வாரப்பட்டு ஏழையெளிய விவசாயிகளினுடைய வாழ்வில் வளம் கொழிக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பின்னர்தான் தொழில் வளர்ச்சியில் பல சாதனைகளைப் படைத்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அரசிலும் ஏற்படாத சாதனைகள் கழக அரசில் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கழக அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலகட்டத்தில்தான் ஹூண்டாய் தொழிற்சாலை, ஃபோர்டு தொழிற்சாலை, மிட்சுபிசி தொழிற்சாலை, நாங்குநேரியில் மென்பொருள் தொழில் பூங்கா போன்றவையெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) கடந்த காலத்தில் சகதியாக இருந்த சாலைகள் எல்லாம் இப்போது சிமெண்ட் சாலைகளாக, தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று ஏழையெளிய கைவினைஞர்களுக்கு, அவர்கள் தயாரிக்கின்ற பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கின்ற வகையில் இன்றைய தினம் 'பூமாலை' என்ற திட்டத்தினை உருவாக்கி, அந்தத் திட்டத்தின் மூலம் ஏழையெளியவர்களுக்கு உதவுகின்ற இந்த அரசிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு கடந்த 4 வருடங்களில் 2 இலட்சத்து 74 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. வருகின்ற ஆண்டில் 31 ஆயிரம் வீடுகள் 99 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு கட்டித் தர முன்வந்து இருப்பதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவுகின்ற வகையில் இந்த ஆண்டு 75 ஆயிரம் ஏக்கர் நிலத்தை மேம்படுத்துவதற்கு அரசு முன்வந்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகர்ப்புறங்களில், பாதாளச் சாக்கடைகளை ஏற்படுத்த, அங்கே இருக்கின்ற மக்களுக்கு உதவுகின்ற வகையில், அவர்களுடைய நன்மைகளைக் கருத்தில்கொண்டு இப்போது திட்டத்தினைத் தீட்டி உள்ளோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.



பிற்பகல் 12-15

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்குத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கம்பர், கம்ப இராமாயணத்தில் இராமபிரான் அழகைப்பற்றி வர்ணிக்கின்றபோது "தோள் கண்டான், தோளே கண்டான்" என்று வர்ணித்தார். அதாவது ஒரு உறுப்பைப் பார்த்தவர், தோளைப் பார்த்தவர், இன்னொரு உறுப்பைப் பார்க்க முடியவில்லை. அந்த அளவுக்கு அழகாக இருந்தார் என்று சொல்கிறார். அதைப்போன்று இந்த பட்ஜெட்டிலே வரக்கூடிய ஒவ்வொன்றாகப் பார்க்கும்போது எதைப் பற்றி வர்ணிப்பது என்றே எனக்குத் தோன்றவில்லை. அந்த அளவுக்கு மிகச் சிறப்பாக இருக்கிறது. எனவே ஒரு சில கருத்துகளை மட்டும் இந்தச் சபையில் தெரிவித்து, எங்களுடைய இயக்கத்தின்மேல் இருக்கின்ற ஐயப்பாடுகளைப் போக்குகின்ற வகையில் சில கருத்துகளைச் சொல்லி அமையலாம் என்று கருதுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலைக்காக 14 1/2 கோடி ரூபாய் ஒதுக்கியது கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கிறது. அதேபோன்று குளச்சல் துறைமுகத்திற்கு அடிப்படைப் பணிகளுக்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன.

உழவர் சந்தையில் மிகச் சிறிய விவசாயிகளுக்கு தனது உற்பத்திக்குச் சரியான முறையிலே இலாபம் கிடைப்பது என்பது மட்டுமல்ல, வாங்கக்கூடியவர்கள்கூட நியாயமான விலைக்கு வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று சமத்துவபுரம். சமத்துவபுரத்தைப் பொறுத்தமட்டில், அதில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. நான் மதிப்பீட்டுக் குழு உறுப்பினராக இருக்கிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு முன்னால், வேலூர் மாவட்டத்திற்கு - அங்கு அமைந்துள்ள சமத்துவபுரத்திற்குச் சென்றிருந்தோம். உண்மையிலேயே பாராட்டக்கூடிய அளவில் மிகச் சிறப்பாக இருக்கிறது. பல மாவட்டங்களில் பார்த்திருந்தாலும்கூட, இந்தச் சமத்துவபுரம் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். மாவட்ட ஆட்சியாளரும் வந்திருந்தார்கள். அதில் என்னென்ன மதங்கள் என்று சொல்ல முடியுமோ, முக்கியமான சமயங்கள் என்னென்ன ஜாதிகள் என்று சொல்ல முடியுமோ பிராமணர் உட்பட

அத்தனை ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் அங்கே வீடு கிடைத்திருக்கிறது. அத்தனை பேரும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் நான் சிறிய பாரதமாகவே அதை நான் கண்டேன். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஜாதிமதத்திற்கு அப்பாற்பட்ட ஒரே நாடு என்ற சிந்தனையோடு, எப்படி நாங்கள் பேசுகிறோமோ அதைப்போன்று ஒரு குட்டி பாரதமாக அது காணப்பட்டது. அந்த நிகழ்ச்சியைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

ஜாதி மத வேற்றுமைக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்ச்சி எனது மாவட்டத்தில் மார்ச் 19 ஆம் தேதி இந்த மாதம் நடைபெற்றது. உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒரு நிகழ்ச்சி அது. உதாரணத்திற்காகத்தான் இதைச் சொல்கிறேன். பள்ளியாடி என்ற ஊர். என்னுடைய தொகுதியைச் சார்ந்த ஊர். பழையபள்ளி என்று சொல்லக்கூடிய ஒரு ஊர். அந்த ஊரில் வருஷாவருஷம் இந்த மார்ச் மாதத்தில் அனைத்து சமயத் தலைவர்களையும் அழைத்து அங்கே ஒரு பிரார்த்தனை நடத்தி, அடுத்த நாள் கிட்டத்தட்ட ஐந்தாறு இலட்சம் மக்கள் சாப்பிடக்கூடிய வகையில் 50 அரிசிமூட்டைகள் வரை செலவாகும்; காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து, இரவு 9.00 மணிவரைக்கும் அந்த நிகழ்ச்சி நடந்து முடியும். அந்த அளவுக்கு அன்னதானம் நடைபெறும். அந்த நிகழ்ச்சிக்கு 19 ஆம் தேதி நான் சென்றிருந்தேன். C.S.I. மதத்தினுடைய சமயத் தலைவர், R.C. மதத்தினுடைய சமயத் தலைவர், L.M.S., Salvation Army, இரவிபுதூர்கடை மசூதியினுடைய தலைவர் ஹஜரத் என்று சொல்வார்கள் அவர்கள், வெள்ளிமலை விவேகானந்த ஆசிரமத்தினுடைய தலைவர் சக்தி சைதன்யானந்தா சுவாமிகள், நான், திருநெல்வேலி D.I.G., M.D.M.K. மாவட்டத் தலைவர் உத்திரராஜ் அவர்கள் அத்தனைபேரும் அந்த நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தோம். உண்மையிலேயே சமயத் தலைவர் ஒவ்வொருவரும் பேசியது ஒரே கடவுளை பல உருவில் நாம் வணங்குகிறோம் என்பதுதான். இதுதான் நம்முடைய பாரத நாட்டினுடைய சித்தாந்தம். "ஏகம்சத் விப்பிறா பெகுதாவதந்தி" உண்மை ஒன்று ஞானிகள் பலவாகக் காண்கின்றனர். கிருத்துவர்களும், முஸ்லீம்களும், இந்துக்களும் இதே கருத்தைத்தான் சொல்கிறார்கள். கடைசியாகப் பேசிய சுவாமிஜி சொன்னார். இப்படி நாம் சொல்வது அனைத்தும் உண்மை என்று சொன்னால் அனைத்து வழிபாட்டு ஸ்தலத்திலும் பிறை நட்சத்திரம் அதுபோன்று சிலுவை, ஓம் இவைகளை வைக்க முடியுமா என்பதை, இந்தக் கொள்கையை ஒத்துக் கொண்டிருக்கக்கூடிய நாம் படிப்படியாக முயற்சிக்க வேண்டும். உடனே இதை அனைவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இருந்தாலும்கூட படிப்படியாக இதற்கு முயற்சியெடுத்து இப்படி ஒரு நல்ல சூழ்நிலையை



ஏற்படுத்த வேண்டுமென்று பேசினார்கள். அங்கு எனக்கு முன்னால் பேசிய C.S.I. மதத்தைச் சேர்ந்த சமய போதகர் பேசும்போது சொன்னார். 'நான் ஒரு Bike Accident-ல் சிக்கிக் கொண்டேன். எனக்கு ஒரு இந்து ரத்தம் கொடுத்தார். கிருஷ்ணன் என்று ஏதோ ஒரு பெயர் சொன்னார்; எனக்கு ஒரு முஸ்லீம் ரத்தம் கொடுத்தார். ஆகவே என்னுடைய உடம்பில் இப்போது ஓடுவது இந்து ரத்தமா? அல்லது முஸ்லீம் ரத்தமா. என்னை எந்தச் சமயத்தில் ஏற்றுக்கொள்வது?, என்று கேள்வி எழுப்பிப் பேசினார்கள். நான் பேசும்போது என்னுடைய பண்பாட்டைப் பொறுத்தமட்டில் கலாச்சாரத்தைப் பொறுத்தமட்டில் எந்தக் கடவுளை வணங்கினாலும் நான் உங்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன். எனவே என்னுடைய சமயத்திலேயே உங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். காரணம் எந்தக் கடவுளை வணங்கினாலும், நாம் அனைவரும் ஒன்று என்ற கருத்துப்படப் பேசியிருந்தேன். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இதுபோன்ற ஒரு நல்ல சூழ்நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்தது.

*பிற்பகல் 12-20*

**திரு. மு. அப்பாவு:** I am on a point of order.

**திரு. சி. வேலாயுதன்:** யாரும் குறுக்கிடாத அளவுக்கு மிக நாசூக்காகச் சில உண்மைகளைச் சொல்லி வருகிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடவுள் என்று சொல்கிறாரே அவருக்கு மட்டுமா கடவுள் சொந்தம் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** என் தெய்வம், என் தெய்வம் என்று அனைவரும் சொல்வது இயற்கை. அவரவருக்கு அவரவருடைய கடவுள் மீது பாசம் உள்ளது என்பதைச் சொல்கிறேன். எனவே இதுபோன்று மற்ற மாவட்டங்களில் அமைக்க முடியுமா என்பதை நம்மைப்போன்ற சமயத் தலைவர்கள் எல்லாம் ஆலோசிப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது இயக்கத்தைப் பொறுத்தமட்டில், "வெற்றி, தோல்வி, புகழ்ச்சி, இகழ்ச்சி, ஆசை எல்லாம் அறவே நீங்கி ஆலயத்தின் அடித்தளக்கல்லாகவே நாம் ஆசை கொண்டோம்" என்று தினசரி நடக்கக்கூடிய கிளைப் பயிற்சியில் இந்தப் பாட்டை பாடுகின்றோம். யார் என்ன சொன்னாலும், பாராட்டினாலும், புகழ்ந்தாலும், தேசியப் பணியை நாம் சரியாகச் செய்து கொண்டிருக்க வேண்டும். இது நம்முடைய நாடு. இந்த நாட்டில் வாழக்கூடிய மக்கள் அனைவரும் நம்முடைய

சகோதரர்கள். எந்த விபத்து எங்கு வந்தாலும், எந்தப் பிரச்சினை எங்கு வந்தாலும், எந்தக் கஷ்டங்கள் எங்கு வந்தாலும் உதவ முன்வரவேண்டும் என்ற அடிப்படையில் நாம் செயல்பட வேண்டும். இந்த அடிப்படையான கொள்கையை வகுத்துக்கொண்டு எப்படி இரயில், தண்டவாளத்தில் மட்டுமே செல்லுமோ-இரயில் தண்டவாளத்தை விட்டுக் கீழே செல்லாது-தண்டவாளத்தில் தான் செல்லும். இந்தக் கொள்கையாகிய தண்டவாளத்தை இதன் வெளியில் இருந்து யார் என்ன சத்தம் போட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இந்த இலட்சியத்தை மட்டும் அடிப்படையாக வைத்து இந்த இரயில் எதன் மீதும் பகை வைக்காமல் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டு சென்று கொண்டிருக்கிறது. இதற்குப் பல தடைகள் வந்தன.

ஜவஹர்லால் நேரு அவர்கள் 1962 ஆம் ஆண்டு சீன யுத்தத்தின்போது, சங்கத்தின் சேவையைப் பாராட்டி, அதாவது யுத்தத்தில் சங்கம் ஆற்றிய அரும் பணியினைப் பாராட்டி 1963 ஆம் ஆண்டு நடந்த குடியரசு தினவிழாவில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு அழைத்திருந்தார். (குறுக்கீடு)

துணைத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். குறுக்கிட வேண்டாம். கடைசியாகப் பேசுங்கள். நான் புள்ளி விவரங்கள் தருகின்றேன். தேவைப்பட்டால் புத்தகம் எல்லாம் வைத்திருக்கின்றேன். (குறுக்கீடு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் என்ன பேச வருகிறார் என்பதை முழுமையாகக் கேளுங்கள். அவர் முழுமையாகப் பேசட்டும். அதன் பிறகு கேளுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே ஜவஹர்லால் நேரு அவர்கள் இப்போது பலர் பேசுவது போன்று 1958 ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை நடத்த பாரத நாட்டில் ஓர் அங்குலம் இடம்கூடக் கொடுக்க மாட்டேன் என்று பேசியிருந்தார்கள். ஆனால் இறுதியில் சங்கத்தினுடைய செயல்பாடுகளை எல்லாம் புரிந்துகொண்டு யுத்த காலத்தில் வேறு எந்த ஸ்தாபனமும் செய்யாத சேவையை சங்கம் செய்த காரணத்தால், அவரே குடியரசு தினவிழாவில் அழைத்துப் பாராட்டினார். தன்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் இதைத் தவறு என்று சுட்டிக்காட்டியபோது அதற்குப் பதில் கொடுத்துக்கூட அவர் பேசியிருக்கிறார். அவற்றைக்கூட நான்



வைத்திருக்கிறேன். அந்த அளவுக்குத் தவறாகப் புரிந்து கொண்ட ஜவஹர்லால் நேரு அவர்கள்கூடப் பாராட்டக்கூடிய அளவுக்கு சங்கத்தின் சேவை அமைந்திருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. 1940-ஆம் ஆண்டு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடு). உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** 4 தடைகள் போடப்பட்டிருந்தன. 1940 ஆம் ஆண்டு, 1948 ஆம் ஆண்டு (மணியடிக்கப்பெற்றது)—பேசுவதற்குப் பத்து நிமிடம் தருகிறேன் என்று சொன்னீர்கள்— 1992-ஆம் ஆண்டு 1995 ஆம் ஆண்டு ஆகிய நான்கு தடைகள் போடப்பட்டிருந்தன. நான்காவது தடவையாகப் போடப்பட்டிருந்த தடையைப் பற்றி விசாரிக்க உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. பஹாரி அவர்கள் - அவர் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவர் - சங்கத்தைப் பற்றி விசாரித்து தடையை நீக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கின்றார்கள். ஆங்காங்கு சில தவறுகள் நடந்திருந்தாலும்கூட இந்த ஸ்தாபனம் தேச பக்த ஸ்தாபனம், நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது, எனவே, தடையை நீக்க வேண்டும் என்று திரு. பஹாரி, ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி அவர்கள் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். (குறுக்கீடு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்ததும் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைக் கேளுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** ஒவ்வொரு யுத்த காலத்திலும் சங்கம் ஆற்றிய பணிகள், அரும்பணிகள் கேரளத்தில், கொல்லத்தில் பெருமண் என்று சொல்லக்கூடிய இடத்தில் அஷ்டமுடி காயலில் கொல்லம் எக்ஸ்பிரஸ் இரயில் மறிந்தது. 562 பேர் இறந்துவிட்டார்கள். அவர்களுடைய பிணத்தை எடுத்து அகற்றியதிலிருந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்தது வரை இந்தச் சங்கம்தான் செய்தது. வேறு யாரும் செய்யவில்லை. இதைக் கேரள மாநில அரசாங்கம் பாராட்டியது. கேரள மாநிலத்தினுடைய அன்றைய முதலமைச்சர் பாராட்டினார்.

*பிற்பகல் 12-25*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் பாரதிய ஜனதா கட்சியினுடைய உறுப்பினராகப் பேசுகிறாரா அல்லது ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினுடைய தீவிர உறுப்பினராகப் பேசுகிறாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம்; நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் பேசுவது குறித்து எனக்கு எந்தவிதமான மாற்று அபிப்பிராயமும் இல்லை. ஆனால், சில விளக்கங்களைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இங்கே ஆர்.எஸ்.எஸ். குறித்து அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜவஹர்லால் நேரு அவர்கள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை ஆதரித்தார்கள் என்பதுபோல் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைவர்களை ஜவஹர்லால் நேரு அவர்கள் சந்திக்கவே மறுத்துவிட்டார்கள் ஒரு கட்டத்தில். அவர்களுடைய மூச்சு அடங்குகிற வரையில் ஆர்.எஸ்.எஸ். என்ற கொள்கை நிலையை அவர் ஒருபோதும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைப் பொறுத்தவரையில், தங்களுடைய சாகாவைப் பார்வையிட எல்லா தேசிய தலைவர்களையும் அழைத்தார்கள். அதுபற்றி விரித்துச் சொல்ல நேரமே இல்லை. ஜெயப்பிரகாசிலிருந்து எல்லோரும் என்ன சொன்னார்கள் என்று பல விஷயங்கள் இருக்கின்றன. ஆனால், காந்தியடிகள் சொன்னதை மட்டும் நான் சொல்லிவிட விரும்புகிறேன். காந்தியடிகளை அழைத்துக் கொண்டு போனார்கள். காந்தியடிகள் அந்த சாகா முழுவதையும் பார்த்துவிட்டு வந்து சொன்னார்கள். 'நீங்கள் இப்போது என்னென்ன வேலைகளைச் செய்கிறீர்களோ, அதேமாதிரிதான் ஹிட்லரும், முசோலினியும் செய்து கொண்டு இருந்தார்கள்' என்று மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்டதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1965-ஆம் ஆண்டு நடந்த பாகிஸ்தான் யுத்தத்தின்போது லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் சங்கத்தை அழைத்து டெல்லி சிட்டியின் பாதுகாப்பை 22 நாட்கள் அவர்கள் கையில் ஒப்படைத்திருக்கிறார்கள். யாருக்காவது சந்தேகம் இருந்தால், ஆர்.எஸ்.எஸ். ஆற்றும் அரும்பணிகள் என்று சொல்லக்கூடிய, 45 ரூபாய் விலையுடைய புத்தகத்தை யார் வேண்டுமானாலும் வாங்கிப் பார்க்கலாம். புள்ளி விவரங்கள் அதில் இருக்கின்றன. *(உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் எழுந்து நின்றார்)*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், விவாதம் எங்கோ சென்று கொண்டிருக்கிறது. இப்படி ஒவ்வொருவராகப் பேசினால் விவாதம் நீண்டுகொண்டே போகும். அவர்தான் சொல்லிவிட்டாரே "அந்தப் புத்தகம் 45 ரூபாய்" என்று, அதை வாங்கிப் பார்த்துக்கொள்ளுங்கள். திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது எனக்கு முன்னால் பேசிய பாரதிய ஜனதா கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் எல்லா ஆலயங்களிலும் எல்லா சமயச் சின்னங்களையும் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே, அவர்கள் போடாத சட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு அரசு அதிகாரிகளின் டேபிள்களிலும் அதை வைத்துவிட்டார்கள். ஆனால், மற்றபடி கிருத்துவ சமுதாயத்தைச் சார்ந்த சிலுவையோ, இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த மசூதியோ அங்கே வைக்கப்படவில்லை. வெறும் பெரும்பான்மை சமுதாயத்தைச் சார்ந்த சாமிப் படங்கள் மட்டும் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒரு அதிகாரி எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல், எவ்விதமான அச்சுறுத்தலுக்கும் ஆட்படாமல், "நான் சுதந்திரமாகப் பணி செய்கின்றேன்" என்ற உணர்வோடு எப்போது செயல்படுகிறாரோ அப்போதுதான் ஜனநாயகம் தழைத்து நிற்கும். ஆனால், காவல் துறை அலுவலகமாக இருந்தாலும் சரி, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய அலுவலகமாக இருந்தாலும் சரி, உள்ளே எங்கு சென்று பார்த்தாலும் வெறும் சாமிப் படங்கள்தான் இருக்கின்றன. முதலில் அங்கே சமத்துவத்தை உண்டாக்குங்கள். அங்கே கிருத்தவ ஆலயத்தை வையுங்கள், மாதா கோயில் ஒன்றை வையுங்கள், ஒரு மசூதியை வையுங்கள். அப்போது இந்தப் பிரச்சினையே வராது. அப்போது அங்கே இருக்கின்ற அதிகாரி பாரபட்சம் இல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அலுவலகம் முழுவதும் எல்லா சாமிப் படங்களையும் எப்படி வைக்க முடியும்?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** அப்போது எதையுமே வைக்காதீர்கள். அதுதான் எங்களுடைய கோரிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். எந்த அளவுக்கு திராவிட இயக்கமும், சிறுபான்மை மக்களும் இணைந்து இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களுடைய பார்வையிலே, அவர்களுடைய அரவணைப்பிலே இருந்து இந்தச் சமுதாயம் இன்று பிரிந்துபோய் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? 50 ஆண்டு கால உறவை உதறிவிட்டு இன்று பாரதிய ஜனதாவோடு

அவர்கள் சேர்ந்து கொண்டமையால் ஏற்பட்டதுதான் இந்த நிலைமை. அந்தக் காலத்திலே காவலர் குடியிருப்பிலே சென்று பார்த்தால் ஒரு கோயிலும் இருக்காது. இன்று, கோயில் இல்லாத காவலர் குடியிருப்பு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அதுமாதிரி, சிறைச்சாலை உள்ளே பாருங்கள்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** காவலர் குடியிருப்பிலே எல்லாம் கோயிலே வேண்டாம் என்று சொல்கிறீர்களா? இருக்கின்ற கோயிலை இடிக்கச் சொல்கிறீர்களா? என்ன சொல்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள். ஏற்கெனவே இருந்த கோயில், அதை என்ன செய்யச் சொல்கிறீர்கள்; அதைச் சொல்லுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிதாகக் கட்டுகின்ற காவலர் குடியிருப்பிலாவது அனைத்துச் சமயங்களுக்கும் ஏற்ப ஒரு கிருத்துவ மடாலயத்தை வையுங்கள், ஒரு கோயிலை வையுங்கள், முஸ்லீம்களுக்கு ஒரு சிறிய தொழுகைத் தலம் கொடுங்கள், மிகவும் சந்தோஷம். இருக்கின்ற கோயிலை இடிக்கச் சொல்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. ஆனால், அரசு அதிகாரிகள் தங்களுடைய பெஞ்ச்-ல் வைத்திருக்கிறார்களே, அங்கே முதலில் சமத்துவத்தை உண்டாக்குங்கள், அப்போதுதான் சமதர்ம சமுதாயம் அமைய முடியும்.

*பிற்பகல் 12-30*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய மதச் சார்பற்ற நடவடிக்கை எப்படி அமைய வேண்டும் என்பது குறித்த மிக முக்கியமான பிரச்சினையைக் குழப்பி விடக்கூடாது. ஏனென்றால், இந்திய அரசு மதச் சார்பற்ற அரசு என்பதால், எந்த மதத்தின் அடையாளங்களையும் பயன்படுத்தக்கூடாது என்பதில் உறுதிபட இருந்தால்தான், இந்தியாவில் பன்முகப்பட்ட கலாச்சாரத்தன்மை கொண்ட மக்களை ஒன்றுபடுத்த இயலும் என்பதால், அதைத்தான் வலியுறுத்த வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய இந்தக் கருத்தை மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் அவர்களுக்குப் பதிலாக, விளக்கமாக எடுத்துக் கூறியதாக நான் எடுத்துக்கொள்கிறேன். ஏனென்றால், அவர் எல்லா சாமிப் படங்களும், எல்லா கோவில்களும் ஒரே இடத்திலே இருக்க வேண்டும் என்று



சொன்னார். அதற்காகச் சொல்கிறேன். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த அரசின் சார்பாக உருவாக்கப்பட்டு வருகின்ற சமத்துவபுரங்களில் போடப்படுகின்ற நிபந்தனைகளிலே ஒன்று, எந்த மதத்தினுடைய கோயிலும் அங்கே இடம் பெறக்கூடாது என்பதுதான், என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரத்திலே, ஒவ்வொரு அதிகாரிகளுடைய Table மேலே இருப்பதைப்பற்றி நாங்கள் சொல்கிறோம். ஏனென்றால், இங்கே முதலில் சமத்துவம் வரவேண்டும். ஒரு அதிகாரி பாரபட்சமாக இருக்கிறார் என்பதற்காகத்தான் சொன்னேன். அதிகாரிகள் பாரபட்சமாக இருந்தால் அது சரிவராது. உதாரணமாக, இப்போதுகூட சென்னையிலே ஒரு சம்பவம் நடந்தது. மாண்புமிகு அமைச்சர் திரு. சுந்தரம் அவர்களுடைய தொகுதியிலே ஒரு புதூர் தர்கா அமைந்திருக்கிறது. அங்கே இருக்கின்ற இளைஞர்களெல்லாம் என்ன பண்ணுகிறார்கள்; "எங்கள் ஊரிலே இருக்கிற தர்கா; நீ, சுப்பிரபாதம் போடு" என்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. காரணம், மாண்புமிகு அமைச்சர் திரு. சுந்தரம் அவர்கள் அதை deal செய்து, சரி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் என்ன பண்ணுகிறார்கள் என்றால் மஞ்சளைப் பூராவும் தடவி, மூன்று லைன் குங்குமத்தை வைத்துவிடுகிறார்கள். கேட்டால், ஏற்கெனவே Court-ல் ஒரு decision இருக்கிறது என்றும் ஆண்டுக்கு ஒரு முறை சித்ரா பௌர்ணமி விழா கொண்டாடலாம் என்றும் சொல்கிறார்கள். அப்போதுகூட, சந்தனம் தடவித்தான் விழா கொண்டாட வேண்டும் என்று இருக்கிறது. அதையெல்லாம் மாற்றுகிறார்கள். இன்றைக்கு இங்கே வைப்பார்கள். நாளைக்கு Mount Road-லே வந்து வைப்பார்கள். நாளைக்கு இன்னொரு இடத்திலே கொண்டு போய் வைப்பார்கள். இதுபோன்ற பிரச்சினைகள் வந்துவிடக்கூடாது என்பதற்காக இவற்றையெல்லாம் நாங்கள் சுமுகமாக local level-லே பேசித் தீர்த்துக் கொண்டோம். இவ்வாறு local level-லே பேசித் தீர்த்துக் கொண்டதற்குக் காரணம் என்னவென்றால், எந்த ஒரு பிரச்சினையையும் ஒரு தேசியப் பிரச்சினையாக, தமிழகம் தழுவிய பிரச்சினையாக ஆக்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான். தர்காவுக்கு வருகிறான். அதில் தன்னை மெம்பராகப் போடும்படி கேட்கிறான். அப்போது எங்கள் ஊரிலே இருக்கும் இன்னொரு தம்பி கேட்டார்; "உங்கள் ஊரிலேதான் ஒரு கிருத்துவ தேவாலயம் இருக்கிறது; அங்கே போய் சுப்பிரபாதம் போடச் சொல்வாயா? அங்கேபோய் இன்னொன்றைப் போட வேண்டுமென்று சொல்வாயா? அந்த

மாதிரியெல்லாம் சொல்லக்கூடாது அய்யா" என்று சொன்னதற்குப் பின்னால், ஓரளவு அங்கே அமைதி நிலவியது. காரணம், பெரியவர்களெல்லாம் அவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்தவில்லையென்றால், இது இடம்விட்டு இடம் மாறக்கூடிய சக்தி வாய்ந்த பிரச்சினையாக ஆகிவிடும். ஆகவே, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சமீபத்திலே Video C.D. பிரச்சினை ஒன்று சென்னையிலே நடந்தது. அது சாதாரணப் பிரச்சினைதான். அந்தப் பிரச்சினையைக்கூட பெரிய பிரச்சினையாக ஆக்காமல் இருந்திருக்கலாம். யாரோ சில பட முதலாளிகள் நான்கைந்து பேர் சேர்ந்து, படத்தைத் தயார் பண்ணுகிறார்கள். தயார் பண்ணுகிற படத்தை என்ன பண்ணுகிறார்கள் என்றால், ஒருவனுக்குத் தெரியாமல் ஒருவன் Foreigner-க்கு விற்றுவிடுகிறான். அங்கேயிருந்து அவன் Video C.D.-ஐக் கொண்டு வருகிறான். இவன் rights-ஐ விற்காமல் எப்படி அங்கே போகும்? வீட்டிலே உள்ள பெண் ஏன் அய்யா வெளியே போகிறது? நீ பிடித்து வை. நீ மூடி, அவளைப் பூட்டி வை அய்யா. எப்படி வெளியே போக முடியும்? Video C.D. வெளியே போகிறது என்று சொல்லிவிட்டு, இங்கேயிருக்கிற சின்னச்சின்னக் கடைகளுக்கு எல்லாம் இங்கே இருக்கிற காவல் துறை துணை ஆணையர் ஒவ்வொரு கடைக்கும் சென்று அடித்து, வீட்டிலே இருக்கிற பொருட்களையெல்லாம் கொண்டு வருகிறார்கள். அவ்வளவு பெரிய அட்டூழியம் நடந்தது. பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதிலே ஒரு பையன் இறந்து போயிருக்கிறான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இறந்து போனவருக்கு மாரடைப்பு என்று சொல்லிவிட்டார்கள். இது எவ்வளவு பெரிய அட்டூழியம். இறந்து போனவருடைய தலையில் பெரிய காயம் இருந்தது. அந்தக் காயத்தைக்கூட நாங்கள் வெளியே சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், பிரச்சினை வந்துவிடும் என்பதற்காகச் சொல்கிறேன். பெரிய காயம் இருந்தது. இரத்தம் வந்து கொண்டிருந்தது. அந்த body-ஐ மீண்டும் கொண்டு வந்து, பர்மா பஜாரிலே வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் சொன்னேன், "வேண்டாம், இதனால் பிரச்சினைகள் எழுந்துவிடும்; நாளைக்கு இந்தப் பிரச்சினை கலவரமாக மாறக்கூடிய சூழ்நிலை வரும்; ஜே.எம். ஆரூண் வந்தார்; அவர் கலவரம் ஆக்கிவிட்டார் என்ற பிரச்சினை வேண்டாம்; நீங்கள் உடனடியாக body-ஐ எடுங்கள்;" என்றேன். Post-mortem-கூட இல்லை, ஒரு 174-கூட போடவில்லை. அந்த body-ஐ எடுத்து விட்டார்கள். அந்தப் பையனுக்கு மானியம் வாங்கித் தருகிறேன் என்று சொன்ன. படத் தயாரிப்பாளர்களும் மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரியும்



என்று நினைக்கிறேன்— இதுவரைக்கும் தரவில்லை. நேற்றைக்குக்கூட அவர்களுக்கு ஒரு கடிதம்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் அவர்களும், படத் தயாரிப்பாளர்களும் கலந்துபேசி, அந்தப் பேச்சுவார்த்தையிலே ஒரு முடிவிற்கு வந்து விட்டார்கள். இப்போது இந்த அரசைப் பற்றி இதிலே குறை கூறுவதற்கு என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அதுமாத்திரமல்ல; அந்தப் பிரச்சினை பர்மா பஜாரில் நடைபெற்ற பிரச்சினை. யாரோ படம் எடுக்கிறார்கள்; அதை ஏன் வெளியே விடுகிறார்கள் என்று சொல்லி ஒரு உதாரணமும் சொன்னார். பெண்ணை வீட்டிலே பூட்டி வை; வெளியிலே விட்டால் அப்படித்தான் நடக்கும் என்று சொன்னார். அப்படி நடக்கக்கூடாது. அப்படி நடக்கக்கூடாது என்றுதான் மகாத்மா காந்தியடிகளும் சொல்லியிருக்கிறார். "ஒரு பெண் சுதந்திரமாக வெளியே போய்விட்டு வர வேண்டும். அதுவும், இரவு 12 மணிக்கு நகை நட்டோடு போய்விட்டு வர வேண்டும். அப்போதுதான் நாட்டிலே உண்மையான சுதந்திரம் வந்ததாகக் கருத முடியும்" என்று காந்தியே சொல்லியிருக்கிறார். காந்தி பக்தராகிய ஆரூண் அவர்கள் அல்லது காந்தி பக்தர் என்று சொல்லிக் கொள்கிற ஆரூண் அவர்கள் இப்படிப் பேசுவது நல்லதல்ல.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லாட்சியிலே, இப்போது ரவுடிகள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பட்ஜெட்டிலே பேசுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** ரவுடிகள் பர்மா பஜாரிலே வந்து ஆளை வைத்து அடித்திருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஆகவே, பட்ஜெட்டிலே இன்னும் இரண்டு நிமிடங்கள் பேச வேண்டும். எனக்குப் பேச அனுமதி தாருங்கள். உடனே Cut பண்ணிவிடப் போகிறீர்கள்.

*பிற்பகல் 12-35*

சமீபகாலமாக, என்னுடைய தொகுதியிலே நிறைய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக சென்னை-கிருஷ்ணா குடிநீர். அது இன்னும் சென்னைக்கு வரவில்லை. கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். கிருஷ்ணா குடிநீர் வருகின்ற வாய்[illegible] எல்லாம் சரியான முறையிலே அமையவில்லை. [illegible] மன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அனுப்பி, கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்



222774

எந்த அளவிலே இருக்கிறது; அது எப்போது வந்து சேரும் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதேபோன்று, சென்னை நகருக்குப் பழையபடி, குடிநீர் முழு அளவிலே தரப்பட வேண்டும்.

என்னுடைய தொகுதி, வில்லிவாக்கம் தொகுதி. நிறைய தொழிற்சாலைகள் நிறைந்த தொகுதி. ஏறத்தாழ 40 சதவிகிதம் தொழிற்சாலைகள் மூடியிருக்கின்றன. இப்போதுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் தருவதாக அறிவித்திருக்கிறார்கள். இப்போது ஒரு சிலிண்டர் கேஸ் அதில் வாங்க முடியவில்லை. ஒரு சிலிண்டர் கேஸினுடைய விலை 220 ரூபாய் ஆகிவிட்டது. மூடிய தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களுக்கு மானியம் கொடுக்கும்போது, ஆயிரம் ரூபாயாவது கொடுங்கள். Atleast ஒரு மூட்டை அரிசியையாவது அவர்கள் வாங்கிக்கொள்வார்கள். ரேஷன் அரிசியையாவது வாங்கிக்கொள்வார்கள். ஒரு சிலிண்டர் கேஸை வாங்கி, கஞ்சியையாவது பொங்கித் தின்பார்கள். அதற்கும் வழியில்லாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டும்.

அதேபோல், சென்னையிலே பார்த்தீர்கள் என்றால், இப்போது traffic accidents.... (மணியடிக்கப்பெற்றது) Sir, Sir, One minute Sir, I had more interruptions, Sir. Traffic Accidents எக்கச்சக்கமாக நடைபெறுகின்றன. நேற்றுகூட பார்க்கும்போது, கேரளாவிலே இருந்து வந்தவர்கள் மீது ஒரு வண்டி மோதி, 4 பேர் சம்பவ இடத்திலேயே இறந்திருக்கிறார்கள். இரவு நேரத்திலே, தாம்பரம் தாண்டியவுடன் எல்லா டிரைவர்களும் Full-ஆக drinks சாப்பிட்டுவிட்டு வண்டி ஓட்டுகிறார்கள். Highways Patrol சரியான முறையிலே செயல்படுவதில்லை. Highways Patrol வண்டிகளை நிறுத்தி, ஒவ்வொரு வாகன ஓட்டுனரையும் Check செய்தால், இதுபோன்ற Fatal accidents-ஐத் தவிர்த்துவிடலாம். ஏறத்தாழ, 175 பேருக்குமேல் இறந்திருக்கிறார்கள். ஆகவே, அயல்நாடுகளில் இருப்பது போன்று ரோடுகளின் சென்ட்ரலில், barricades ஆவது போடுங்கள். ஒரு பக்கம் ஒரு வண்டி போகும்போது, மற்றொரு வண்டி எதிரே வந்தாலும் நேருக்கு நேர் மோதுகின்ற accidents ஏற்படாது. அதற்கான வழி முறைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் அறிக்கையிலே, சிறுபான்மை மக்களுக்கு இட ஒதுக்கீடு தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், இட ஒதுக்கீடு பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே



எங்களுக்கு இட ஒதுக்கீடு தரவில்லை என்றால் எப்போது தருவார்கள்? பி.ஜே.பி. ஆட்சியிலே தருவார்களா? (சிரிப்பு) (குறுக்கீடு)

**திரு. பா. மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடு)

**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** ஆகவே, எங்களுக்கு பத்து சதவிகிதம் இட ஒதுக்கீடு தரவேண்டும். முஸ்லீம் மேம்பாட்டுக் கழகத்தை ஆரம்பித்தீர்கள். நாங்கள் உளமார சந்தோஷப்பட்டோம். ஆனால், அதன் உள்ளே படித்துப் பார்த்தால், அதற்கான நிதியை மத்திய அரசிடமிருந்து வாங்கித் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நீங்களே தரக்கூடாதா? மகாராஷ்டிரா அரசு 50 கோடி ரூபாய் தந்திருக்கிறது. ஆந்திர மாநில அரசு, சிறுபான்மை மேம்பாட்டு நிதிக்கு 50 கோடி ரூபாய் தந்திருக்கிறது. அண்டை மாநிலங்களிலே, 50 கோடி ரூபாய் கொடுத்திருப்பதால், நீங்கள் 100 கோடி ரூபாய் கொடுங்கள்.

எம்.எல்.ஏ. தொகுதி Fund 50 இலட்சம் ரூபாய் கொடுக்கிறீர்கள். அதை ஒரு கோடி ரூபாய் அல்லது இரண்டு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மூடிய தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும்... (மணியடிக்கப்பெற்றது)

கடைசியாக ஒரே ஒரு பாயிண்ட். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, (சிரிப்பு) மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபகாலத்திலே நடைபெறுகின்ற குற்றங்களை எல்லாம் கருத்தில்கொண்டு, எங்கெல்லாம் interior place களிலே, மடாலயங்கள், தேவாலயங்கள் இருக்கின்றனவோ, தர்காக்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் Police Out-post நிறுவுவோம் என்றால், அங்குள்ள மக்கள் எல்லாம் மிகவும் பாதுகாப்பாக இருப்பார்கள். பூதூரிலே இருக்கின்ற ஷா-இன்-ஷா பாபா தர்காவிற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு Police Out-post நிறுவ வேண்டும். காரணம், அங்கே போகின்ற people எல்லாம், insecure ஆகப் போகிறார்கள். ஒருவாரத்திலே எடுத்துக் கொண்டோம் என்றால், 10,000 மக்கள் போகிறார்கள். All are poor people. நாளைய சாப்பாட்டிற்கு வழியில்லாத பரம ஏழை பாமர மக்கள் அங்கே வருகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத வகையில் அச்சுறுத்தலாக, உள்ளூரிலே இருக்கிற சில இளைஞர்கள் இருக்கிறார்கள். அது சமூக விரோதச் செயலாக நாளைக்கு மாறிவிடக் கூடாது. ஆகவே, அதுபோன்ற இடங்களிலே, அவற்றை எல்லாம் ஏற்படுத்தி, ஓர் அச்சமற்ற நிலையை உருவாக்க

வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, கும்மிடிப்பூண்டி திரு. வேணு.

*பிற்பகல் 12-40*

***திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழக முதல்வர் அவர்களே, நான்காவது முறையாக பொறுப்பேற்றதற்குப் பின்னர் அளித்த 13-வது நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும், தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரவு-செலவுத் திட்டம் என்பது, ஒவ்வோராண்டும் அவைமுன் வைக்கப்படும் வழக்கமான ஒன்றுதான். ஆனால், இந்த முறை நம்முடைய முதலமைச்சரால் அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த வரவு-செலவுத் திட்டம் வழக்கமான ஒன்று என்பதைவிட, வரலாறு படைக்கும் ஒப்பற்ற திட்டமாக உயர்ந்து நிற்கிறது.

வருமுன் காப்போம் என்ற தொலைநோக்குப் பார்வையுடனும், வாழ்ந்து காட்டுவோம் என்ற உறுதியுடனும் வகுத்தளிக்கப்பட்ட திட்டமாகும். இந்த வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் திட்டமாகவே இத்திட்டம் தன்னிகரில்லாத் தலைவர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல்வரின் முத்தான சொற்களில் தொகுப்பது என்றால், என் கடன் பணி செய்து கிடப்பதே என்று தந்தை பெரியார் தந்த பார்வை, அறிஞர் அண்ணா வகுத்தளித்த பாதை இவற்றில் கால் பதித்து தமிழ் மக்களைக் கரை சேர்க்கும் மூழ்கடிக்க முடியாத கப்பலாகக் காத்திருக்கிறார் நம் முதல்வர். உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பல ஒப்பற்ற திட்டங்களை உள்ளடக்கியதாக இந்த நிதிநிலை அறிக்கை பேருலா வருகிறது. உழவர்கள் விளைவிக்கும் காய்கறிகளை நேரடியாக விற்று நியாயமான விலை பெறுவதற்கு உழவர் சந்தைகள், கிராமப்புற மக்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கு நிலையான மையங்கள் நிறுவும் திட்டங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற வாழ்வில் ஒளி ஏற்றும் பல அரிய திட்டங்கள் இந்நிதிநிலை அறிக்கையிலே உள்ளன.



கடந்த ஆண்டு 94.00 இலட்சம் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி இந்த ஆண்டு 103 இலட்சம் டன்னாக உயர்ந்து இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்னுரிமை தந்து, தரிசு நிலங்களை 10 ஆண்டுகளில் மேம்பாடு செய்வதற்கான தொலைநோக்குத் திட்டமும் இதில் தீட்டப்பட்டிருக்கிறது என்ற சுவையான செய்தியும் இதில் உள்ளது.

அதுமட்டுமல்லாமல், மீனவர் நலனுக்காக இலவச வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 20,000 வீடுகள் கட்டித் தரும் திட்டம் வரும் நிதியாண்டிலேயே நிறைவடையவிருக்கிறது.

உழவர் சந்தையைப் போன்று மீனவர் அங்காடிகளை அமைக்கும் புதிய திட்டமும் இடம் பெற்றிருக்கிறது.

தொழில்துறையில் இந்த அரசு பின்பற்றி வரும் தொழில் கொள்கையின் விளைவாக பெரிய வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள், சென்னைக்கு அருகில் குறிப்பாக என்னுடைய மாவட்டத்திலேயே பிரம்மாண்டமான கார்த் தொழிற்சாலைகளை நிறுவி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில், பல எண்ணற்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கட்டடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், கல் உடைக்கும் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கும் ஏற்கெனவே நல வாரியம் இயங்கி வருகின்றது. கட்டடத் தொழிலாளர் நல நிதியில் ஏறத்தாழ ரூ.20 கோடி அளவிற்கு நிதி சேர்ந்து இருக்கிறது. தற்போது மேலும் 56 வகையான சிறுசிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற அமைப்பு ரீதியாக திரட்டப்படாத தொழிலாளர்களின் நலன் காக்க ஒரு வாரியம் அமைக்கப்படும் என்ற இனிப்பான செய்தியும் இந்த நிதிநிலை அறிக்கையில் வந்திருக்கிறது. இவற்றில் அதிகமான எண்ணிக்கையில் உள்ள தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகைக் கார் ஓட்டும் தொழிலாளர்கள் நலனுக்காக தனித்தனியே வாரியங்கள் அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் நலன் பாதுகாக்க அவர்களுக்கென்று ஒரு வாரியம் உருவாக்கப்படும் என்ற புரட்சிகரமான திட்டமும் தீட்டப்பட்டுள்ளது. அடித்தளத்திலே உள்ள அந்தத் தொழிலாளர்களை ஓர் அமைப்பிற்குள் கொண்டு வரவும், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நியாயமான ஊதியம் வழங்கவும்,

வேலையில்லாத நாட்களுக்கு இழப்பீடு கிடைக்கவும், மருத்துவம், கல்வி போன்ற வசதிகளைப் பெற்றிடவும், விபத்துகளுக்கான இழப்பீடு, பேறுகால ஊதியம் போன்ற வசதிகள் கிடைக்கவும் இந்தத் திட்டம் பெரிதும் பயன்படும்.

அரசு புறம்போக்கில் உள்ள நிலங்களில் வீடு கட்டி பத்து ஆண்டுகளாக அனுபவித்து வருபவர்களுக்கு, அந்த இடங்களுக்கான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் திட்டம் ஏழை பாட்டாளி மக்களின் வாழ்விலே ஒளி ஏற்றுகின்ற திட்டமாக அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல, கம்பன் காட்டும் இராமனைப் போல இந்தத் திட்டம் காட்சியளிப்பதாக எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அதனால் நான் சொல்லியாக வேண்டிய காரணத்தினால் சொல்கிறேன். கம்பன் காட்டும் இராமனைப் போல இந்தத் திட்டம் காட்சியளிக்கிறது. இராமனைக் கண்ட மக்களைப் பற்றி கம்பர் விரித்துரைக்கின்றபோது, அவனுடைய தோள் கண்டார் தோளே கண்டார் என்றார். இராமனுடைய தோளைப் பார்த்தவர்கள், தோளையே பார்க்கிறார்கள். தாமரை போன்ற அவனது பாதங்களைப் பார்த்தவர்கள், பாதங்களையே பார்க்கிறார்கள். அதிலிருந்து பார்வையை மாற்றமுடியாத அளவுக்குக் கொள்ளை அழகு கொண்டவனாக இராமன் திகழ்கிறான் என்று கம்பர் வர்ணிக்கிறார். அதைப்போல, மாண்புமிகு கலைஞர் அவர்கள் படைத்துள்ள வரவு செலவுத் திட்டத்தில், அவர் வெளியிட்டுள்ள ஒவ்வொரு திட்டத்தையும் பார்ப்போர், கேட்போர் யாரும் தங்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்ப முடியாது. எனவே, கம்பன் காட்டும் இராமனாகவே கலைஞரின் கைவண்ணம் இயற்றிய திட்டங்கள் யாவும் காட்சியளிக்கின்றன. இத்தகைய செயற்கரிய செயலைச் செய்யும் கலைஞரை பெரியாராகவே காண்கிறோம். அளப்பரிய அறிவாற்றலும், அருள் உள்ளமும் கொண்டிருப்பதால் அண்ணாவாகவே உணர்கிறோம். .

*பிற்பகல் 12-45*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கம்பன் கண்ட இராமனைப் பற்றி விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய ஆதங்கம் எல்லாம், இந்த அரசினுடைய பட்ஜெட், இராமனுக்கு கோவில் கட்டுவோம் என்று சொல்லிப்போனவர்களுடைய பின்னாலே போய், அந்த வகையிலே அமைந்துவிடக்கூடாது என்பதுதான். பெரியார், அண்ணா வழியிலே முழுமையாக அமையவேண்டுமென்ற கருத்தைத்தான் நாங்கள் விமர்சித்தோம்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது, கம்பன் காட்டும் இராமன். மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா சொன்னது, கம்பன் கண்ட இராமன். கம்பன் இராமனைக் காணவில்லை. (பலத்த சிரிப்பு)*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டிருந்த பொழுது, இராமனை, கம்பன் சொல்கிறபோது, காலடியைப் பார்த்தவர்கள் காலடியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். தோளைப் பார்த்தவர்கள், தோளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள், என்ற அந்தக் கோணத்தில்தான் நானும் அதை விமர்சித்தேன். ஆகவே, இப்பொழுது, இராமன் பக்கமே இந்த அரசு சென்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான், நாங்கள் இதை வலியுறுத்துகிறோம்.*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *இராமன் பக்கமே, இந்த அரசு என்றைக்கும் போகாது. ஆனால், அதற்காக மசூதியை இடிக்கின்ற வேலையையும் எந்தக் காலத்திலேயும் அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கீடுகள் வந்த காரணத்தினால் என்னுடைய உரைக்கான நேரத்தை, மேலும் ஒரு நிமிடம் நீட்டித்துத்தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

*காமாலை நோய் கண்டவன் கண்ணுக்குத் தெரிவதெல்லாம் மஞ்சள். அதற்காக பொருட்கள் எல்லாம் மஞ்சள் நிறமானவை என்று அர்த்தமல்ல. நான் மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுடைய பார்வைக்கு வருகிறேன் - நமக்கோ பெரியார் பார்வை; அண்ணா பாதை. மாற்றார்க்கோ மஞ்சள் காமாலையால் காண்பதெல்லாம் மஞ்சள். உண்மையாகவே தூங்குபவரை எழுப்பலாம். ஆனால், தூங்குவது போல நடிப்பவர்களை எப்படி எழுப்புவது? சத்தியம் தவறாத உத்தமரைப் போலவே நடிப்பவர்கள், சமயம் பார்த்துப் பல வழிகளிலும் கொள்ளையடிப்பவர்கள், நயவஞ்சக சுயநலப் பேர்வழிகள். நமது பயணத்தைத் தவிர்த்துவிட முடியாது. வாய் இருந்தும் ஊமைகளாய், கண் இருந்தும் குருடர்களாய், செவி இருந்தும் செவிடர்களாய், வலம் வருவோர், எதிர்க்கும் எதிர்கூச்சல் எல்லாம் புறநானூற்றை மறைக்க வந்த புழுதிக் காற்றாகவே கருதப்படும். வளமான தமிழகத்தை உருவாக்க (மணியடிக்கப்பெற்றது) இந்த வரவு செலவுத் திட்டத்தை நமக்களித்த வான்புகழ் வள்ளுவனின் வழித் தோன்றல் வாழ்க, வாழ்கவே என வாழ்த்தி அமருகிறேன், நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க, 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதி தந்த, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஆக்கத்தையும், நல்ல கருத்துக்களையும், திட்டங்களையும் கொண்ட, புதுவரி இல்லாத, புத்தாயிரத்து ஆண்டு பட்ஜெட் என்று பார் போற்றுகிறது. பாமரர்களும் போற்றுகிறார்கள். படித்தவர்களும் போற்றுகிறார்கள். ஆனால், ஒருசிலர் மட்டும் இதில் ஏதோ, தேர்தல் வாடை அடிக்கிறது என்று சொல்கிறார்கள். தேர்தல் வாடை என்று சொன்னால், தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிற கலைஞர் அவர்கள், இன்னும் 50 ஆண்டுகள் பொறுத்து வரப்போகின்ற குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காகவே, இப்பொழுதே, திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்களே, இதுதான் தேர்தல் வாடை என்று சொல்கிறார்களா? அல்லது, இது தேர்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை என்று அவர்கள் கருதுகிறார்களா என்று தெரியவில்லை. அப்பொழுது இராஜாஜிக்கு உடம்பெல்லாம் மூளை என்று சொல்வார்கள். இராஜாஜியே இருந்தால்கூட, இப்போது தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிற கலைஞரைப் பார்த்து இவர் நம்மையும் மிஞ்சுவார் என்று சொல்கின்ற அளவிற்கு இவர்கள் நெடுந்தூரப் பார்வையில் திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-50*

அடுத்து, சில சுயநல அரசியல்வாதிகள் இதை மலிவுப் பதிப்பு பட்ஜெட் என்று விளம்பரம் செய்கிறார்கள். அதற்குப் பதிலாக, தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற கலைஞர் அவர்கள் "உண்மைதான், இது மலிவுப் பதிப்பு பட்ஜெட்தான். நாங்கள் மலிவானவர்கள், நீங்கள் விலைமதிப்பு மிக்கவர்கள்" என்று திரும்பச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே மலிவான பட்ஜெட் என்று சொல்வது, மக்களுக்காக, நான்காம் தர மக்களுக்காகப் போடுகின்ற பட்ஜெட், ஏழை எளிய மக்களுக்காக பலன் தருகின்ற நிதிநிலை அறிக்கையாகும் இது.

அடுத்து, பட்ஜெட் என்று வந்தாலே தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் எல்லாம் வியாபாரிகள் எல்லாம் நாளை காலை என்னென்ன வரி



போடுவார்களோ எதெதற்கு வரியை அதிகமாக்குவார்களோ என்று இரவெல்லாம் தூங்காமல் இருப்பார்கள். விவசாயிகள் கவலைப்படாமல் இருந்தாலும் மற்ற வகுப்பினர் எல்லாம் நிதிநிலை அறிக்கையைப் பற்றி மிகவும் கவலைப்பட்டுக்கொண்டு இருப்பார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, 75 கோடிக்கு வரி சலுகையும் அளித்து, தற்போதுள்ள அரசு நிதிச்சுமையும் சுமந்து, 665 கோடி ரூபாய்தான் பற்றாக்குறை என்று கலைஞர் அவர்கள் அறிவித்திருப்பதைப் பொருளாதார மேதைகள் எல்லாம் போற்றுகிறார்கள். இது சிறந்த நிதிநிலை அறிக்கை என்று பொருளாதார மேதைகள் அத்தனை பேரும் இதனைப் போற்றுகிறார்கள். அதே சமயத்தில் "Tillers are the pillars of this country" என்று சொல்வார்கள். நாட்டினுடைய முதுகெலும்பு விவசாயிகள். ஆனால், விவசாயிகளுக்காக என்ன செய்தார்கள் என்று எதிரிலே இருப்பவர்கள் எல்லாம் கேட்கிறார்கள். விவசாயிகளுக்காக 12 சலுகைகளைத் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒன்றா, இரண்டா, பட்டியலிட்டுக் காண்பிக்க முடியும். இருந்தாலும் மாதிரிக்காக ஒன்றிரண்டை மட்டும் நான் சொல்லி, அதனுடைய கருத்துகளைச் சொல்லலாம் என்று இருக்கிறேன். அபராத வட்டியைத் தள்ளினார்கள். கூட்டுறவுக் கடன்களுக்கான அபராத வட்டியைத் தள்ளுவது கிராமத்திலே இருக்கின்ற ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களுக்கென்று இருக்கின்ற சுமையை எல்லாம் இறக்கி வைப்பதுபோல் ஆகும். ஏன் என்றால், கடனிலே பிறந்து, கடனிலே வளர்ந்து, கடனிலே இறந்து கொண்டிருக்கின்ற விவசாயிகளைக் கைதூக்கி விடுவதற்காக அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற கலைஞர் அவர்கள். அதைக் கிராமத்து விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் போற்றுகிறார்கள்.

அதேசமயம், ஏரிகள் எல்லாம் சோழ மன்னர் காலத்தில்தான் செவ்வனே பராமரிக்கப்பட்டு வந்தன என்பதை நாம் சிறு வயதிலேயே படித்திருக்கிறோம். ஆனால் இப்போது திருவாரூர் சோழன் ஆளுகின்ற காலத்தில்தான் ஏரிகள் எல்லாம் பராமரிக்கப்பட வேண்டும், கண்மாய்கள் எல்லாம் தூர்வாரப்பட வேண்டும் என்று நிதியை ஒதுக்கி இருக்கிறார்களே, இதற்காக இந்த அரசை, இந்தக் கலைஞரை தமிழக மக்கள் போற்றுகிறார்கள். இப்படிப் பல திட்டங்களை விவசாயிகளுக்காக அளித்திருக்கிறார்கள். நில உரிமைப்பதிவேடு தந்திருக்கிறார்கள். இவையெல்லாம் விவசாயிகளுக்காக அளித்த வரிச் சலுகைகள்.

அடுத்து, வணிகர்களையெல்லாம் நேரிலே அழைத்துப் பேசி அவர்களுக்கு 75 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளித்திருக்கிறார்கள். இது வரி இல்லாத பட்ஜெட் என்று சொன்னாலும், வரிச் சலுகைகள் 75 கோடிக்கு அனுமதித்திருக்கிறார்கள் தலைவர் அவர்கள். அதற்காக வணிகர்கள் எல்லாம் போற்றுகிறார்கள். அண்டை மாநிலங்களுக்கு நம்முடைய வருவாய் செல்லக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக ஆற்று வகை என்று குறிப்பிட்டு, வருவாயைப் பெருக்குகின்ற வகையில் இந்த வரிச் சலுகைகளை எல்லாம் அளித்திருக்கிறார்கள். அதற்காக வணிகர்கள் எல்லாம் வாயார தமிழக முதல்வர் அவர்களைப் போற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அடுத்து,

**“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**
**மாடல்ல மற்றை யவை.”**

என்று சொல்லுகின்ற அளவிற்கு கல்விக்காக 4,949 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டில் 6,000 ஆசிரியர்களும், 4,000 சீருடைப் பணியாளர்களும் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேசமயம், கணினி அறிவு பள்ளி மாணவர்களுக்கு அவசியம். 666 பள்ளிகளில் கணினி அறிவு சொல்லிக் கொடுத்தாலும், இன்னும் மீதமுள்ள பள்ளிகளிலும் இது இந்த ஆண்டு நிறைவு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சமீபத்தில், நான் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு ஒரு குழுவிலே சென்று வந்தேன். அப்போது அங்கிருந்த மகாராஷ்டிரா சட்டமன்ற சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள், “கணினி பாடம் இந்தியாவில் எவ்வளவு முக்கியம் என்பதை உணர வேண்டும். எம்.ஏ., பி.எச்.டி., அல்லது டாக்டரேட் படித்தால்கூட ‘கம்ப்யூட்டர்’ அறிவு இல்லாதவன் ‘அங்குட்டா’’ என்று. ‘அங்குட்டா’ என்று இந்தியிலே அவர்கள் சொல்வது எங்களுக்குப் புரியவில்லை என்றாலும்கூட, ‘அங்குட்டா’ என்றால் என்ன என்று கேட்டவுடன் ‘அங்குட்டா’ என்றால் ‘L.T.I.’ ‘கைநாட்டு’ என்று சொன்னார்கள். படித்தவர்கள் எல்லாம்கூட கணினி பாடம் கற்கவில்லை என்றால் கைநாட்டுகள் என்று சொல்லுகின்ற அளவிற்கு இந்த உலகம் சென்று கொண்டிருக்கிறது. அதனுடைய முக்கியத்துவத்தை அறிந்துதான் தலைவர் அவர்கள் கணினி பாடத்தை ஆரம்ப முதலே, ஆரம்பப் பள்ளிகளிலேயே புகுத்த வேண்டுமென்று கருதிப் புகுத்தியிருக்கிறார்கள்.

அதேசமயத்தில் மீனவர்களுக்கும் நல்ல திட்டங்களை எல்லாம் வகுத்திருக்கிறார்கள். இந்த 5 ஆண்டு காலத்தில் 20,000 வீடுகள் தந்திருக்கிறார்கள். அங்கே ‘உழவர் சந்தையைப்’ போல மீனவர் அங்காடி



ஏற்படுத்த வேண்டுமென்று 10 இடங்களில் மீனவர் அங்காடிகளை உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். வரும் நிதியாண்டில் 1,000 வீடுகள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கட்டித் தரப்படும் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். இவையெல்லாம் மீனவர்களுக்காகத் தந்த சலுகைகள். அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப் போற்றுகிறார்கள். அதேசமயம், தேவைக்கேகூட படி அளக்கிறான் ஆண்டவன் என்று ஆன்மீகவாதிகள் கூறுகிறார்கள். ஆனால் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கின்ற கலைஞர் அவர்கள் சாதாரண ஒரு கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கும், அவர்கள் வயிற்றிலே வளர்கின்ற சிசுவிற்கும் கூட நிதியுதவி தந்து தமிழகத்தினுடைய மக்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் வாயில்லாத ஜீவன்களான அவற்றுக்கும்கூட ஒரு பாதுகாப்புத் திட்டம் வேண்டுமென்றுதான், வருமுன் காப்போம் என்று மக்களுக்கும், பாதுகாப்புத் திட்டம் என்று மாக்களுக்கும் திட்டங்களை வகுத்து நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறார்கள். அதையும் போற்றுகிறது தமிழகம்.

பிற்பகல் 12-55

தமிழகத்தைப் பொறுத்தவரையில் குடிநீர் வடிகால் வாரியம் சிறந்த சேவை செய்து கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள், கிராமச் சாலைகள் அத்தனைக்கும் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே சமயத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் இப்போது வான் பொய்த்த காரணத்தினால் குடிநீர்ப் பஞ்சம் வந்துகொண்டிருக்கிறது. அது குறித்து அந்தத் துறையினுடைய அமைச்சரிடத்திலேகூட நாங்கள் நேரிலே பேசியிருக்கிறோம். இந்த மாவட்டத்திலே குடிநீர்ப் பஞ்சம் வரப் போகிறது, அதை நீங்கள் சரி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்களும் சரி செய்கிறோம் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், போளூரில் அமிர்தி மக்கள் நீர்த்தேக்கத் திட்டம் பற்றிப் பல ஆண்டுகளாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே நான் பல முறை சொல்லியிருக்கிறேன். அவர்களும் “நிதியில்லை, என்ன செய்வது” என்று சொல்கிறார்கள். இருந்தாலும் கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் அந்தப் பகுதியில் அமிர்தி நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றித் தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த பெரியோர்கள் எல்லாம் கருத்துகளைச் சொன்னார்கள். இடைத் தேர்தலைப் பற்றிச் சொன்னார்கள்.

மூன்று இடைத் தேர்தல், திருச்சி, நெல்லிக்குப்பம், அறந்தாங்கி ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வந்தபோது " அடுத்த 2001 ஆம் ஆண்டில வருகின்ற தேர்தலுக்கு இது முன்னெச்சரிக்கை நோட்டீஸ்" என்று சொன்னார்கள். தமிழகத்தினுடைய மக்கள் முன்னெச்சரிக்கையாக மூன்று இடைத் தேர்தல்களிலேயும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுவதற்கு ஆதரவு தந்திருக்கிறார்களே, அதுதான் முன்னெச்சரிக்கை நோட்டீஸ். வருகின்ற 2001 தேர்தலிலும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக மீண்டும் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக வருவார் என்பதற்கு இதுவே உத்தரவாதம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. எல்லாம் வல்ல என்னுடைய இதய தெய்வம் முருகனையும், என்னுடைய அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களையும் வணங்கி, இந்த நிதிநிலை அறிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். (குறுக்கீடு) உங்களுக்கு - மாண்புமிகு முதலமைச்சருக்கு எப்போதும் நன்றி கூறிக்கொண்டிருப்பேன்.

உண்மையிலேயே இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாக வரவேற்றுப் பேச வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும் (சிரிப்பு) ஒருசில குறைகளை நான் இங்கே சுட்டிக்காட்டியே ஆக வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதலிலே நான் முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கிட்டத்தட்ட நீண்ட நெடு நாட்களாக பரம்பிக்குளம் ஆழியாறு பகுதியிலே விவசாயிகளுடைய கோரிக்கை, ஒரு மடை விட்டு ஒரு மடை தண்ணீர் பாய வேண்டும், அப்போதுதான் நிலத்தடி நீர் வெளியே வரும் என்ற அந்த அடிப்படையிலே கோரிக்கை இருந்துகொண்டே இருந்தது. 18-11-1998 அன்று அழகுமலை முருகனுடைய திருவடியின் கீழே ஒரு மாபெரும் மாநாட்டை நான் கூட்டினேன். கட்சிப் பாகுபாடு இல்லாமல் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. சுப்பராயன் அவர்களும், திருமதி சரஸ்வதி அவர்களும், தம்பு அவர்களும், பொள்ளாச்சி திரு. ராஜு போன்றவர்கள் எல்லாம் கலந்துகொண்டு, அங்கே சகல கட்சிகளைச் சார்ந்த விவசாயிகளை அழைத்து வைத்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். ஒரு மடை விட்டு ஒரு மடை இந்த நீர் பாய வேண்டுமென்று சொன்னபோது — அன்றைக்கு நம்முடைய அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அவர்கள் வரமுடியாவிட்டாலும்கூட



அவர்களுடைய பிரதிநிதியாக நம்முடைய மாவட்ட ஆட்சியர் அவர்கள் வந்திருந்தார்கள். அப்போது— அங்கேயிருந்த அதிகாரிகள் இது முடியாது என்று சொன்ன நேரத்திலே நிச்சயமாக அது முடிய வேண்டும் என்ற அமைப்போடுதான் இங்கே வந்து சக சட்டமன்ற உறுப்பினர்கள் நம்முடைய காங்கேயம் மன்றாடியாரிலிருந்து மற்ற அத்தனை பேரும் கையெழுத்திட்டு ஒரு மகஜரைக் கொடுத்தோம். முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களும் அதை கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த நேரத்திலே மீண்டும் அதிகாரிகள் எல்லாம் இது ஒரு புதிய தத்துவார்த்தமான முறை, இது நடைபெறாது என்று சொன்னார்கள். ஆனால் பொள்ளாச்சியிலே ஒரு மாபெரும் விவசாயிகள் மாநாட்டின் வழியாக மீண்டும் அதை வற்புறுத்தி நாங்கள் சொன்னபோது மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அந்த நேரத்திலே அதிகாரிகளைப் பார்த்துச் சொன்னது முடியாது என்பது என்றைக்குமே இல்லை.—இது பகிரங்கமாக தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு சொன்ன வார்த்தை—மோகன் கந்தசாமி போன்றவர்கள் எல்லாம் கேட்கிறார்கள். இதை முயற்சி செய்து முடிப்பதற்கு ஏதாவது செய்யுங்கள் என்று கட்டளையிட்டதோடு மட்டும் அல்லாமல் மோகன் கிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி அமைத்தார்கள். அந்த கமிட்டியின் அறிக்கையின் வாயிலாக அந்த ஒரு மடை விட்டு ஒரு மடை பாயும் என்ற அந்த தத்துவத்தை ஏற்றுக்கொண்டு இப்போது பரம்பிக்குளம் ஆழியாறு விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்றதற்காக நான் மீண்டும் முதலமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

அடுத்தபடியாக இப்போது இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் தொடக்கத்திலேயே விவசாயிகளையும், வியாபாரிகளையும் அழைத்து ஒரு கூட்டத்தைப் போட்டார்கள். உண்மையிலேயே இது வரவேற்கத்தக்க செயல் ஆகும். ஆனால் அங்கே நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்களை நிறைவேற்றினார்களா என்று சொன்னால் வியாபாரி என்ற முறையிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒருசில தீர்மானங்களைக் குறிப்பாக சிறு சிறு வணிகர்களுக்கு உள்ள அந்த வரிகளை எல்லாம் நீக்கிக் கொடுத்தார்கள். ஆனால் விவசாயிகளுடைய பிரச்சினை முழுமையாக அங்கே பேசித் தீர்க்கப்பட்டதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை என்றுதான் என்னால் வருத்தத்தோடு கூற முடிகிறது. காரணம் இப்போது விவசாயிகள் பட்டுக்கொண்டிருக்கின்ற துன்பம், துயரம் ஏராளம் ஏராளம்.

கடனாளியாகவே இருந்து அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் போய்க்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறோம். நேற்றைக்குக்கூட இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்பொழுது நல்ல முறையிலே பேசக்கூடிய திரு. வேலாயுதன் அவர்கள்கூட விவசாயிகள் கடனைத் தீர்க்க வேண்டும், முழுமையாக நீக்க வேண்டும் என்று கேட்கின்றபொழுது ஒரு மாறுபட்ட கருத்தைக் கூறினார்கள். இன்றைக்குக்கூட அவர்கள் . . . (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். இன்றைக்குக்கூட . . . .

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் என்று நான் சொல்லவே இல்லை. கடன் கொடுத்து வாங்கக்கூடிய பழக்கத்தைக் காப்பாற்ற வேண்டும்; அது நன்மை பயக்கும் என்றுதான் சொன்னேனே தவிர விவசாயி என்று குறிப்பிடவே இல்லை.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** விவசாயிகள் பிரச்சினையில் கடனை நீக்க வேண்டும் என்று கேட்கின்றபோது நீங்கள் அதைச் சொன்னதனால்தான் அதை நான் எடுத்துக்கொண்டேன். அதேபோல இன்றைக்குக்கூட இந்தச் சபையிலே நீங்கள் அந்த ஆர்.எஸ்.எஸ். பிரச்சினையைக் கிளப்பி எங்களுடைய திரு. ஆரூண் அவர்கள் பதில் சொல்லும்போது என்னை அறியாமலேயே எனக்கு ஒரு பயம் வந்து விட்டது. கோவை மாவட்டத்தை தயவு செய்து நினைத்துப் பாருங்கள். மீண்டும் இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் வராமல் இருப்பதற்கு இதுபோன்ற விவாதங்கள் எல்லாம் தேவையில்லை என்பது, அதுவும் இதுபோன்ற மாபெரும் சட்டமன்றத்திலே தேவையில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேருக்கும் சேர்த்துச் சொல்லுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இரண்டு பேருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஆகவே இதுபோன்ற தேவையற்ற விவாதங்களை இந்த மாமன்றத்திலே பேச வேண்டாம். அந்த மாவட்டத்திலே நாங்கள் எல்லாம் துன்பத்தை அனுபவித்தவர்கள். ஆகவேதான் அதைச் சுட்டிக்காட்டுகிறேன். விவசாயிகளுடைய கடனை முழுமையாக தயவு செய்து இந்த முறை நீக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்வேன். இப்போது கூட்டுறவுக் கடனை எல்லாம் தீர்ப்பதாக அதாவது அபராத வட்டியைத் தீர்ப்பதாகச் சொன்னீர்கள். அது 10 வருடங்களாக வாங்கிய கடனுக்கா? அல்லது இந்த வருடம் வாங்கிய கடனுக்கா? முழுமையாக அதைத் தீர்த்துக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



மின் இணைப்பைப் பொறுத்தவரையிலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கிடைக்கின்றது. மின் இணைப்புக் கேட்டால் 10, 15 ஆண்டுகள் ஆகிவிடுகிறது அது கிடைப்பதற்கு. ஆக உடனடியாக அந்த மின்சார இணைப்புக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

விவசாயிகளை குறிப்பாக தென்னை விவசாயிகளை கடுமையாக பாதித்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினை ஏரியோஃபைட் என்ற வியாதி. அது இப்போது ஏராளமாக பரவி இருக்கிறது. அது யாரையும் விட்டுவிடவில்லை. விவசாய அமைச்சர் தோப்பிலேகூட அந்த வியாதி இருப்பதாக சொல்கிறார்கள். மிகக் கடுமையாக பரவிக்கொண்டிருக்கிறது. இதற்கு என்ன நிவாரணம் என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் கேட்ட அளவிலே எப்படி எய்ட்ஸ் நோய்க்கு ஆங்கிலம் வைத்தியம் போய் இயற்கை வைத்தியம் வந்ததோ அதைப்போல இப்போது கேரளாவிலே வேப்பெண்ணெய், சோப்பு ஆயில், வெள்ளைப் பூண்டு — நம்முடைய அமைச்சர் அவர்கள் சந்தோஷப்படுவார்கள். ஏனென்றால் இயற்கை வைத்தியத்திலே அவர்களுக்கு நம்பிக்கையுண்டு. வேப்பெண்ணெய், சோப்பு ஆயில், வெள்ளைப் பூண்டு — போன்றவற்றையெல்லாம் கலந்து, அரசாங்கமே முழுவதுமாக அங்கே அந்தத் தென்னை மரங்களுக்கு அந்தக் கலவையைப் பாய்ச்சி அந்த நோய் தீருவதாகச் சொல்கிறார்கள். நேற்றைக்குக்கூட அமைச்சரிடம் பேசும்போது சொன்னேன். கண்டிப்பாக அதைப் பரிட்சார்த்தமாகச் செய்து பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து அந்தப் பாணியை . . . .

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே முதலில் கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், கரூர் ஆகிய மாவட்டங்களில் தென்னை, ஏரியோஃபைட் சிலந்தியால் பாதிக்கப்பட்டிருந்தது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும் இது பரவியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மைதான். அதை அரசும் அறியும். தமிழகத்தில் தென்னை சுமார் 3 இலட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டு, சுமார் 6 கோடி தென்னை மரங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் சிலந்திப் பூச்சித் தாக்குதலால் தென்னை பாதிக்கப்பட்டுள்ளது என்று துறைக்குத் தகவல் வந்ததும், இந்தப் பூச்சித் தாக்குதலை அறிந்தவுடன், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அலுவலர்களும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் ஏரியோஃபைட் சிலந்தியைக் கட்டுப்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டனர். தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழகம் உடனே 3 இடங்களில் பரிசோதனையை மேற்கொண்டு பாலித்தீன் பைகளில் மோனோ குரோட்டாபஸ் 15 மில்லி லிட்டர் மருந்தை 15 மில்லி லிட்டர் தண்ணீருடன் கலந்து 45 நாட்கள் இடைவெளியில் இருமுறை வேர் மூலம் செலுத்தினால் 60 சதவீதம் இந்தச் சிலந்தியைக் கட்டுப்படுத்தலாம் என்று பல்கலைக்கழகத்தின் மூலம் ஆய்வு நடத்தி அதைச் செயல்படுத்தினோம். ஆனால், அதிலே அந்த அளவிற்கு வெற்றிகாண முடியவில்லை. வேர் மூலம் ஒரு முறை மருந்து செலுத்த மருந்துச் செலவு இதற்கு ரூபாய் 3.60 காசும், பாலித்தீன் பை, ஆட்கள் கூலி ஆகியவற்றிற்கு ஒரு மரத்திற்கு ஒரு தடவை மருந்து செலுத்த செலவு ரூபாய் 10.6 காசுகள் தேவைப்படும் என்றும் 45 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை செலுத்த செலவு ரூபாய் ஒரு மரத்திற்கு 21.2 காசுகள் செலவாகும் எனவும் கணக்கிடப்பட்டது. கொச்சி, தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு, பாதிக்கப்பட்ட மரங்களுக்கு நிவாரணம் வழங்க, 2.53 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டுக் கடிதம் எழுதினோம். ஆனால், கொச்சி, தென்னை வளர்ச்சி வாரியம் ரூபாய் 25 இலட்சம் மட்டுமே நிதியுதவி வழங்கியது. அந்தத் தொகை கீழ்க்கண்டவாறு பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு, மரம் ஒன்றுக்கு ரூபாய் 3 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. கோயம்புத்தூருக்கு 14.90 இலட்சம்; ஈரோட்டிற்கு 3 இலட்சம்; திண்டுக்கல்லுக்கு 2.25 இலட்சம்; தேனிக்கு 1 இலட்சம்; விருதுநகருக்கு 3.80 இலட்சம்; கரூருக்கு 5,000; மொத்தம் 25 இலட்சம் ரூபாய் முதலிலே பிரித்து எங்கெங்கு அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் கொடுக்கப்பட்டது. இதனால் மொத்தம் 8 இலட்சத்து 33 ஆயிரத்து 333 பாதிக்கப்பட்ட மரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டது. ஏரியோஃபைட் சிலந்தித் தாக்குதல் இந்த ஆண்டும் தொடர்ந்து தாக்குவதால், கொச்சி, தென்னை வளர்ச்சி வாரியம், தென்னை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 82.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளித்தது. அதையும், பாதிப்படைந்த தென்னை மரங்களை அகற்றிட மரம் ஒன்றுக்கு ரூபாய் 200 என்ற அளவில் மொத்தம் 1500 மரங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய தென்னைமரக் கன்றுகளை நடவு செய்ய மரம் ஒன்றுக்கு உதவி என்ற அடிப்படையில் 1500 மரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

உர விநியோகம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்து வழங்க அதற்கும் மொத்தம் 82 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. இதுவல்லாமல் பல்கலைக்கழகத்திலே இதற்கென்று பூச்சியியல் துறையின் மூலம் ஒரு குழு அமைத்து தொடர்ந்து ஆராய்ச்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



*பிற்பகல் 1-10*

மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்வதைப்போல வேப்பெண்ணெய் அல்லது வேறு நாட்டு வைத்திய முறையிலே, கேரளாவிலே செய்வது என்பது ஆதாரபூர்வமாக இல்லை. நேற்று அவர் சொன்னஉடன் அப்படி ஆதாரபூர்வமாக ஏதாவது அந்த அரசோடு தொடர்பு கொண்டு பல்கலைக்கழகம் தகவலைப் பெற்றிருக்கிறதா, அரசுக்குத் தகவல் இருக்கிறதா என்று அறிய நான் முயற்சி செய்தேன். ஆதாரபூர்வமான தகவல் அல்ல, சொல்வதைத்தான் கேட்டு மாண்புமிகு உறுப்பினரும் இங்கே சொல்கிறார். ஆகவே ஆதாரபூர்வமாக இல்லாத வதந்தியிலே வரக்கூடிய வார்த்தைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்ற முயற்சியிலே ஈடுபடக்கூடாது. பல்கலைக்கழகம் இப்போது தொடர்ந்து ஆராய்ச்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அதனுடைய முடிவை விரைவிலே கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். கிடைத்தவுடன் அதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஒரு விளக்கத்தை இங்கே தந்தார்கள். அதிலே தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களில் இதுபோன்ற சிலந்தி நோயால் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டம், வேலூர் மாவட்டத்தில்கூட குடியாத்தம், வாணியம்பாடி, ஆம்பூர், ஏன் எங்களுடைய தோப்புகளெல்லாம்கூட இந்தச் சிலந்தி நோயின் பாதிப்புக்கு ஆளாகி மரங்கள் எல்லாம் உலர்ந்து கொண்டிருக்கின்றன. தேங்காய்கள் எல்லாம் அப்படியே ஓட்டையாகிக் கீழே விழுந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் ஒரு பகுதிக்கு மட்டும் நடவடிக்கை எடுத்தால், மற்ற பகுதிகள் என்ன ஆவது? இதிலே இப்படியே நீங்கள் பல்கலைக்கழகத்தோடு பேசி முடித்து ஆய்வு தெரிந்து வருவதற்குள் தோப்பே போய்விடும் போல இருக்கிறது. ஆகவே தென்னை மரங்களை எல்லாம் உயிரோடு காப்பாற்றுவதற்கு உடனடியாக என்ன நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுக்க இருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்போதுமே மிகைப்படுத்தித்தான் சொல்வார். தென்னை மரம் ஒன்றும் சாகவில்லை; உலரவில்லை. அதாவது பாளை விட்டவுடனே, பாளை வெடிக்கும்போது அந்தக் குரும்பைக்குள்ளே இந்தப் பூச்சித் தாக்குதல் ஏற்பட்டு, அந்தக் குரும்பை தாக்கப்பட்டு பிறகு காயினுடைய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

அதுதானே தவிர, அதிலே "தென்னை மரமே செத்துப் போய்விடுகிறது. அந்தமாதிரி அபாயம் இருக்கிறது" என்று பூதாகரமான வார்த்தையை உண்மைக்கு மாறாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தென்னை மரம் நன்றாகத்தான் இருக்கிறது. இது ஏதோ அவர்களுடைய பகுதியிலே, மாவட்டத்திலே மட்டும் என்பதாக அவர்கள் சொன்னார்கள். அவர் தனது தோட்டத்திலேயும் தாக்கியிருப்பதாகச் சொன்னார். என் தோட்டத்திலே கூடத்தான் தாக்கியிருக்கிறது. எல்லா இடத்திலும் தாக்கியிருக்கிறது. அதிலே ஒன்றும் வித்தியாசம் கிடையாது. சிலந்திப் பூச்சிக்குப் பாகுபாடு கிடையாது. எல்லா இடங்களிலும் இருக்கிறது. அதனாலே, முதலிலே இந்தக் குரும்பையிலே தாக்கக்கூடிய, இந்தக் காயைத் தாக்கக்கூடிய, இந்தச் சிலந்தியைக் கட்டுப்படுத்துவதற்கு இப்போது நாம் அந்த முயற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். மரத்திற்கு ஒன்றும் பாதிப்பு ஏற்படாது.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் நம்முடைய ஆராய்ச்சியாளர்கள் நீண்ட நெடு நாட்களாக அதை ஆராய்ச்சி செய்து கொண்டேயிருந்தால் இருக்கிற தென்னை மரங்கள் முழுவதும் பாழ்பட்டு விடும். இப்போது தேங்காய் விலை மிக, மிகக் குறைந்து இருக்கிறது. விவசாயிகள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை நாங்கள் சுட்டிக்காட்டினோம். அமைச்சர் அவர்கள் அவருடைய தோப்பே இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று என்னிடம் சொன்னார். ஆகவே, யார் தோப்பு எப்படிப் பாதிக்கப்பட்டாலும், தமிழகம் முழுவதும் இது இருப்பதால் விரைந்து நிவாரணம் தருவதற்கு வேறு எந்த நாட்டிலிருந்தாவது இதற்குரிய வழியைப் புரிந்துகொண்டு செய்ய வேண்டும் என்பதுதான் விவசாயிகளுடைய கோரிக்கை; எங்களுடைய கோரிக்கை. எனவே அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னீர்கள். இதுவரையிலும் அதை நீங்கள் கொடுக்கவில்லை என்பதோடு மட்டுமல்லாமல் இப்போது தனியார் கரும்பு ஆலைகளிலே, கொடுக்க வேண்டிய பணத்தையே கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். குறைத்துக் கொடுக்கிறார்கள். பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அது குறித்து தனியார் ஆலைகளைக் கேட்கும்போது அவர்கள் சொல்வது லெவி சர்க்கரைக்கு அரசாங்கம் பணம் கொடுப்பதில்லை, நாங்கள் ஏராளமான வட்டி கொடுத்து வாங்கி ஸ்டாக் வைத்திருக்கிறோம், ஆகவே



விவசாயிகளுக்கு எங்களால் பணம் கொடுக்கமுடியவில்லை என்று சொல்கிறார்கள். நான் சொல்வது, மற்ற வியாபாரிகள் எல்லாம் ஏதாவது ஒரு வழியில் பணம் திரட்டமுடியும். ஆனால் விவசாயிகள் எப்படி அதைத் திரட்டமுடியும்? ஆகவே தயவுசெய்து அந்தப் பணம் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை யாராக இருந்தாலும் கடுமையாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) குறுக்கே நிறைய பேசிவிட்டார்கள். கொஞ்சம் எனக்கு time கொடுங்கள்.

மூடிய மில்களைத் திறப்பதற்கு இந்த பட்ஜெட்டிலே ஒன்றுமில்லை. நிறைய தொழில்கள் வருகின்றன என்று சொல்கிறோம். அதிலேகூட நாம் ஏமாந்துவிட்டோம். வெளிநாட்டிலே இருந்து வந்திருக்கிற அமெரிக்க அதிபரை நம்முடைய ஊருக்கு அழைத்திருக்க வேண்டும். நாம் ஒன்றும் அவர்களைக் காட்டிலும் குறைந்தவர்கள் அல்ல, தொழில் விற்பன்னர்கள் நிறைந்த நம்முடைய மாநிலத்திற்கு அவர்கள் வந்திருக்க வேண்டும் என்பது எங்களைப் போன்ற தொழிலதிபர்களின் ஆதங்கம். ஆனாலும் பரவாயில்லை, மூடிய மில்களைத் திறப்பதற்கு நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலே எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. அவை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும்.

அடுத்து நல்ல திட்டங்கள்தான் வருமுன் காப்பது, உழவர் சந்தை, மற்றவை எல்லாம். கவர்ச்சிகரமாக இருக்கிறது. இந்தச் சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் 6000 கால்நடைகள் அந்தப் பகுதியில் வந்தன. அமைச்சர் வந்திருந்தார். (குறுக்கீடு) நான்கூட மகிழ்ந்துபோய் மேடையிலேயே பலவாறு பாராட்டினேன். ஆனால், திரும்பி வரும்போது அங்கே இருந்த விவசாயிகளை நிறுத்திக் கேட்டால், பாதிப்பேருக்கு மருந்து இல்லை என்று சொன்னார்கள். திட்டம் அரசாங்கம் தீட்டுகிறது. அமைச்சர் போய் அனைத்திற்கும் ஊசி போட்டுக்கொண்டிருக்க முடியாது. ஆனால் அதிகாரிகள் செய்கின்ற அந்தத் தவறான காரியங்களினால் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. அங்கே வந்திருந்த அந்த விவசாயிகள் எல்லாம் மிகவும் வேதனைப்பட்டார்கள். மருந்து கிடைக்கவில்லை. திட்டங்களைக் கொடுத்த உடனே எப்படியாவது அந்த Target-ஐ நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிற அதிகாரிகள் இருக்கிறார்களே தவிர அதை உளப்பூர்வமாக, ஆத்மார்த்தமாகச் செய்யாத காரணத்தால் இதுபோன்ற திட்டங்கள் எல்லாம் கொஞ்சம் பாழ்பட்டுப் போய்விடுகின்றன. இன்னும் கணினியைப் பற்றிச் சொன்னார்கள். கணினியைப் பற்றி எனக்கு ஒரு பெரிய கடிதம் எல்லாம் எழுதியிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலே கொடுக்கின்ற கணினி ...

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் குறிப்பிடுகின்றபோது மருந்துகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அன்றையதினம் கோவை மாவட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் ஏறக்குறைய 6 ஆயிரம் கால்நடைகளுக்கு மேல் வந்திருந்தன. ஒரு கால்நடை சிறப்பு முகாமுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்று ஏறக்குறைய 2½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அன்றையதினம் எதிர்பாராத விதமாக 6 ஆயிரம் கால்நடைகள் வந்துவிட்ட காரணத்தால் அப்படி இருந்திருக்கலாம். இனிமேல் அப்படி நடக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** அமைச்சர் அவர்கள் துணிந்து ஏற்றுக்கொண்டு பதில் சொன்னதற்கு நன்றி. ஆகவே, இதுபோன்ற தவறுகள் இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்வதுதான் அரசினுடைய கடமை.

இப்போது கல்நார் வீடுகள் எல்லாம் கட்டுகிறோம் என்று சொன்னார்கள். சென்ற பதினைந்து நாட்களுக்கு முன்னால் பேப்பரிலே பார்த்தேன். இங்கே திரிசூலத்திலே கல்நார் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். நம்மிடம் Engineering Skills இல்லையென்று சொல்ல முடியாது. அருமையான இன்ஜினியர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். ஆனால் அவசரக் கோலத்திலே கட்டியதன் காரணமாகவோ என்னவோ அந்த வீடுகள் எல்லாம் அப்படியே முழுமையாக மண்ணிலே புதைந்துப் போய்விட்டதாக 'தினமணி' பத்திரிகையிலே பார்த்தேன். ஆகவே, அரசு போடுகின்ற திட்டங்கள் எல்லாம் சரியான முறையில் நடைபெற வேண்டும் என்று சொன்னால் அதிகாரிகள் எல்லாம் நன்கு செயல்படவேண்டும். அதிகாரிகளுக்கெல்லாம் இப்போது குறைந்த சம்பளம் இல்லை. நிறைய சம்பளம் கொடுக்கிறோம். Sixty per cent of the income சம்பளத்திற்கே போய்விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அவற்றை எல்லாம் அதிகாரிகள் கருதி பணி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே இரண்டு, மூன்று விஷயத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஏற்கெனவே, அது சொல்லப்பட்டு அநேகமாக நடைமுறைப்படுத்த அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைத்துச் சொல்கிறேன். ஆஸ்பத்திரி ஒன்று பொங்கலூரிலே வேண்டும் என்று கேட்டேன். ஆஸ்பத்திரி புதியதாகக்



கட்டியிருக்கிறோம். அதற்கு 10 படுக்கைகள் வேண்டும். (குறுக்கீடு) கேட்டதெல்லாம் வந்தது. 10 படுக்கைகள் கொடுத்தால் ரொம்ப நன்றியுடையவனாக இருப்பேன்.

அதேபோல் நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்களிடம் குளிர்பதனக் கிடங்கு வேண்டும் என்று கேட்டேன். அதை ஒவ்வொரு வருடமும் கொடுக்கிறேன், கொடுக்கிறேன் என்று சொல்கிறீர்கள். வெங்காயம் நிறைய விளைகிறது. அது வீணாகிப் போய்விடுகிறது. ஆகவே, குளிர்பதன கிடங்கு ஒன்று வேண்டும். ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும். இன்னும் உள்ள கோரிக்கைகளை எல்லாம் அடுத்த முறை பேசும்போது சொல்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

நேற்றைக்கு இங்கே சக சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அழகான கதையைச் சொன்னார். ஏரோபிளேன் கதை. கேட்பதற்கு, அது ஒரு வளமான கற்பனைதான். அதிலே ஒன்றை மட்டும் சொல்கிறேன். கதர்ச் சட்டைக்காரன் அவசரமாக ஹோல்டு-ஆல்-ஐப் பிடித்துக்கொண்டு குதித்துவிட்டான் என்று சொன்னார். அது ஹோல்டு-ஆல்-ஆக இருந்தாலும் சரி, 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்'. அந்தக் கதர்ச் சட்டைக்காரன் அதையே குடையாக விரித்து பாராசூட் மாதிரி பிரித்து தப்பித்து விடுவான். காரணம், இந்த நாட்டுக்கு கத்தியின்றி ரத்தமின்றி விடுதலை வாங்கித் தந்தவன் அவன். ஆனால், மஞ்சள் துண்டு அணிந்தவர்தான் பக்கத்திலே இருப்பவன் மக்கள் பிரதிநிதி என்று நினைத்து ஏமாந்து மக்கள் விரோதியோடு சேர்ந்து விட்டாரோ! என்பதுதான் எங்களுடைய வருத்தமெல்லாம். மஞ்சள் துண்டுக்காரர், மக்கள் பிரதிநிதி என்று பக்கத்திலே இருந்தவரை நம்பியதன் காரணமாக ஏமாந்துவிடுவாரே, அவரை முருகன், அங்கே இருக்கின்ற மற்ற கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறிக்கொண்டு, காங்கிரஸ்காரன் கதர்ச்சட்டைக்காரன் என்றைக்கும் ஏமாந்தவன் அல்ல என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் கத்தியின்றி ரத்தமின்றிக் கிடைக்கவில்லை. இலட்சக்கணக்கான மக்கள் இறந்திருக்கிறார்கள். ரொம்ப தியாகம் பண்ணியிருக்கிறார்கள். சும்மாவா கிடைத்தது இந்தச்சுதந்திரம்? எத்தனை எத்தனை தடியடியைத் தாங்கினர்? எத்தனை எத்தனை பேர் செக்கிழுத்து வாடினர்? தூக்குமேடை ஏறிய காலங்கள் எத்தனை? சும்மா கிடைக்கவில்லை. சுதந்திரம் ரொம்ப கஷ்டப்பட்டுத்தான் கிடைத்தது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**திரு. ப. மோகன் கந்தசாமி:** அதிலேகூட கதர்ச் சட்டைக்காரன்தான் செத்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-3-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-19 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

107. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து-VII) துறையின் 1-6-1999 ஆம் நாளிட்ட 770 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

108. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் துறையின் 8-6-1999 ஆம் நாளிட்ட கடித எண். 32156/போக்குவரத்து-VII/99-2-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

109. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பொதுச் சாலைகளின் வகைப்பாடுகள்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 27-9-1999 ஆம் நாளிட்ட 200 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



110. தமிழ்நாடு மெக்னீசியம் அண்டு மெரைன் கெமிகல்ஸ் லிமிடெட்டின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. (1998-99) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

111. தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1998-99) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

112. மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1998-99) [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

113. வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1998-99). [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

114. திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1996-97, 1997-98 மற்றும் 1998-99) [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

115. தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. 1998-99) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

116. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1998-99). [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

37. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (1998-99) (தமிழ், ஆங்கிலம்)

38. 2000-2001 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

39. 2000-2001 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானிய கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

40. 1999-2000 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானிய கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

41. 1999-2000 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானிய கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

42. 1999-2000 ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

❁❁❁❁❁

222774
சென்னை-600003

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.